

# பொற்காசுத் தோட்டம்

## இந்திரா செளந்தர்ராஜன்



## 1

கி.பி.1761. மே மாதத்தில் ஒரு நாள்...

மேற்குத் தொடர்ச்சி மலைக்கூட்டத்தின் நீண்ட நெடிய வரிசையில் குற்றாலத்துக்கு முன்பாக ஒரு இருபது முப்பது மைல் தொலைவில் இருக்கிறது நெற்கட்டும் செவல்.

...கும், நாரையும் குறுக்கும் நெடுக்கும் பறந்தபடி இருக்கும். சாலையோரத்து புளியமரங்களில் செம்போத்துகள் கிளிக்கூட்டத்தை அமரவிடாதபடி மிரட்டிக் கொண்டிருக்கும்.

மிக மெல்லிய பாலிதீன் தாளை ஆகாசமளவு விரித்த மாதிரி குற்றாலச் சாரலால் உருவான பனித்துகள்கள் ஊர்முழுக்க மேவிக்கிடக்கும்.

அங்கங்கே கப்பிச்சாலை மேல் எருமைபூட்டிய வேப்பங்கட்டை வண்டிகளும், ரேக்ளாக்களும் வாசுதேவ நல்லூருக்கும், பனையூருக்கும், தென்காசிக்கும் வந்து போய்க் கொண்டிருக்கும்.

செங்கானின் கொல்லப்பட்டறையிலும் இரவு, பகல் என்கிற பேதமின்றி ஊது நெருப்பு எரிய, குதிரைக்கும் மாட்டுக்குமான லாடங்களை செங்கான் தட்டிய வண்ணமிருப்பான்.

கலரின் வடக்குப்பாகத்தில் இருக்கிறது சிவன் குளம். அதில் கல்லால் அடித்த படித்துறைப் பாகத்தில் ஊர் குளித்தபடி இருக்கும். எதிர்பாகத்தில் விடலைக் கூட்டம் குரவை மீனுக்காக தூண்டில் போட்டபடி அமர்ந்திருப்பார்கள். பஜாரில் நெல் கொள்முதல் பாகக் கடைகளும், குதிரை வியாபாரமும் சூடுபறக்கும்.

பஜார் மையத்தில் இருக்கிறது தேவர் சாவடி. இதனுள் கள்ளுப்பானையிலிருந்து உஷ்ணமான மிளகுத் தண்ணீர் வரை சகலமும் கிடைக்கும்.

நெற்கட்டும் செவலின் ராஜதானிகளில் இருந்து அண்டை அயல் வரை அவ்வளவு பேரும் சாவடிக்குள் வந்து கள்ளையும், மிளகுத் தண்ணீரையும் போட்டி போட்டுக்கொண்டு குடிப்பார்கள்.

அதில் அருகாமை இராயப்பன் பேட்டை சிலம்பாட்ட கூட்டம் விதிவிலக்காக இஞ்சியையும் மல்லியையும் தட்டிப்போட்டு பனைவெல்லம் கலந்து குடிப்பார்கள். குடித்துவிட்டு சாவடி மையத்தில் உள்ள வெட்ட வெளியில் கழி எடுத்து சுழற்றி அடித்து அசலூர்க்காரர்களை வம்புக்கிழுப்பார்கள். நெல்லைப் பட்டினத்தவர்கள் என்றால் வம்பு கூடுதலாகவே இருக்கும்.

நடுவில் பாளையத்து படைவீரர்கள் ஆயிரம் காரணங்களுக்காக அந்தப் பக்கமாய் குதிரை மேல் வருவார்கள். அப்படி வருகையில் எல்லாம் நின்று போகும்.

படைவீரர்கள் எல்லோருக்குமே சாணை பிடித்த மாதிரி கூர்மையான கண்ணும், மலைக் கம்பளிப்பூச்சி கணக்காய் மீசையும் கொண்டிருப்பார்கள்.

நெற்றியில் குங்குமமும், விபூதியும் மையமாக நிச்சயம் இருக்கும். தலைப்பாகை மஞ்சள் துணியால் ஆனது. அதில் நெற்கட்டும் செவல் பாளையத்து அடையாளமான இரட்டை வாள் சின்ன இலச்சினை! மணிக்கட்டில் கருப்பு எருமையின் பிருஷ்ட பாகத்து தோல் கச்சு. காலில் நாவல் மரத்து கட்டையால் ஊடகமாய் ஆன தோல் செருப்பு, இடுப்பில் வீரவரைக் கச்சம் என்னும் முழங்கால் மீறாத கச்சக்கட்டு. அதை அவிழாதபடி அடக்கிக் கட்டியிருக்கும் தோல் வண்ணப் பிணைப்பூட்டு (பெல்ட்).

வீரர் லட்சணம் இப்படி என்றால் ஊரின் பெண்டிர் லட்சணம் கண்ணைப் பறிக்கும்.

மறவர் பெண்டிர்கள் அகண்ட கரை சீலைகளைத்தான் கட்டுவார்கள். இதற்காக திருபுவனத்து நெசவுச் சாவடியில் இருந்து ஏராளமாய் புடவைகள் செவலுக்கு அங்காடி விற்பனைக்காக வந்திறங்கும்.

அவைகளை அள்ளுக்கொசுவம் பாணியில் உடுத்தி மார்பு பாகத்தில் சிலர் ரவிக்கை தரித்திருக்க, சிலர் தரித்திராதபடியும் இருப்பார்கள்.

சமன மார்பையே எங்கும் பார்க்க முடியாது. விளாம்பழத்து முட்டாட்டம் முன்பாகம் குலுங்க நடப்பார்கள்.

… தங்களை நோட்டமிடும் வாலிப கண்களை நோண்டி விடுவது போல பார்ப்பதும் உண்டு. சிலரோ அதை ரசித்தபடி நடப்பார்கள்.

ஆனால் எங்கும் வரம்பு மீறல்கள் கிடையாது.

மீறினால் என்ன நடக்கும் என்று ஊருக்கே தெரியும். நெற்கட்டும் செவல் அரண்மனையின் நைருகபாகத்தில் தண்டனை மண்டபம் என்றே ஒன்று உண்டு. அங்கே விருமாண்டி எனும் தச்சனும், கொசப்பாண்டி என்னும் கொல்லனும், வல்லமுனி எனும் சக்கிலியனும், கண்டத்தேவன் என்னும் தலைவாங்கியும் இருப்பார்கள்.

இவர்களில் யாராவது ஒருவர் வரம்புமீறிய மனிதனின் ஐந்து விரல்களையோ, இல்லை மணிக்கட்டு வரையிலோ வெட்டி எடுத்து அதை தாமிரத்தட்டில் வைத்து காட்சிக்கும் வைத்து விடுவார்கள்.

ஆகக்கூடி கலகலப்பும் அதில் கட்டுப்பாடும் மிகுந்ததுதான் நெற்கட்டும் செவல் பாளையம். சதா குதிரைக்குளம்படியும், மத்தள சப்தமும், கழி சுழலும் ஓசையும் மிக்க பாளையம், இன்று அமைதிக் கோட்டமாக கிடக்கிறது.

ஊரில் எங்கும் ஜனநடமாட்டமில்லை. பாளைய வீரர்கள் மட்டும் குறுக்கும் நெடுக்கும் நடைபோட்டபடி உள்ளனர்.

சாவடிக்குள் இரண்டு பெரியவர்கள் அமைதியாக தங்களுக்குள் பேசியபடி உள்ளனர்.

“நவாபின் படை எதுவரை வந்திருக்கிறது என்று தெரியுமா?”

“நெல்லையைப் பிடித்துவிட்டதாம். ஜெக வீர பாண்டிய நாயக்கர் மண்டியிட்டு விட்டாராம்.”

“நமது பாளையத்தார் என்ன செய்வதாக இருக்கிறாராம்?”

“பணிந்து போவது என்பதுதான் அவரது அகராதியிலேயே இல்லாத ஒன்றாயிற்றே. அநேகமாக இப்பொழுது அரசவை மண்டபத்தில் ஆலோசனை நடந்து கொண்டிருக்கும். நிச்சயம் வீட்டுக்கு ஒருவர் இம்முறை படையில் சேரச் சொல்லி உத்தரவு வரும். பார்த்துக் கொண்டே இரு.”

சாவடிப் பெரியவர்களின் பேச்சு உண்மை தான்.

அதோ நெற்கட்டும் செவல் அரண்மனை வாசுதேவ நல்லூரைப் பார்த்தது போல இருக்கிறது.

சுட்டச் சுண்ணாம்பு, மலைப்பாறை, விளாம் பழ விழுது, ஆயிரக்கணக்கான வாத்துகளின் முட்டைக்கரு, ஆற்று மணல், நெல்லிச்சாறு என்று கலந்து கட்டப்பட்ட கோட்டை...

1755-ல் யுத்தத்தின்போது மாபூப்கானின் பீரங்கிகள் 12 குண்டுகளால் தாக்கியும் தகராத கோட்டையாயிற்றே...

அந்தக் கோட்டையின் மைய பாகம் சூரியக் கதிர்களால் விழுந்து உருவித் தோதாக பிரம்ம மண்டபத்தோடும் சுற்றுத் திறப்போடும் இருந்தது.

அந்த பிரம்ம மண்டபத்தில்தான் ஆலோசனைக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது.

மாவீரர் புலித்தேவர், புலித்தோல் ஆசனத்தில் ஒரு வீர யோகி போல அமர்ந்திருக்க, அவருக்கருகில் பஞ்சாங்கமும் கையுமாக கைலாசக் குருக்களும், தளபதி தங்கமாணிக்கமும் நின்றபடி இருந்தனர்.

இடப்பக்கமாக கஜானா காப்பாளர் குமர பிள்ளையும், வேல்மணித் தேவரும் அமர்ந்திருக்க, மூச்சிறைபட ஓடிவந்து நின்றான் கடிகைப் புரத்தான்.

“என்னடா...?”

“அரசே! பகைவர் கூட்டம் நெல்லையைக் கடந்துவிட்டது.”

"மொத்தமாக எத்தனை பேர்?"

"இருபதினாயிரமாம். இதில் நாற்பது பீரங்கிகளும் நாலாயிரம் தோட்டாத் தாக்கிகளும் (துப்பாக்கி) வேறு அடக்கம்."

"குதிரைப்படை வருகிறதா?"

"ஆமாம்... வாளோடும், வேலோடும், வில்லம்புப் பொறியோடும் முன்னூறுக்கும் மேல் வருகின்றனர். ராஜபுதனத்தவர்கள் வில்லாடுவதில் வல்லவர்களாமே! அவர்களும் அதில் அடக்கம்..."

"ஔரங்கன் வட்பாகத்தில் நம்மவர் ஒருவரைக்கூட விடவில்லை போலும்... பேடிகள். அவர்களும் இவன் எறியப்போகும் அற்பக் காசுக்காக படையில் சேர்ந்ததுதான் சகிக்க முடியாத செயல்."

"அவர்கள் பற்றி இப்பொழுது என்ன பேச்சு. எதிர்கொள்ளும் வழி பற்றி பேசுங்கள்."

"முரசு போடுங்கள். வீட்டுக்கு ஒருவர் கட்டாயம் வந்தாக வேண்டும். வெள்ளையனும், அந்த மொகலாயனும் கடந்த முறை ஓடியதைவிட அதிக தூரம் இந்தமுறை ஓட வேண்டும். நமது இளைஞர் படை அதை சாதித்தே தீர வேண்டும். அவர்களது சந்திப்பிற்கு தகுந்த சன்மானம் நிச்சயம் உண்டு. நிலமாக, பணமாக, பொன்னாக, பொருளாக, பட்டயமாக வசதிக்கேற்ப பாளையக்காரர் வழங்குவார் என்று முரசறைந்து சொல்லுங்கள். கஜானாவைச் சுற்றி காவல் பலமாக இருக்கட்டும்."

புலித்தேவர் வாசித்ததை ஒப்பிக்கிற மாதிரி பேசி நிறுத்தினார். குமரப்பிள்ளையும், வேல்மணித்தேவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அர்த்தம் மிகுந்த பார்வைக்கு புலித்தேவர் அதை தன் கூர்ந்த விழிகளால் கண்டு வினவுகிறார்.

"என்ன பிள்ளை... எதற்கிந்த பார்வை?"

"பார்வை... பார்வை..."

"வேல்மணித் தேவா... நீயாவது சொல்."

"சொல்கிறேன் பாளையத்தரசே... கஜானாவுக்கு காவல் பலமாய் இருக்கட்டும் என்கிறீர்களல்லவா?"

"ஆமாம்... அதற்கென்ன...?"

"எத்தனைதான் காவல் போட்டாலும் கஜானா மண்டபம் ஒன்றும் நமது அரண்மனை போல் உருக்குக் கோட்டையல்ல. அது சுண்ணபாகத்து கோட்டைதான்."

"அதற்கென்ன...?"

"இந்த முறை எதிரியின் குறி நமது அரண்மனை மீது இல்லை. கஜானா உள்ள அந்த சுண்ணபாகத்துக் கோட்டை மேல்தான்..."

"அப்படியானால் காவலைப் பலப்படுத்திக் கொள்ளலாமே..."

"அதைவிட விவேகமாக வேறுவழி பார்க்க வேண்டும்."

"வேறு வழியா?"

"ஆமாம்... தாங்கள் எங்கள் விருப்பத்திற்கு சம்மதித்தால் நாங்கள் கஜானாவை எப்பாடு பட்டாவது காப்பாற்றி விடுகிறோம்..."

"என்ன அது...?"

அவர்கள் இருவரும் புலித்தேவர் காதுகளில் எதையோ கிசுகிசுக்க, தேவர் முகத்தில் வியப்பும் திகைப்பும் பெருகியது.



## 2

வாசுதேவநல்லூர் பஸ் ஸ்டாண்ட்!

மூட்டை முடிச்சுகளுடன் அருள்மணியை இறக்கி விட்டுப் போகிறது தென்காசி போகும் பஸ் ஒன்று.

கொஞ்சம் கறுப்பு நிறம். ஆனால் நல்ல உயரம். எம்.ஏ., பி.எல்., என்று முடிந்த எல்லை படித்திருக்கிறான். நாத்திக சிந்தனை மிகுந்தவன். வரும் நவம்பரில் இருபத்தி ஒன்பதை கடக்கப் போகிறவன். இப்பொழுது நெற்கட்டும் செவல் நோக்கி வாசுதேவ நல்லூரைக் கடக்கிறான்.

ஒரு ஜோல்னாப்பை, ஒரு ஹோல்டான் பேக், ஒரு சூட்கேஸ் என்கிற சுமைகள் அவன் மேல்.

வாசுதேவ நல்லூர் நிறைய மாறிவிட்டிருக்கிறது.

முன்பெல்லாம் கோவில் உள்ள ஊர், தேரோடும் வீதி உள்ள ஊர் என்று மிக மதிக்கப்பட்ட ஊர்.

இப்பொழுதும் அப்படி மதிக்கப்பட்டாலும் நகர பாதிப்புகள் நிறைய... எல்லா வீட்டின் கூரை முதுகிலும் ஆன்ட்டனா கம்பம், கம்பம் மேல் காக்கை என்று தெரிகின்றன.

சாலை ஓரமாக நரகல்களை நிறைய பார்க்க முடிகிறது. இன்டர்நெட் யுகத்தை நோக்கி ஒரு புறம் மனிதக்கூட்டம் நகர்ந்துவிட்டது. மறுபுறத்திலோ இன்னும் சாலை ஓரத்தில் இப்படி அசிங்கங்கள்.

வீசும் காற்றிலும் அத்தனை குளுமையில்லை.

நகரச்சந்தடி, வாகனப் பெருக்கம், பெட்ரோல் புகை என்று தென்மேற்குத் தொடர்பு மலைச் சரகமே மாசுபட்டுக் கிடக்கிறது.

குற்றாலமும் பழைய மாதிரி இல்லை. முன்பெல்லாம் சீராக அருவிப்பெருக்கு இருக்கும். வெய்யில் காலத்தில்கூட தேனருவியும், புலியருவியும் ஏமாற்றாது. இன்று சீசனில்கூட ஏமாற்றுகிறது. அந்த திரிகூட மலை முழுக்க நிறைய சித்த சன்னியாசிகள், வீட்டை விட்டு ஓடிவந்து விட்ட ஏகாந்திகள் திரிந்தபடி இருப்பார்கள். இப்பொழுது அவர்களுக்கு பதிலாக குரங்குகள்தான் பெருத்துவிட்டன.

காலம் கொஞ்சம் கொஞ்சமாய் இயற்கையை, அதன் பசுமையை, அதன் உற்சாகத்தை உறிஞ்சிக் குடித்துவிட்டது. நினைக்க நினைக்க கசப்பாய் இருக்கிறது.

இருந்தாலும் அருள்மணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

பொதுவில் நாத்திகர்களுக்கு மனோ தைரியம் அதிகம் இருக்கும். சமூகப் பிரக்ஞை. மனிதாபிமானம் இதெல்லாமும்கூட அதிகமிருக்கும். அருள்மணியும் விதிவிலக்கில்லை.

ஊரைப்பார்த்து பலமாக கவலை கொண்டபடி நடக்கிறான்.

கிட்டத்தட்ட ஒரு வருடம் முன் வந்திருந்தான். திரும்ப இப்பொழுதுதான் வருகிறான். சொந்த ஊர், பிறந்து வளர்ந்து ஓடியாடித் திரிந்த ஊர்.

சைக்கிளிலேயே குற்றாலம் போய் கொட்டமடித்துத் திரும்பிய நாட்கள் உண்டு.

தலையணை! என்று மலைச்சாரலில் குற்றாலம் போல் இன்னொரு அருவி உண்டு. இதில் விழும் தண்ணீர் பொங்கி எழுவதைப் பார்க்க தலையணை போல் இருக்கும். அந்த அருவியிலும் மூழ்கிக் குடித்து சாகசம் செய்த நாட்கள் உண்டு.

இந்த மாதிரி அருவிகளின் தண்ணீரால்தான் வாசுதேவ நல்லூர் நெல்லும் கரும்புமாக கிடந்தது. தோகை தோகையாய் கரும்பைப் பார்க்க ஆசை ஆசையாக இருக்கும். நல்ல பாம்புகள் சாதாரணமாக வரப்புகளில் நெளிந்து கொண்டிருக்கும்.

கரும்பு வயலில் பாம்பு கிடந்தால் கரும்பு நல்ல ஊட்டம் கண்டிருக்கிறது என்பது அனுபவப் பட்ட விவசாயிகள் அபிப்பிராயம்.

இதனால் பார்த்துப் போகச் சொல்வார்கள் காலுக்கு கம்பளி சுற்றிக் கொண்டு காட்டில் அறுவடைக்கு இறங்குவார்கள்.

இப்பொழுது அந்த வயலெல்லாம் வெடித்துக் களையிழந்து கிடக்கிறது. பார்க்க வயிற்றெரிச்சலாக இருக்கிறது.

அருள்மணியின் வயிற்றெரிச்சலை முடிவுக்குக் கொண்டு வருகிற மாதிரி, அவன் வீடும் வந்துவிடுகிறது.

நெற்காட்டும் செவலுக்குப் போகும் மண்சாலையை எட்டிக் கிழக்குப் பார்த்து அமைந்த வீடு. புலித்தேவன் மனை என்று வீட்டுக்கு அழகாக தமிழ்ப்பெயர்.

கடப்பைக்கல்லை நிறையப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட தரையும், சுவர்களும் சத சில்லிட்டுக் கிடக்கும். அமர்ந்தால் படுத்தால் ஆஹா என்று இருக்கும்.

அப்படிப்பட்ட புலித்தேவன் மனைக்குள் நுழைகிறான்.

"எலே அருளு... வாலே வா... வா... வா..."

வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்து வந் கட்டியணைத்து வரவேற்கிறாள் அப்பத்த குருணிக்கிழவி, காது கொள்ளாத தண்டட்டி கழுத்து கொள்ளாத பாம்படம், துண்ணூற்று பையாக இழுபட்டு தொங்கும் சுருக்கம் தட்டி முலைகள், வெள்ளைப்புடவை சுற்றிக் கிடக்கு பிருஷ்டபாகம் பெருத்த கீழ்பாகம்.

எண்பது கடந்தும் தளராத பலம்மிக் பார்வைப் பேச்சு...

குருணிக்கிழவியைத் தொடர்ந்து வீடே திமி எழுந்து வருகிறது.

"அருளு... அருளு..." என்று பாய்ந் வருகின்றனர். தங்கைகள் வாசுகி, வளர்மதி



அப்பா முத்துராமலிங்கம், அம்மா சீனியம்மாளும், தம்பி அன்பழகனும் இப்பொழுது அவனைச் சுற்றி...

"என்னவே இப்படி திடுதிப்புனு..."

"திடுதிப்புன்னுதான் ஆத்தா... ஒரு மாசமா திட்டம் போட்டு வருச லீவு மொத்தத்தையும் சேர்த்து எடுத்துக்கிட்டு வந்திருக்கேன். இப்படி வந்தாதானே உங்களுக்கு ஷாக்கா இருக்கும்."

"போலே... முன்கூட்டி தெரிஞ்சிருந்தா இட்லி பணியாரமெல்லாம் பண்ணி வெச்சிருப்பேன்ல..."

"ஏன் இனிமேட்டு பண்ணினா வேண்டாங்குதா?"

"சரி... சரி... எப்படி இருக்குது சென்னை..."

"தூத்தேறிக் கழுத... துப்புரவா பிடிக்கலை வாசுகி. ஒரே புழுதி, ஒரே சத்தம், ஒரு இடத்துல இருந்து இன்னொரு இடம் போறதுக்குள்ள டிராபிக்ல படுற பாடு கொஞ்ச நஞ்சமில்ல."

"ஏண்டா உன் உத்யோகத்த மாத்திகிட்டு இந்த பக்கம் வரமுடியாதா?"

"இந்தப் பக்கமாவா...? வரலாம். திண்ணவேலி பக்கமா வரலாம். இங்கிட்டு சாத்யம் இல்ல. இங்க என்ன இருக்கு தோண்டிப் பார்க்க...?"

"தோண்டிப் பார்க்கவா?"

"ஆமா... தோண்டறது தொழாவறது, அள்றது, கொட்றது இதானே எங்க ஜோலி...?"

அருள்மணி தன் வேலை.பற்றி ஜாலியாக சொன்னபடி சூட்கேஸை திறந்து வாங்கிவந்த பொருட்களை ஒன்றன்பின் ஒன்றாக எடுத்தான்.

குருணிக்கிழவி மோவாயில் கை வைத்து அவனை பீறாய்கிற மாதிரி பார்த்தாள்.

"என்ன கிழவி பாக்கே? புடி உனக்கு சீலை..."

"அது கெடக்கு அப்படி வை. ஆமா தோண்டறது, தொழாவறதுன்னியே... உனக்கு

எதுக்குடா வெட்டியான் வேலை. நீ ஏதோ பெரிய ஆபீசரு... ஆயிரம் பத்தாயிரம் சம்பளம்னாங்க...''

கிழவியின் சந்தேகம் அவனை பரிகாசத்தோடு சிரிக்கச் செய்கிறது.

''ஆபீசருன்னா தோண்டக் கூடாதா...? வெள்ளையும் சொள்ளையுமா அழுக்கு படாமத்தான் இருக்கோமா?''

''என்ன சோலி... அதச் சொல்லுடா...''

''ஐயோ கிழவி... அண்ணன் ஆபீசர்தான். ஆர்க்கியாலஜிகல் டிபார்ட்மெண்ட்டுன்னு இங்கிலீசுல சொல்வாங்க. தமிழ்ல தொல்பொருள் இலாகாம்பாங்க...''

''என்ன கழுதப்பேர் இது...''

''உன் பேருக்கு இது நல்லாத்தான் இருக்கு. இப்ப தெரிஞ்சு என்னா பண்ணப்போறே? அண்ணே நீ போய் முதல்ல குளிச்சிட்டு வா. பொறவு பேசலாம்'' தங்கை வளர்மதி அண்ணன் அருள்மணியைப் பிடித்து தள்ளினாள்.



## 3

குமரப்பிள்ளையும், வேல்மணித்தேவரும் தீவிர யோசனையுடன் குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடி இருக்கின்றனர். பாளையத்து கஜானா உள்ள சுண்ண மண்டபத்து மாளிகையின் பிரகாரத் தரையே தேய்ந்து விடும்போல் தெரிகிறது.

நடுநடுவே பார்வை மாளிகை வாயிற் புரத்தையும் பார்க்கிறது. யாரையோ எதிர்பார்த்து காத்திருந்தபடி இந்த நடை நடக்கின்றனர். யாருக்காக?

ஓடி வருகிறான் கடிகைப்புரத்தான்.

''என்ன... ஜோசியர் ஊரில் இருக்கிறாரா?''

''இருக்கிறாரய்யா... வந்து கொண்டிருக்கிறார்.''

''உன்னுடன் குதிரையில் அழைத்து வருவதற்கென்ன?''

''அச்சப்பட்டார். அதனால்தான் விட்டு விட்டேன்.''

''பல்லக்கிலாவது ஏற்றியழைத்து வரலாமே''

''மறுத்துவிட்டார்.''

''சரி... சரி... ஓடிப்போய் சீக்கிரம் வரச்சொல் அவரை. இந்நேரம் அந்த நரிகளின் படை ஆலங்குடி கடந்திருக்கும்...''

வேல்மணித்தேவர் யோசிக்க, அதை கலைகிற மாதிரி ஜோசியர் வேதநாராயண பட்டர் உள்ளே நுழைகிறார்.

''நமஸ்காரம்... நமஸ்காரம்...''

''வாருங்கள் பட்டரே, வாருங்கள்... வாருங்கள்...''

''ஊரே பரபரப்பாக இருக்கிறது. இடையில் உங்கள் அழைப்பு வேறு. என்ன விஷயம்?''

''நமது பாளையத்தாரின் ஜாதகத்தைப் பார்த்தீர்களா? அவரது கிரக நிலைப்பாடு எப்படி உள்ளது?''

''எப்படிச் சொல்வேன்... அத்தனை சுத்த மில்லை...''

ஜோசியர் கவலையோடு சொல்லிக் கொண்டு தரையில் அரைச் சம்மணம் போட்டு அமர்ந்தார். அவரை ஒட்டி தேவரும், பிள்ளையும் அமர்ந்து கொண்டனர்.

''அப்படியானால் வரும் யுத்தம் நமக்கு சாதகமாக இருக்காதா?''

''ஆம்... அப்படித்தான் கட்டங்கள் கூறுகின்றன.''

''இது தற்காலிகச் சரிவுதானே?''

''நிச்சயமாக... பாளையக்காரர் இந்த யுத்தத்தில் நேரில் பங்கு பெறாமல் தப்பிவிட வேண்டும். பின் பெரும்படையுடன் உரிய காலத்தில் போரிட வந்தால் வெற்றி நிச்சயம்...''

''சரி, அதுவரை இந்த கஜானா செல்வத்தை விட்டு வைக்க முடியுமா...? விட்டால் அந்த மொகலாயனும் வெள்ளையனும் இதை டெல்லிக்குக் கொண்டு சென்று விடுவார்களே...''

''அதற்கு நாம் என்ன செய்ய முடியும்...? நாடே போகப் போகிறது. கஜானா தானா பெரிது...?''

''என்ன அப்படி சொல்லிவிட்டீர்கள் ஜோதிடரே... நமது கஜானா சாதாரணமானதல்ல. இதன் பொன்னையும், செப்பையும், ஆபரணங் களையும் நாம் எப்படியாவது காப்பாற்றினால் தானே பின்னர் படைதிரட்ட, ஆயுதம் வாங்க நமக்கு உதவியாக இருக்கும்...''

''அப்படியானால் என்னை அழைத்தது கஜானாவை காப்பாற்றவா? நான் ஜோதிடன். எனக்கு பொருளைக் காக்கும் வழிகள் பற்றி என்ன தெரிந்துவிட முடியும்?''

''காக்கும் வழி பற்றி நீர் கவலைப்படாதீர். அது எங்கள் வேலை. நெற்கட்டும் செவலில் மனித நடமாட்டமில்லாத இடத்தில் இதை புதைக்கும் வேலைகள் ஆரம்பமாகிவிட்டன. எங்களுக்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றுதான்.''

''என்ன அது?''

''பூமிக்கடியில் இதை புதைப்பதாக உத்தேசித்துள்ளோம். அப்படி புதைத்ததை ஏவல் பிசாசுகளை வைத்துக் காவல்காக்க செய்வது உசிதமானதா? இல்லை நமது வீரர்களை மாறு வேடத்தில் நிறுத்தி காவல் காக்கச் செய்வது உசிதமானதா?''

குமரப்பிள்ளை சொல்வது கேட்டு கணிசமாக அதிர்ந்தார் ஜோதிடர் வேதநாராயணப்பட்டர்.

''ஏன் அஞ்சுகிறீர்கள்?''

''இல்லை... உங்களுக்கு இப்படியெல்லாம் எண்ணங்கள் எப்படி வந்தது?''

''இதைக் கேட்க இதுவா நேரம்... எங்கள் கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லுங்கள். கஜானா செல்வத்தை எப்படியாவது காப்பாற்றி கரை சேர்க்க வேண்டும். அதன் நிமித்தம் இப்படிச் செய்யத் தீர்மானித்தோம். முதலில் புதைத்து விட்டு யுத்தம் முடிந்தபிறகு மலையாள தேசத்து மாந்திரீகனுடன் வந்து புதைத்ததை காவல் காத்திட ஒரு யட்சப் பிசாசையோ, இல்லை மோகினிப் பிசாசையோ அங்கு காவலுக்கு வைத்துவிடலாம் என்பது எங்கள் ஆசை. உங்கள் சாஸ்திரப்படி இதனால் பின்னால் எதுவும் பாதிப்பு வராதே?''

''வேண்டாம்... மாந்திரீகன், பிசாசு என்று போய் விடாதீர்கள். அது நல்லதல்ல. பின்னால் எந்த நாளிலும் அந்தச் செல்வங்களை எவரும் அடைய முடியாதபடி ஆகிவிடும். எனவே நான் சொல்வதைக் கேளுங்கள்.''

''வேறு என்னதான் வழி?''

''சாதாரணமாய்ப் புதைத்துவிட்டால் போதும். நமது வீரர்கள் காவலிருப்பதுகூட உசிதமல்ல. உண்மை ஒருவருக்கும் தெரியக் கூடாது. உங்கள் இருவரைத் தவிர...''

பட்டர் சொல்வதைக் கேட்டு பிள்ளையும், தேவரும் ஆழ்ந்து சிந்தித்தனர்.

''என்ன சிந்தனை...? நான் நல்லதைத்தான் சொன்னேன். மாந்திரீகனை இந்த நிஷயத்தில் நம்புவது நல்லதல்ல. சாராணமாக பலர் அப்படிச் செய்யப்போய் பின்னர் புதையல் இருப்பது தெரியாமல் தோண்டுபவர்கள் அதை எடுக்கும் போது, அதன் காவல் தெய்வங்களால் அடிபட்டு இறந்தும் போயிருக்கிறார்கள்.

"அப்படியானால் நீங்களே ஒரு நல்ல வழியைச் சொல்லுங்கள். நமது உயிரைக் கொடுத்தாவது நமது நெற்கட்டும் செவல் பாளையத்து கஜானாவைக் காப்பாற்றியாக வேண்டும். இது உங்களுக்கோ எங்களுக்கோ சொந்தமானதல்ல. இந்த பாளையத்து சொத்து. பாளையம் மேலோங்க, பாளையத்தினைப் பாதுகாக்க இது பயன்பட வேண்டும்."

"ரொம்ப சரி. மேற்கொண்டு சொல்லுங்கள்."

"உம்... சீக்கிரம்..."

தேவரும் பிள்ளையும் பரபரப்போடு தூண்டிவிடப் பட்டனர். பிறகு வெகுநேரம் யோசித்துவிட்டு, "எனக்குத் தெரிந்து கஜானாவை தற்போது பாதுகாக்க ஒரே இடம்... மனித நடமாட்டமில்லாத இடம்... மனிதனே சென்றுவர மிகப் பயப்படும் இடம் ஒன்றுதான் உள்ளது..."

"என்ன அது?"

"நமது பாளையத்து அக்னி மூலையில் அமைந்துள்ள மயானம்தான் அது!"

பட்டர் சொன்ன மறுவிநாடி இருவர் கண்களும் ஆச்சரியத்தோடும், ஆமோதிப்போடும் அகண்டு விரிந்தன.

"சபாஷ் பட்டரே... சரியான இடத்தைச் சொன்னீர்கள்..." என்கிற பாராட்டோடு எழுந்தனர் இருவரும்.

"என்ன எழுந்து விட்டீர்கள்?"

"இடம் தெரிந்துவிட்டது. இனி பதுக்குவது தான் முதல் வேலை."

"இந்தப் பகலிலா?"

"பகலாவது, இரவாவது... விட்டால் வெள்ளையன் படை எந்த விநாடி நம்மை வளைக்கும் என்றே தெரியவில்லை. இதில் கால நேரம் பார்க்கலாமா என்ன?"



"இரகசியமான செயலாயிற்றே... நமது பாளையத்து ஜனங்கள் பார்த்தாலும் ஆபத்தாயிற்றே. பொன்னும் பொருளும் வேதாந்தியைக் கூட பெரிதும் மாற்றிவிடுமே?"

"அதுவும் சரிதான்... பதட்டத்தில் எங்களுக்குத் தோன்றவில்லை பாருங்கள். இப்பொழுது என்ன செய்யலாம்?"

தீவிரமாக யோசிக்கின்றனர்.



## 4

ஆவி பறக்கும் வெந்நீரில் தலைமுழுக்கு போட்டுவிட்டு, தலை துவட்டியபடி வருகிறான் அருள்மணி.

வீட்டுக்கூடத்தில் தங்கைகள் இட்லியடுக்கு, சாம்பார்ப் பானை, தோசைத்தட்டு என்று வரிசையாக கொண்டு வந்து வைத்து பரப்பினர்.

குருணிக்கிழவி மோவாய் கையோடு பரிமாறினாள்.

"அண்ணன் வந்துட்டான்னா உடனே வேகத்தைப் பாருடி... ஆமா இப்படி அடுக்கறீகளே... இவ்வளவையும் உங்க அண்ணனா திங்கப் போறான்?" - சடைக்கிறாள்.

"எல்லாம் திங்கும் நீ போ - கண்ணு வைக்காதே."

"அடி மொட்டச்சிறுக்கி... நானா கண்ணு வைப்பேன்... வீணாப்போனவளே..." கிழவி செல்லக் கோபம் கொண்டு நாக்கை மடித்தாள்.

அருள்மணி சிரித்தான்.

அப்பொழுதுதான் அங்கு அப்பா முத்து ராமலிங்கம் இல்லாததைக் கவனிக்கிறான்.

"அப்பா எங்க வளர்மதி...?"

''அப்பா தோட்டம் வரை போயிருக்கு...''

''ஏன் என்கூட உட்கார்ந்து சாப்பிட்டுட்டுப் போகலாம்ல?''

''அவசரம்ணே... இன்னிக்கு தோட்டத்துல போர் போடப் போறோம்ல...?''

''போரா...?''

''ஆமா... தண்ணிக்காக போர் போடப் போறோம். அப்பா சொல்லலியா...?''

''ஏன் ஊர்க்குளத்துலயும், கிணத்துலயும் தண்ணியில்லையா?''

''ஆமாம்ல... இப்பல்லாம் யாரப்பாரு போர் போட்டுதான் விவசாயம் பண்றாங்க... அதுலயும் நம்ம தோட்டம் சுடுகாட்டுக்குப் பக்கத்துல இருக்குதா... விவசாயம் பாக்க ஒருத்தன்கூட ஒழுங்கா வரமாட்டேங்கறான். அதான் அப்பா போர் போட்டு கொழாயை போட்டுடப் போறாரு.''

''சரி... சரி... சீக்கிரம் போடு. சாப்டுட்டு நானும் போய் பாத்துட்டு வரேன்.''

வேகப்பட்டான் அருள்மணி.

''மொள்ள சாப்டுட்டு போடா... போகும்போது அந்தச் சுடுகாட்டுப் பக்கம் போயிடாதே. போன வாரம்கூட ஒருத்தன் பட்டப் பகல்லயே அந்தப் பக்கம் போய் பேயடிச்சு செத்துப் போனான்.''

கிழவி சொல்வதைக் கேட்டு இட்லியை விண்டு போட்ட வாயோடு திரும்பினான்..

பார்வையிலேயே ஒரு கூடி. கிழவி சற்று திணறிப் போனாள்.

வாசுகியும், வளர்மதியும் சிரித்தனர்.

''அண்ணனுக்கு சாமி மேலயே நம்பிக்கைக் கிடையாது. பேய் பிசாசைத்தானா நம்பப் போகுது...?'' என்றனர். அருள்மணி வேகவேகமாக அள்ளிப் போட்டு கொண்டிருந்தான். பிறகு சட்டையை . மாட்டிக் கொண்டு வெளிக் கிளம்பினான்.

* * *

ஊர் மயானம் வெறிச்சோடிக் கிடந்தது. மயானம் என்பதாலேயே காற்றுக்கூட அங்கே வேகமாக வீச விருப்பமில்லையோ என்னமோ...?

மயானத்தின் நடுவில் ஐநூறு வருஷத்து ஆலமரம் ஒன்று உண்டு. அது சௌபாக்ய பிள்ளைத்தாச்சியாட்டம் ஏகமாய் விழுதுவிட்டு, அகண்டு கால்பரப்பி, குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தது.

அந்த ஆலமரம் தவிர மயானத்துக்குள் ஏகமாய் மற்ற மரங்களும் உண்டு. அதில் நெட்டிலிங்க மரம் ஒன்று மிக விசேஷமானது. அதில்தான் ஆந்தைகளும், தேவாங்குகளும் தங்கி வாழ்ந்து வந்தன.

நெல்கட்டும் செவல் கிராமத்திலிருந்த வாசுதேவநல்லூர் வரை உள்ள பல ஊர்களுக்கு இந்த மயானம்தான் அடைக்கல பூமி.

இதனால் அடக்க சமாதிகள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. எரிமேடையும் இரண்டு உள்ளது. இங்க மற்றொரு சிறப்பம்சம் மயானத்து ஈசான்ய மூலையில் உள்ள மயான சண்டி கோயில். உதிர்ந்து காரை தட்டி விழுந்து விடுவது போல் காட்சிதரும் அந்தக் கோயில் முகப்பில் ஒன்பது மேடுகள்.

அந்த ஒன்பது மேடுகளும் ஒன்பது சமாதிகள் என்றும், சண்டி கோயிலில் ஒன்பது செட்டிமார்கள் சண்டிக்காக தங்கள் தலையை தாங்களே வெட்டிக்கொண்டு சுயபலி கொடுத்துக் கொண்டதாகவும் ஒரு கதை உண்டு. அதெல்லாம் இல்லை, இடிவிழுந்து அவர்கள் இறந்து போனார்கள் என்றும் ஊருக்குள் ஒரு கதை உண்டு. அது சண்டி இல்லை. சின்ன மஸ்தா என்கிற துர்தேவதை என்றும் கூறுவர்.

மயானத்துக்கு காரியமாய் வருபவர்கள் சண்டி கோயிலுக்கும் வந்து கோயிலை வலம் வந்து கற்பூரம் கொளுத்திவிட்டுப் போவார்கள். அந்தக் கோவில் முகப்பில் கோவிலான் என்று

சொல்லிக்கொண்டு ஒரு கிழவன் உட்கார்ந்து கொண்டிருப்பான். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஊர்ப்பக்கம் வரமாட்டான் அவன்.

சதா சர்வகாலமும் சண்டி கோயில் முகப்பில் படுத்துக்கிடப்பான். வெட்டியான் சாப்பிடத் தருவதை சாப்பிட்டுவிட்டு விழுந்து கிடப்பது தான் அவன் வேலை.

இன்றும் அவன் அப்படிக் கிடந்தான்.

குருணிக்கிழவி சுடுகாட்டு பக்கமாக போகாதே என்று சொன்னதற்காகவே அந்த பக்கமாய் நடந்து வரும் அருள்மணியும், அரவமில்லாத மயானத்தை பார்த்து சற்று பயப்பட்டாலும், எல்லாம் வெட்டிப் பிரமை என்கிற சுதாரிப்போடு, மெல்ல சண்டி கோயில் பக்கமாய் காலை வைத்தான்.

எதிரில் ஆலமரக் குடும்பமும், சுற்றிலும் மண் மேடாய் சமாதிகளும் காட்சி தந்தன. கோவில் பக்கமாய் லுங்கியை மடித்துக் கட்டிக்கொண்டு வரும் அருள்மணி காதில், சுடுகாட்டுக்கு அப்பால் உள்ள தங்கள் தோட்டத்தில் போர் போடும் என்ஜினின் சப்தம் லேசாக காதில் விழுகிறது.

தோட்டத்தைச் சரியாக பார்க்க முடியாதபடி அங்கங்கே அடர்வாக மரம், செடி கொடிகள் மறைத்துக் கொண்டிருந்தன. சுற்றிச்சுற்றி அருள் மணியின் பார்வை செல்கிறது. அப்பொழுது காதில் கிசுகிசுப்பாக ஒரு குரல். 'அருள்மணி ஓடிப்போயிடு... சண்டி வரப்போறா...'



## 5

நீண்ட நெடிய அந்தப் படை திமுதிமு என்று புழுதிப் புரட்டலோடு வந்து கொண்டிருந்தது.



சித்திரை மாதத்து வெய்யிலின் உக்கிரத் தாக்கம் காரணமாக படையும், புரவிக் கூட்டமும் மிகக் களைத்துக் காணப்பட்டாலும், நடையில் அதன் சோர்வைக் காட்டாமல் நடைபோட்டுக் கொண்டிருந்தார்கள்.

யுத்த ஊர்வலம் என்பதற்கேற்ப முன் னிரண்டு குதிரை வீரர்கள் கிழக்கிந்தியக் கம்பெனிக் கொடியையும், மொகலாய சாம்ராஜ்ய சின்னமான பச்சைக் கொடியையும் ஏந்திப் பிடித்தபடி செல்ல, யுத்த பேரிகை கொண்ட இரட்டைப்புரவி பூட்டிய ரதம் அதன்பின் தொடர்ந்து வந்தது.

பேரிகையை ஓயாமல் சப்தித்தபடி இருவர் அருகருகே நின்று கொண்டிருந்தனர்.

அவர்களுக்குப் பின்னால் ஆற்காட்டு நவாபின் ஆணைப்படி திருக்குர்ஆனின் உன்னத போதனைகளை உள்ளடக்கிய குறியீட்டு எண்ணாக உள்ள 788-ன்படி 786 இஸ்லாமிய வீரர்கள் வரிசையானது, உருவிய வாளினை வலது தோளில் சாய்த்துப் பிடித்தபடி வரிசைக்கு ஒன்பது பேர் என்கிற கணக்குப்படி நடந்து வந்து கொண்டிருந்தனர்.

அவர்களுக்குப் பின்னால் 26 ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனி வீரர்களின் விறைப்பான தோட்டாத் தாக்கி தாங்கிய நடை... அதற்குப் பின்னால் வரிசையாக பல்லக்குகள். அதில் முதல் பல்லக்கில் சுருட்டு பிடித்தபடி யூசுப்கான் என்னும் மருதநாயகம்.

அவ்வப்போது திரைச்சீலையை விலக்கி விலக்கி வெளியே பார்க்கிறான்.

பல்லக்கை ஒட்டி நடந்து வரும் மெய்க் காவலனை அவன் பார்வையே அருகில் அழைத்தது.

"இன்னமும் எத்தனை மைல்கள் உள்ளது?"

"நெருங்கி விட்டோம் ஹுஜூர்."

''பாளையத்தானின் முஸ்தீபுகள் எப்படி உள்ளது?''

''வாசுதேவ நல்லூருக்கு ஐந்து மைல் முன்னால் பாளையத்தார் படை குவிப்பதாக கேள்வி. பாதையோரத்து புளிய மரங்கள் பனை மரங்களில் கூட ஆட்கள் அமர்ந்து தாக்கக் கூடுமாம்...''

''தாக்கட்டும்... தாக்கட்டும்... ஒரே ஒரு பீரங்கி போதும் அந்தக் கூட்டத்தைத் தவிடு பொடியாக்க... பீரங்கிக் காவலனை வந்து பார்க்கச் சொல்...''

மெய்க்காவலுக்கு கட்டளை பிறந்தது.

''தும்... தும்... தும்... தும்...'' - பேரிகை முழக்கம் காதைப் பிய்த்தது. கெட்டிலில் மிளகுத் தண்ணீரும், பழரசமும் நடுநடுவே பல்லக்கினுள் சில இளம் வீரர்களால் வழங்கப்பட்டன.

கர்னல் ஹெரான், மாபூஸ்கான் என்று மொத்த பிரதிநிதிகளுக்கும் ஆளுக்கொரு பக்கம் முன்னும் பின்னுமாக பத்து பேர்கள் உருட்டிப் பிசைந்தது போன்ற தோளாலே பல்லக்கின் நுகத்தடி தூக்கி, வியர்வை பெருக்கத்திற்கு நடுவில் நடைபோட்ட வண்ணமிருந்தனர்.

பல்லக்கின் பின்னால் சீரான தாளகதி போன்ற நடையோடு குதிரைப்படை. அதற்கும் பின்னால் ராஜபுதனத்து வில்லம்புப் படை. அதற்குப் பின்னால் தரைப்படை. அந்தப் படையை அணைத்தபடி இருமருங்கிலும் நீண்ட ஒற்றை வரிசை குதிரைப்படை.

ஒருசேர அத்தனை பேரும் காலெடுத்து நடக்கும் சப்தமும், அதன் காரணமாக வெளிக் கிளம்பும் புழுதியும், வானில் நூறுமீட்டருக்கு மேல் செம்பழுப்பாய் எழும்பி பந்தலிட்டன.

பீரங்கி வண்டியின் சப்தம் சற்று கூடுதலாக கடமுட, கடமுட என்று கேட்டது. அவைகளை ஓட்டி தண்ணீர் பீப்பாய் பூட்டிய வாட்டர் கேரியர் என்னும் வண்டி வரிசையும், அன்ன ரதமும் தொடர்ந்தன.

அங்கங்கே நாழிகைக் கணக்கெடுப்பாளன் மணற்கடிகையையும், தரையில் விழும் நிழலின் நீள அகலத்தையும் பார்த்து அதற்கேற்ப ஓய்வுச்சங்கு முழங்குவான். அந்த சப்தம் கேட்ட நொடி, படை நின்று ஓய்வு எடுத்துக் கொள்ளத் தொடங்கும். திரும்ப சங்கு முழங்கும் வரை ஓய்வுதான். இந்த இடைப்பட்ட ஓய்வு வேளையில் சாலையோரமாக காய்ந்து கிடக்கும் சுரைக் கொடியின் தண்டுகளை ஒடித்து வந்து தீப்பற்ற வைத்து சில வீரர்கள் நெஞ்சு கமற புகை வலிப்பதும் உண்டு.

இம்மாதிரி ஓய்வில்தான் யூசுப்கானும், பூனைக்கண் மாபூசும், ஹெரானும் ஒன்றுகூடி வரைபடத்தை விரித்து வைத்துக்கொண்டு ஆவேசமாக எதையாவது பேசினார்கள்.

இந்த முறை புலித்தேவரை சரணடைய வைத்தே தீர வேண்டும். நெற்கட்டும் செவலில் அங்குல பாகத்தையும் விட்டுவிடக் கூடாது.

புலித்தேவரை கட்டி இழுத்து டெல்லிவரை கொண்டு செல்ல வேண்டும். அங்கு செங்கோட்டை மரண மண்டபத்தில் ஔரங்கசீரின் விருப்பப்படியோ, இல்லை ஜஹாங்கீர்களின் விருப்பப்படியோ புலித்தேவரை தூக்கில் இடுவதோ இல்லை கண்டமிடுவதோ நடைபெறும்.

'அப்படி கண்டமிட்டால் அந்த நிலையில் புலித்தேவனின் தலையை மட்டும் தான் வாங்கி, தன் காலால் பந்தைப்போல் ஆகாசத்திற்கு உதைத்து மகிழ்ந்திட வேண்டும்' - இப்படியெல்லாம் கொக்கரித்தபடி இருந்தான் யூசுப்கான் என்னும் மருதநாயகம். அதை ரசித்தபடி கேட்டு சித்தான் பரங்கிப்பழம் போலிருக்கும் ஹெரான்.

இவர்களின் கொக்கரிப்பும், வக்கரிப்பும் புலித்தேவரையும் எப்படியோ அடைந்துவிடும்.

அதற்குத்தானே இருக்கிறது உளவுப்பிரிவு. அதனால் புலித்தேவரும் யுத்த சாவடியில் துணிக்கொட்டாரத்தில் கட்டிலில் அமர்ந்து கொண்டு தீவிரமாய் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

''பாளையத்தரசே...! இன்று மதியம் அநேகமாக நவாபின் படை நம்மை சந்தித்து முன்வந்து தாக்கக்கூடும். ஓரிரு மணி நேரங்கள் தாக்குப்பிடித்தால் போதும். பின் மாலை வந்துவிடும். தாங்கள் அவ்வேளையில் இங்கிருந்து கடலாடிக்குச் சென்று விடுவதுதான் நல்லது. நவாபின் படையை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்'' என்றான் தளபதி தங்கமாணிக்கம். அதைக்கேட்டு செருமுகிறார் புலித்தேவர்.

''தங்கமாணிக்கம், என்னைப்பற்றிய கவலையை விடு. ஓடுவதை விடவும் சாவது மேல் என்று உனக்குத் தெரியாதா?'' திருப்பிக் கேட்டார்.

''சாவது மேல்தான்... அது யாருக்காக என்பதில்தான் பெருமை மிக உள்ளது பாளையத்தரசே! ஓசைப்படாமல் ஒரு சிறு பாளையத்தைப் பிடிக்கப் பெரும் படையுடன் வருபவனிடம் சிக்காமல் தப்பித்தல்தானே விவேகம்! தாங்கள் தப்பிச் சென்றாலல்லவா பின்னர் வியூகம் வகுத்து, நமது பாளையத்தை நாம் திரும்பப் பெற முடியும்...''

''எல்லாம் எனக்குத் தெரியும். நீ முன் வரிசையில் வில்லம்பு கூட்டத்தோடு அணி வகுத்துச் செல். தோட்டாத் தாக்கிகள் சீறினால் ஒளிந்து தப்பிக்கவும், ஈட்டி பாய்ச்சி அவர்களைக் கொல்லவும் ஆக வேண்டியதைச் செய்... பனையூரிலிருந்தும், ராஜபாளையத்திலிருந்தும் படைகள் வந்துவிட்டனவா?''

''இல்லையரசே! அவர்கள் தங்களுக்கு ஒத்துழைத்தால் நாளை நவாபால் பழிவாங்கப் படுவோம் என்று அச்சப்படுகிறார்கள்.''

''அச்சமா? இவர்களுக்கெல்லாம் எதற்கு தலைக்கட்டுப் பதவியும், மணியக்காரன் என்கிற பட்டப் பெயரும்? அச்சப்பதர்கள்... அச்சப் பதர்கள்...'' - தேவர் சினந்தார். சிவந்தார். விடைத்தெழுந்து கை பிசைந்தார்.

''ஆமாம் வேல்மணியும், குமரப்பிள்ளையும்...?''

''அவர்கள் எப்பாடுபட்டாவது கஜானாவை காப்பாற்றுவதில் முழுமூச்சாக உள்ளனர்.''

''ஊரைச் சுற்றி வெள்ளையன் படை நாலாபுறமும் விட்டம் கட்டியிருக்கும்போது, எப்படிச் செல்வத்தைக் காப்பாற்றப் போகிறார்கள்?''

''புதைத்துக் காப்பாற்றப் போகிறார்கள் அரசே!''

''ஆம்... வேல்மணி விபரமாகச் சொன்னான். மயான சின்ன மஸ்தா கோயிலில் பலிபூசையுடன் அதை நிகழ்த்த இருப்பதைச் சொன்னான். 'ஒருவரும் அறியாதபடி இதை எப்படி செய்யப் போகிறார்கள் என்பதுதான் எனக்குப் புரிய வில்லை...'' புலித்தேவர் தனது வருத்தத்தைக் கேள்விக்குறியாக்கினார்.

''அரசே! குமரப்பிள்ளை மிகச்சிறந்த மதியூகி. நிச்சயம் கஜானாவைக் காப்பாற்றி விடுவார். எங்கள் கவலை எல்லாம் கஜானா மேலல்ல... தங்கள் மேல்தான்...''

''என்னைவிட நமது பாளையம் பெரிது... அதன் சுயமரியாதை பெரிது... மாண்பு பெரிது... எங்கிருந்தோ வந்து அடக்கிட நினைக்கும் வெள்ளையனை, அந்த கான் சாயபுவை உண்டு இல்லை என்றாக்க வேண்டும். இருபதாயிரம் பேரில்லை, இருபது லட்சம் பேர் வந்தாலும் சரி, மறவனை அடிபணிய வைக்க முடியாது என்பதை புரிய வைக்க வேண்டும்.

ஒரு கை போனாலும் மறு கை கொண்டு போரிட வேண்டும். விழும்போது நம மறவர்களின் உடல் வெறுமனே விழக்கூடாது எதிரியின் ஏதாவது ஒரு உறுப்பை வெட்டி எடுத்தபடிதான் விழ வேண்டும்.

அப்படி விழாதவன் மறவனில்லை. இ ஒவ்வொருவனின் உள்ளத்திலும் புதைத் களத்தில் இறக்குங்கள்...'' - புலித்தேவரி பேச்சில் வீரமும் துவேஷமும் திமிறிப் பொங்கிய

அதே சமயம், கஜானா அமைந்துள் சுண்ண மண்டபத்துக்கு வெளியே வரிசையா பாடைகள். ஒன்றல்ல, இரண்டல்ல ஒன்ப பாடைகள். பாடைகள் மேல் கஜானா செல்வமா பொற்காசும், செப்புக்காசும் பரப்பப்ப அதன்மேல் பிணம் படுத்திருப்பது போல கஜா ஊழியர்கள். அவ்வளவு பேரும் செட்டிநாட் செட்டிமார்கள். கணக்கு வழக்கு பார்ப்பதி சூரர்கள்.

பாடைகள் வாசுதேவ நல்லூர் மயா நோக்கிக் கிளம்புகின்றன. வெறிச்சிட்டுக் கிடக் செவல்பகுதி வீதிகளில் அந்தப் பாடை முன்செல்ல, முன் நின்றபடி மாறுவேடத்தி கொள்ளிச்சட்டி சுமக்கும் இருவராக கும பிள்ளையும், வேல்மணித்தேவரும்...



## 6

''அருள்மணி ஓடிப் போயிடு:.. சண் வரப்போறா...'' என்று காதில் விழுந்த சப்தத்தா கலவரப்பட்டு நிற்கிறான் அருள்மணி.

யார் பேசியது?

பார்வை சுற்றிச் சுழன்றது.

கிசுகிசுப்பான குரல்.... இதுவரை கேட்டறியாத சப்தம். ''சண்டி வரப்போறா?'' என்றால் யார் அது சண்டி? அருள்மணி யோசிக்கும்போது சண்டி கோவிலின் இடிந்த கோபுரம் மேல், கலசபாகம் உள்ள பகுதியில் ஒரு காக்கை வந்து அமர்கிறது. கிழட்டு அண்டங்காக்கை. அதன் அலகுக்கு இடையில் ஏதோ ஒரு பிணத்தைக் கொத்தி எடுத்த சதைப்பாகம்.

திடும்மென்று அருள்மணிக்கும் தான் நிற்கும் தரைப்பரப்பில் பூமி அழுந்துவது போல ஒரு உணர்ச்சி உடலெங்கும் பரவியது. குனிந்து பார்க்கிறான். நின்ற இடத்தில் கால்பதிந்த தடயத்தோடு தரைப்பரப்பு அரையங்குலம் அளவு இறங்கியிருந்தது..

ஆச்சரியத்தில் கண்கள் கூட்டி விரிந்தன.

குனிந்து அந்தத் தரைப்பரப்பை தொட்டுப் பார்க்க முனையும்போது, ஒன்பது சமாதிகள் உள்ள பகுதியில் இருந்து ஊதுவத்தி வாசம் மூக்கில் புகுந்தது. சட்டென்று நிமிர்ந்து பார்வை சமாதிப்பக்கம் திரும்ப, வாழைப்பழத்தில் குத்தி நடப்பட்டது போல ஒன்பது சமாதியிலும் எரியும் ஊதுவத்திகள்.

சில வினாடி வரை வாசமோ ஊதுவத்தியோ இருந்ததாகவே தெரியவில்லை. திடீரென்று எப்படி?

'ணணங்!'

'ணணங்! சண்டிகோவிலின் உள்ளே மணி சப்தம் ஒலிப்பது இப்பொழுது கூடுதலாக சேர்ந்தது.

கோவில் கதவில் இடைவெளிச் சுவர் உண்டு. ஓடிச் சென்று அதன் சிதைந்த வாசல்படி மேல் ஏறி உள்ளே பார்க்கிறான்.

சண்டி விக்ரகம் முன் தொங்கியபடி உள்ள மணி தானாக ஒலித்தபடி இருந்தது.

அருள்மணி விக்கித்துப்போய் நின்றான்.
பக்கென்று கற்பூரமும் பற்றி எரிந்தது.

'ஓடிப்போ... ஓடிப்போ...' என்று ஒரு குரல் காதில் திரும்ப ஒலித்தது.

'ஒருவேளை பாட்டி சொன்னதெல்லாம் … கிறதோ?'

அவனுக்குள் அச்சம் பரவிய வேளை தெம்பு எழும்ப, தொத்தென்று மேலிருந்து ஏதோ ஒன்று அவன் மேல் விழுந்தது.

"ஐய்யோ...!" என்று அலறித் திரும்பினான்… கலசபாகத்தில் அமர்ந்திருந்த காக்கை!

அதுதான் அடிபட்டு இரத்தக் கசிவோடு அவன் மேல் விழுந்து, பின் கீழே விழுந்து கிடந்தது.

"ஓடிப்போ... ஓடிப்போ..." திரும்பவும் குரல் ஒலிக்கிறது.

"யாருசாமி அங்க...?" தொலைவிலிருந்து இன்னொரு குரலும் கேட்கிறது. குரல் வந்த திக்கில் மயான வெட்டியான்.

கையை ஆட்டி அழைப்பவனாக கண்ணுக்குத் தெரிந்தான். மயானத்து மருதமரத்தில் … அருகில் நின்று கொண்டிருந்தான்.

"சாமி வந்துடுங்க... வந்துடுங்க... அங்க நிக்காதீங்க. பாட்டியம்மையும் அதுமாதிரி அங்க நிக்காதீங்க... வந்துடுங்க..."

உரக்கக் கத்தி அழைக்கிறான். அருள்மணிக்குள்ளும் அச்சம் பரவிவிட்டது. அங்கிருந்து கிளம்பி ஓடத் தொடங்கினான்.

மூச்சு இரைக்க வெட்டியானை நெருங்கிய பிறகே கால்கள் நின்றன.

"என்ன சாமி நீங்க... தனியா அந்தப்பக்கம் போகலாமா? விவரமில்லாத ஆளா இருக்கீங்களே...?"

வெட்டியானின் கரிசனம். அருள்மணியின் வியர்வை ஒழுகும் உடம்பு. அவன் பார்வை வெட்டியான் மேல் ஊன்றுகிறது.

"என்ன அப்படி பாக்குறீங்க... சாமிக்கு எந்த ஊர்?"

"நல்லூரு..."

"நல்லூரா...? நல்லூர்ல யார் வீடு?"

"முத்துராமலிங்கத்தேவர் வீடு..."

"ஓ... தேவர்மவனாக்கும். பட்டணத்துல சோலியில இருக்கிறது நீங்கதானே...?"

"நானேதான்... ஆமா... அந்த கோவில்ல யார் இருக்கா?"

"சண்டி..."

"சண்டியனா...?"

"சண்டியனா சண்டிதான்... என்னசாமி, சண்டிசாமி தெரியாதா உங்களுக்கு? சண்டிங்கறது முனுசாமி, கருப்பசாமி மாதிரி உள்ள ஒரு பேய்சாமி... இல்ல இல்ல... இது சின்னசாமிதானென்னும் சொல்லுவாங்க..."

"அங்க மணி சத்தம் கற்பூரம் காட்டறது எல்லாம் யார்...?"

"பாத்தீங்களாக்கும்... எல்லாம் வனதேவதைங்க..."

"வனதேவதைங்களா?"

"ஆமாம்... அடிக்கடி இப்படி நடக்கும். நான்கூட பாத்திருக்கேனு. அமாவாசை, பாட்டியம்மையை தவறாம நடக்கும். அப்பால வெளிய உள்ள ஒன்பது செட்டியார் சமாதிக்கும் கூட பூசை நடக்கும்..."

"செட்டியார் சமாதியா?"

"ஆமாங்க... ஒன்பது செட்டியாருங்க சண்டிக்காக விரதமிருந்து தங்களையே பலி கொடுத்துக்கிட்டு அங்கேயே அடக்கமாயிட்டாங்கல்ல...?"

''இது என்ன புதுக்கதை...?''

''கதையா...? சத்தியம்சாமி... சத்தியம். ஆமா, நீங்க எதுக்கு சுடுகாட்ல அந்தப்பக்கம் வந்தீங்க? உங்க தோட்டத்துக்குத்தான் வேற பக்கம் போகலாமே...?''

வெட்டியானின் பதிலும் கேள்வியும் அருள்மணியை குழப்பியது. அருகில் பிணத்தின் வேக்காட்டு நாத்தம்.

''வெந்துக்கிட்டிருக்கிறது யாருன்னு நினைக்கிறீங்க... நேத்து குடிபோதையில விபரமில்லாம சண்டி கோவில் பக்கம் போயிட்ட கோபாலகிருஷ்ண நாயக்கர் மகன் கோவிந்தன்.''

ஒரே அறை!

நாக்கு மூக்குல நுரை தப்பிடுச்சுல்ல...?

அவனது அடுத்த விளக்கம் அருள்மணியை தூக்கியடிக்கிறது.

''அறைஞ்சது யாரு?'' கிசுகிசு குரலில் கேட்கிறான்.

''யாரு கண்டா,.. செட்டிமார் அறைஞ்சாங் களோ, இல்ல சண்டியோ...''

''எதுக்கு அறையணும்?''

''அந்தக் கோயில்கிட்ட புதையல் இருக்கு துல்ல...''

''புதையலா...?''

''அப்படித்தான் சொல்லக் கேள்வி. ஊரோட மொத்தக் காசும் ஒண்ணா அங்கு இருக்குதாம். அதைத்தான் செட்டிமாருங்க காவல்காக்கறதா சொல்லுவாங்க... அதை யாரும் தோண்டி எடுத்துப்பிட்டா...''

வெட்டியான் அங்கே இங்கே தொட்டு ஒரு பெரிய புதையல் ரகசியத்தில் வந்து நின்றான்.

''நா இது நாள் வரை கேள்விப்பட்ட தில்லையே...''

''ரொம்ப இது வெளிய தெரியாது. பரம்பரை வெட்டியான் நான். வேலைக்கு இங்க உக்காரும் போது, சண்டிகோவில் மண்ணை, ஒரு கைப்பிடிகூட தோண்டி எடுக்க மாட்டோம்னு சத்தியம் வாங்கிகிட்டுதான் என்னை வேலைக்கே போட்டாங்க. அஞ்சாறு தலைமுறையா இப்படித் தானே நடக்குது?''

''யாரு சத்தியம் வாங்குவாங்க?''

''ஊர் மணியக்காரர்தான்...''

''மணியக்காரர் எங்க அப்பாதானே?''

''அப்ப அவர்கிட்டையே கேளுங்க. வெலாவரியா சொல்வாரு...'' எரியும் சிதையை வேலந்தடியால் சிமிட்டியபடியே அசால்டாக பதில் சொன்னான் வெட்டியான்.

''சரிங்க சாமி. நல்ல நேரத்துல கிளம்புங்க. எங்களுக்குதான் இங்க கிடந்து சாகணும்னு தலையெழுத்து. உங்களுக்கென்ன கிளம்புங்க... கிளம்புங்க...'' என்றான்.

***

## தோட்டம்!

போர்வெல் எஞ்ஜின் அசுர சப்தம் போட்டுக் கொண்டிருந்தது. சிமெண்டுக் குழம்பாய் தண்ணீர் ஒரு பக்கம் கொட்டிக் கொண்டிருந்தது. பார்த்துக் கொண்டிருந்தார் முத்துராமலிங்கம்.

அருள்மணி சுடுகாட்டுப்பாதை வழியே வருவதைப் பார்த்ததும் சற்று சுணங்கினார்.

மடித்துக்கட்டிய வேட்டியை அவிழ்த்து விட்டபடியே, ''வா அருளு... என்னா இந்தப் பக்கமா வரே...''

''சும்மாதான்...'' - குழப்பம் பரவின முகத்தோடு அவன் சொன்னான்.

''எதுக்கு இந்தப்பக்கம் வரே... அதான் நம்ம தோட்டத்துக்கு வர தெளிவான பாதை இருக்குல்ல...?''

அவர் கேட்பது போர்வெல் எஞ்ஜின் சப்தத்தில் சரியாக காதில் விழவில்லை. எனவே சற்று ஒதுங்கிச் சென்று பேசத் தொடங்கினர்.

"என்னப்பா நம்ம ஊர் மயானத்துக்குள்ளற இருக்கற இடிஞ்ச கோயில் பத்தி என்னென்னமோ சொல்றான் அந்த வெட்டியான்."

"நீ அங்க போனியா?" - மின்சாரத்தை சப்பியது போல பதைப்போடு உதறிக்கொண்டு கேட்டார்.

"ஆமா. எதார்த்தமா அந்தப்பக்கம் வந்தேன்."

"என்னப்பா நீ... எதுக்காவவும் அந்தப் பக்கமெல்லாம் இனி போகாதே."

"அதுசரி... ஏதோ புதையல் இருக்கு. அதை ஒன்பது செட்டிமார்கள் காவல் காக்கறாங்கன்னெல்லாம் வெட்டியான் சொன்னானே..."

"அதெல்லாம் ஒண்ணுமில்ல அருள். அவன் ஒருத்தன். எதையாவது உளறியிருப்பான். நீ இருந்திருந்து ரொம்பநாள் கழிச்சு தோட்டத்துக்கு வந்திருக்கே... சுத்திப் பாத்துட்டு வா... பொறவு பேசலாம்..."

அவர் கத்தரித்தார். பேச்சிலும் வேறுபக்கம் தாவினார். அவனுக்கு அது புரிந்தது. அந்த இடத்தில் மேற்கொண்டு எதுவும் பேசாமல், அவர் பேச்சை கேட்பது போல் தோட்டத்தை ஊடுருவினான்.

புதிதாய் எலுமிச்சைக் கன்றுகள், கொத்த மல்லி நாத்துகள், மனோரஞ்சித செடி மரங்கள் என்று தோட்டம் புதுவடிவம் கட்டி நின்றது.

தற்காலிகமாக அதை ரசிக்கத் தொடங் கினான்.

முத்துராமலிங்கமும் அங்கிருந்து மெல்ல ழுவினார்.

அவர் கால்கள் அருள்மணிக்குத் தெரியாத டி மயானம் நோக்கிச் சென்றது.



# 7

ஒன்பது பாடைகளும் ஒன்றன்பின் ஒன்றாக மயானத்துக்குள் நுழைந்தன.

பாய்ந்து வருகிறான் மயானத்தான் மாசானம்.

தீச்சட்டியும் கையுமாக வந்து நிற்கும் வேல்மணித் தேவரையும், குமரப்பிள்ளையையும் பார்த்து நெடுஞ்சாண் கிடையாக கீழே விழுந்து நமஸ்கரித்தான்.

"கும்பிட்டுக்கறேன் ஆண்டே... கும்பிட்டுக் கறேன். என்ன ஆண்டே இது... ஒண்ணுக்கு ஒம்பதா பொணங்க. யாரும் ஒரு வார்த்தை தகவல் வந்து சொல்லலியே... இவங்கள்ளாம் யாரு?"

"தெரியக்கூடாதுன்னுதான் சொல்லலை மயானத்தான். ஆமா ஏதாவது பிணம் வர இருக்குதா?"

"சாவு எதுவும் விழலீங்களே... யுத்தம் வந்துடப் போகுது... அப்பால நூத்துக்கணக்குல வரும்னு தலையாரி சொல்லியனுப்பினாரு..."

"ஆமாம்... அதுக்கு முந்தி அவசரமா ஒரு காரியம் செய்ய வேண்டியிருக்கு..." வேல் மணித்தேவர் சொல்லும்போதே பாடையில் படுத்திருக்கும் பிணங்கள் உயிர் பெற்று வெள்ளை ஆடையை விலக்கியபடி எழுந்தன. பாடையைச் சுமந்து வந்தவர்கள் அரசாணைக்குக் கட்டுப்பட்டவர்களாக வந்தவழியே திரும்பி நடந்தார்கள்.

அரண்டு போனான் மாசாணம்.

"ஆண்டே என்ன இதெல்லாம்...?"

"இவங்கள்லாம் கஜானா ஊழியர்கள். நமது பாளையத்துச் செல்வத்தைக் காப்பாற்ற பிணமாக நடித்தவர்கள். உம் தொடங்கட்டும் காரியம்..."

பாடையில் இருந்தே அவர்கள் கட்டப்பாரைகளை ஆளுக்கொன்று எடுத்துக் கொண்டனர்.

குமரப்பிள்ளை மயானத்தின் ஈசான்ய பாகத்தை கண்டறிந்தவராக அங்கு முன் சென்றார். கொண்டு வந்த தீச்சட்டி இரண்டும் தரையில் விழுந்து நொறுங்கி புகையைக் கக்கின.

மயானத்தான் பார்த்தபடி நிற்க, குமரப் பிள்ளை காட்டும் இடத்தில் அவர்கள் குழி தோண்ட தொடங்கினர்.

''ஆண்டே எதுக்கு ஆண்டே குழி... என்கிட்ட சொன்னா நான் தோண்ட மாட்டேனா...?'' - உடம்பை எட்டாய் மடித்துக்கொண்டு கேட்டான் மாசாணம்.

''நிச்சயமாய் செய்வாய்... ஆனால் உனக்கு வேறு வேலை தருகிறேன். அதைச் செய்...'

''சொல்லுங்க ஆண்டே...''

''மயானத்துக்கு வெளியில் சென்று நின்று கொள். உள்ளே ஒரு ஈ காக்கை நுழையாதபடி பார்த்துக் கொள்...''

''உத்தரவு ஆண்டே...''

அவன் அடுத்த நொடிப்பொழுதே தனது கருவேலக் கழியுடன், கட்டைச் செருப்பு சப்திக்க மயானத்தின் வாயில் பாகம் நோக்கிச் சென்றான்.

''நான் மறு உத்தரவு போடும்வரை நீயும்கூட உள்ளே வரக்கூடாது...''

''சரிங்க ஆண்டே...''

அவனது பதிலோடு திரும்பிய வேல்மணித்தேவர் நின்று ஒருசில விநாடிகள் மயானத்தைப் பார்த்தார். அரளியும் எருக்கனும் தழைத்துக் கிடக்கும் சமாதி மேடுகள். உருண்டு உடைந்து கிடக்கும் மண் கலயங்கள். நொறுக்கப்பட்டுக் குவிக்கப்பட்டிருக்கும் பாடை மூங்கில்கள்.

கண்ணில் பதியும் அந்தக் காட்சிகள் அவர் முகத்தை அஷ்டகோணலாக்கியது.

''லட்சலட்சமாய் பொன்னை ராஜ்ய நிதியாக கருதி வசூலித்து, நிதம் பூஜித்து பாதுகாத்து விட்டு, இப்படியா கொண்டு வந்து சுடுகாட்டில் கொட்டுவது?''

கேள்வியே கொத்தியது.

ஆயினும் வெள்ளையன் வசம் அகப்பட்டு அவனிடம் கொள்ளை போவதற்கு இது எவ்வளவோ மேலாயிற்றே என்று சமாதானமும் தோன்றியது.

கஜானா ஊழியர்கள் குழி தோண்டியபடியே இருந்தனர். குமரப்பிள்ளை ஜரூர் படுத்தியபடி இருந்தார்.

வேல்மணித்தேவரும் குழிகளை நெருங் கினார். பாடைகள் மயானத்தரை மேல் ஒன்றன் பக்கம் ஒன்றாக கிடத்தப்பட்டு மூடிய நிலையில் இருந்தன.

ஒவ்வொரு பாடையும் பிணத்தோற்றம் காட்டி பணக்குவியல் கொண்டிருந்தது. ஒன்றில் மூன்று லட்சம் பொன். அடுத்ததில் அதோடு தங்கக்கட்டிகளும்... அடுத்ததில் செப்புக் குவியல்... இன்னொன்றில் முத்திரை மோதிரம் முதல் பாளையச் சொத்துக்களைப் பற்றிய சாசனத் தகடுகள்... இப்படி வரிசையாக... சாதாரணமாக யுத்தம் பற்றி உளவு தெரிந்த நொடிப் பொழுதில் கஜானாவை விட்டு பாதுகாப்பான இடத்திற்குச் கொண்டு செல்லப்பட்டுவிட்டது. அவைகள் வரலாற்றிலேயே முதன்முறையாக மயானத்திற்கு பாதுகாப்பு தேடி வந்திருந்தன. வேறு வழியும் இல்லை...

பாளையத்தினைச் சுற்றி நான்கு பக்கத்திலும் நவாபின் படை ஊடுருவி அங்கெல்லாம் முகாமிட்டுவிட்டது.

...போக முடியாது. அங்கங்கே சாவடிகள் ...ருந்து பத்துகாதம்கூட விசாரணைக் கூடங்கள், வாத்துக் கூட்டமுடன் ஊர் விட்டு ஊர் செல்லும், மருத்துவச் சமூக நாடோடிகளைக்கூட நவாப்பின் ஆட்கள் சோதனை, விசாரணை என்று குடைவதாக தகவல் வந்து கொண்டிருந்தன.

இந்த நிலையில் மயானத்தில் புதைக்க எடுத்த முடிவு சரியானதுதான் என்று நடுநடுவே தன்னை வேல்மணித்தேவர் தேற்றிக் கொள்ளவும் செய்தார்.

இப்படி ஆறுதலும் தேறுதலும் கொண்ட மனதோடு மயானத்தை ஊடுருவிப் பார்த்து, அவ்வப்பொழுது யாருமில்லாததையும் ஊர்ஜிதப்படுத்திக் கொண்டார்.

டணங்...!

டணங்...!

வித்தியாசமான சப்தம் காதில் வந்து விழுந்தது.

குழி தோண்டும் கடப்பாறை ஒன்றுதான் எதன் மேலோ மோதி அப்படி சப்தம் போட்டிருந்தது.

''என்ன சப்தம்?''

''ஒன்றுமில்லை பிள்ளைவாள்... ஏதோ கல்போல் தெரிகிறது. அதன்மேல் கடப்பாறை பட்டுவிட்டது.''

''கல்லா, பாறையா?'' - கேட்டபடி எட்டிப் பார்த்தார் குமரப்பிள்ளை. அவர் பார்க்கும் சமயம் அருளுவது போல கல்லால் ஆன ஒரு கை பாகம் கண்ணில் பட்டது.

''என்ன அது... ஏதோ கை போல...''

''அட ஆமாம்... ஏதாவது சிலையோ...?'' தோண்டுபவன் வேகமாகிறான். மண் பிண்டங்களை கட்டிக்கட்டியாக அள்ளி அந்தச் சிலை பாகத்தை முழுவதுமாக ... பிரயத்தனப்பட்டான். அவன் முயற்சிக்குப் பலன் கிட்டியது.

சிலையின் ஒவ்வொரு பாகமும் இப்பொழுது அடைப்பு நீங்கி வெளியே தெரிய தொடங்கின. அவன் உற்சாகமாக கத்தினான்.

''பிள்ளையவர்களே... இது ஏதோ தேவி சிலை போல் இருக்கிறது...'' கத்திக் கொண்டே அந்தச் சிலையை அப்படியே நெம்பி உசுப்பி தூக்க முனைந்தான்.

''பார்த்து... பார்த்து... மயானத்தில் தேவி சிலையா...?'' பிள்ளை மோவாய் வருட வேல்மணித் தேவரும் நெருங்கி வந்து அந்தக் கரிய சிலையைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்.

மற்றக் குழிவெட்டிகளும் கடப்பாறையைப் போட்டுவிட்டு சுற்றிச் சூழ்ந்து கொண்டு பார்த்தனர். வெகுதொலைவில் யுத்த முரசு ஒலிக்கும் சப்தம் வேறு தேய்ந்து காதில் விழுந்தது.

''என்ன இது புதிதாக இருக்கிறது... ஆதிபராசக்தியோ? இல்லை லட்சுமியோ...? இல்லையில்லை கால் பாகத்தில் எருமைத்தலை செதுக்கப்பட்டிருக்கிறது. முகத்தில் வாய் திறந்த நிலையில் நாவு வெளி நீண்டிருக்கிறது. இது ஏதோ வனதேவதைச் சிலை...''

''ஆமாம்... மயான துர்க்கையாககூட இருக்கலாம். வேதபண்டிதர்களை அழைத்து வந்து காட்டினால் தெரிந்துவிடுகிறது.''

ஒன்பது பேருடன் பிள்ளையும், தேவரும் அந்தச் சிலையைப் பார்த்து நிற்க, ஆளாளுக்கு தங்களுக்குத் தெரிந்ததைக் கூறினர். சில நொடிகள் தடுமாறிய தேவர், ''சரி.. சரி... விவாதத்தை மூட்டை கட்டிவிட்டு குழிகளைத் தோண்டுங்கள். தொலைவில் யுத்த முரசு கொட்டும் சப்தம் கேட்கத் தொடங்கிவிட்டது. நாம் நம் பணியை முடித்துவிட்டு யுத்தத்திலும்

... வேண்டும்'' என்று அவர்களை அந்தச் சிலை ஆராய்ச்சியில் இருந்து விலகப் பார்த்தார்.

அவர்களும் திரும்பத்திரும்பப் பார்த்தபடியே குழிகளுக்குச் சென்றனர். திரும்பவும் மண் கவளங்கள் பெயர்ந்து வெளிவிழுந்து குவியலாகியது. அந்தச் சிலை பெயர்ந்து விழுந்து கிடக்கும் மண் குவியல் மேல் வானம் பார்க்க மல்லாந்து கிடந்தது.

பிள்ளை நெருங்கி தேவரை ஒட்டி நின்றபடி பேச்செடுத்தார்.

''தேவரே... இந்தச் சிலையைப் பார்த்தால் உங்களுக்கு என்ன தோன்றுகிறது...?''

''எதுவும் தோன்றவில்லை பிள்ளை. ஊருக்குள் பாளையத்தாரும் படையும் என்ன கதியில் இருக்கிறதோ என்ற கவலையே எனக்குப் பெரிதாக இருக்கிறது...''

''கவலையே படாதீர்கள். பாளையத்தாரை அவரது மாமன் வீடான கடலாடிக்கு கொண்டு சென்றுவிட ஒரு இளைஞர் படை நேற்றே தயாராகி விட்டது. அவருக்கு ஒரு ஆபத்தும் வராது...''

''அவருக்கு சரி... நமது மண்ணின் மறவர்களுக்கு...?''

''நிச்சயம் நமது கூட்டத்தில் ஒவ்வொருவரும் அந்த பறங்கிக் கூட்டத்தில் தலைக்கு இருவர் என்று வீழ்த்தாமல் விழவே மாட்டார்கள். அந்தத் தோட்டாத் தாக்கியையும், பீரங்கி எனும் உருளைக் குண்டுபோடும் குழாயையும் நினைத்தால்தான் எனக்கே சற்று கலக்கமாக இருக்கிறது.''

பிள்ளை சொல்லி வாய் மூடவில்லை. வெகு தொலைவில் ஒரு பீரங்கி குண்டு வெடிக்கும் சப்தம் காதில் வந்து மோதியது.

''இப்போதுதான் சொன்னேன். வெடித்து விட்டது பாருங்கள். கடவுளே... சண்டாளர்களிடம்



இருந்து எங்கள் பாளையத்தைக் காப்பாற்றய்யா...'' கழிவிரக்கப்பட்டு கைகூப்பினார் பிள்ளை. வேல்மணித்தேவரும் உணர்ச்சி வசப்பட்டார்.

''உம் சீக்கிரம் சீக்கிரம்'' என்று குழி தோண்டுபவர்களைப் பார்க்க, அவர்கள் அத்தனை பேர் முகத்திலும் பீதி.

''உம்... சீக்கிரம்... சீக்கிரம்...'' தேவர் பரபரத்தார். ஒவ்வொருவரும் இடுப்பளவு தோண்டியிருந்தனர்.

''சரி... தோண்டியவரை போதும். இருவர் இருவராகச் சென்று பாடைகளைச் சுமந்து வாருங்கள்'' என்று தேவர் ஆணையிடும்போது அதிசயமாக மழைத்துளி ஒன்று பூமிமேல் விழுந்தது. அண்ணாந்து பார்க்கிறார் தேவர். கார்மேகக் கூட்டம் அவசர கதியில் மண்டிக் கொண்டிருந்தது.

''என்ன இது திடீர் என்று மழை... ஆச்சரியமாக இருக்கிறதே...'' பிள்ளை ஆயாசிக்க, மேகக்கூட்டம் புரண்டு படுக்கிறது. அதன் எதிரொலியாக இடி சப்தமும் மின்னல் சாட்டையும் வானில் சொடுக்கப்பட்டது.

''அதிசயம்... பேரதிசயம்... என் வாழ்நாளில் இத்தனை வேகமாக ஒரு மழை வந்து நான் பார்த்ததே இல்லை'' எனும்போதே ஒரு அசுர மின்னல் ஆகாசத்திலிருந்து மயானத்தரைமேல் மல்லாந்தபடி கிடக்கும் அந்தத் தேவி சிலை நோக்கி தன் மின்னல் கரத்தை நீட்டியது.

அனைவரும் பார்த்துக் கொண்டிருக்க அந்த தேவி சிலை இப்பொழுது மண் கவளங்கள் மேல் இருந்து பற்றி எடுக்கப்பட்டு, ஒன்பது குழிக்கும் நடுவில் சில அடி முன் உள்ள இடத்தில் அமர்த்தி வைக்கப்பட்டிருந்தது.

''பிள்ளை... என்னய்யா இது அதிசயம். மின்னலுக்கு இத்தனை சக்தியா...? சிலையை ஒரு

குழந்தையைத் தூக்குவது போல தூக்க உட்கார்த்தி வைத்துவிட்டதே...?''

''என்னது உட்கார்த்தி வைத்துவிட்டதா... எங்கே... ஐயோ எனக்கு கண்ணே தெரிய வில்லையே... எங்கே...? எங்கே...'' - குமரப் பிள்ளை பெரிதாய் கண்களைக் கசக்கியபடி பதறினார்.

''கண் தெரியவில்லையா? என்னய்யா சொல்கிறீர்?''

''அட ஆமாய்யா... மின்னலைப் பார்த்தன் எதிரொலியோ என்னவோ... கடவுளே என் கண்களுக்கு என்னவாயிற்று...?'' - குமரப் பிள்ளை கேவி வெடித்துக் கதற, தேவர் செட்டி மக்களை எதார்த்தமாக பார்க்கிறார்.

அவர்கள் அவர்களுக்குத் தோண்டிய குழியில் சுருண்டு விழுந்து கிடக்கின்றனர். என்னவாயிற்று இவர்களுக்கு...?

மண் இறங்கிய மின்னல் அந்தச் சிலையை எடுத்து வைத்தபோது இவர்களைத் தாக்கி விட்டதா?

பார்த்துக் கொண்டிருந்த என்னை ஒன்றும் செய்யவில்லையே... குமரப்பிள்ளை தள்ளாடித் தடுமாறி கைகளை முன்விட்டுத் துழாவியபடி நடந்து வந்தார்.

''தேவரே... தேவரே... என்னாயிற்று? மின்னல் என் கண்களைக் கொண்டு போய் விட்டதா?''

''அப்படித்தான் நினைக்கிறேன். இதென்ன விபரீதம். குழிதோண்டிய நமது கஜானா ஊழியர்கள் ஒன்பது பேரும்கூட மின்னல் தாக்கி இறந்து கிடக்கின்றார்கள்...''

''என்னது... இறந்துவிட்டார்களா...?''

''ஆம்... பிள்ளை...'' சோகமாக தேவர் பதிலளிக்க, மழை பூமியைத் தொடர்ந்து நினைத்தது.

சடசடவென சப்தம்...

நாசியைக் கிறக்கும் மண் வாசம்.

பிள்ளையும் தேவரும் மழையில் நனையும் தருணம் 'தும் தும் தும்' என்று செவலுக்கு வெளியில் பீரங்கிகள் முழங்கும் சப்தமும், யுத்தகளேபரமும் காதில் மிகத் தேய்ந்து வந்து விழுந்தன.

''தேவரே... ஒரு பக்கம் யுத்தம்... மறுபுறம் இயற்கையின் கொடிய தண்டனை. நாம் என்ன பாவம் செய்தோம்...'' குமரப்பிள்ளை புலம்பல். மழைச்சரம் நடுவே உஷ்ணமாய்த் தாக்கியது.

''புரியவில்லை... எல்லாம் மாயமாக இருக்கிறது. இருப்பினும் முன்வைத்த காலை நான் பின்வைக்க மாட்டேன்... பிள்ளை... இப்பொழுது என்ன செய்யலாம். அதைச் சொல்லுங்கள். பொன்னைக் கொட்டி மூட வேண்டிய குழியில் பிணங்கள் விழுந்து விட்டன. மிரட்டுவது போல் ஒரு சிலை வேறு பூமிக்குள் இருந்து வெளிப்பட்டு நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறது. என்ன செய்யலாம்...?''

''நமது முடிவில் ஏதோ தவறிருக்கிறது. நமது கஜானா செல்வங்களை இனியும் இங்கே புதைக்க வேண்டாம்... வேறு இடம் பார்ப்போம்.''

பொழியும் மழை நீரை வழித்துப் போட்டபடி பேசினார் குமரப்பிள்ளை. அதில் கண்ணீரின் சேர்க்கையும் இருந்தது.

'வேறு இடம் பார்ப்பதா? எங்கே எப்படி?''

''புரியவில்லையே... செந்தூர்வேலா, என்னய்யா இது சோதனை. கால்காசினை எங்களுக்கென எடுத்துக் கொள்ளாமல் நாட்டுப் பற்றோடு நாங்கள் செய்யும் செயலுக்கு இப்படியா தடைகள் வரும்?''

''குமரப்பிள்ளை... மழை பேய் போல பிடித்தாட்டிக் கொண்டிருக்கிறது. பொற்காசுள்ள

பாடைகள் நனைந்து கொண்டிருக்கின்றன. பேசாமல் இந்தக் குழியிலேயே போட்டு மூடுவதுதான் உசிதம். என்ன சொல்கிறீர்...?''

வேல்மணித் தேவர் தெப்பலாய் நனைந்து கொண்டே குமரப்பிள்ளையிடம் சம்மதம் கேட்கும்போது மயானத்தான் மாசாணம் அலறிப்புடைத்தபடி ஓடி வந்து கொண்டிருந்தான்.

''ஆபத்து... ஆபத்து...'' என்று கத்திக் கொண்டே...

## 8

முத்துராமலிங்கம் மயானம் நோக்கிச் செல்வதை அருள்மணி பார்த்துவிடக் கூடாது என்று அவனை வேறுபுறம் அனுப்பிவிட்டுத் தான் சென்றார். ஆனாலும் தெரிய வேண்டும் என்று விதி இருந்தால் அதை யாரால் மாற்ற முடியும்?

''ஏங்க தம்பி... ஐயா டவுனுக்கா போறாரு?''

போர்வெல் போடுபவர்களில் ஒருவன் அருள்மணியை நெருங்கி வந்து கேட்டான்.

''தெரியாதே... அப்பா இங்கதானே இருந்தாரு...''

''இல்லீங்களே... மேற்கு பாதை வழியா மயானம் பக்கமா போன மாதிரி இருந்திச்சு... ஒரு வேளை சுருக்குப் பாதைல போய் மயானம் தாண்டி மூக்கு ரோட்ல பஸ் பிடிச்சு டவுனுக்குப் போறாரோன்னு நினைச்சேன்...''

''அப்படியா... என்கிட்டே எதுவும் சொல்லலையே...''

''இப்ப அவசியம் அவரைப் பாக்கணுங்க. அவர் சொன்னபடி இருநூறு அடி ஆழத்துக்கு பூமில தொளை போட்டாச்சு. தண்ணி தெளிவா சிக்கலை. இன்னும் நூறு அடி போனாத்தான் நல்லது.''

''நீங்க போங்க... போனாத்தான் தண்ணி கிடைக்கும்னா போகத்தானே வேணும்?''

''அது எப்படிங்க... அடிக்கு முப்பது ரூவான்னு பேச்சு! மேல நூறு அடி போனா மூவாயிரம்ல எச்சா வருது...''

''பரவால்ல போங்க... நான் சொல்லிக்கறேன்...''

''சந்தோஷங்க... ஆரம்பத்துலேயே இந்த இடம் வேண்டாம்னு சொன்னேன். அப்பாதான் கேக்கல...''

''ஏன் இந்த இடத்துக்கு என்ன?''

''இது மனை சாஸ்திரப்படி அக்னி மூலை தம்பி. இங்க கிணறோ - போர்வெல்லோ வரக்கூடாது. அதோ ஈசான்யம் அங்கதான் வரணும்.''

''சாரி... இந்த சாஸ்திரத்துல எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லை. நீங்க இங்கேயே பாருங்க...''

''அப்படிச் சொல்லாதீங்க தம்பி... சாஸ்திரப் படி நீங்க செஞ்சு பாருங்க... தொட்டதெல்லாம் பொன்னாகும்...''

''அட என்னய்யா இது கொடுமை... பூமியிலயும் பிரிவா... அதுல ஒரு இடம் ஒசத்தி ஒரு இடம் தாழ்த்திங்கற கணக்கா, இதெல்லாம் சொல்லும் போதே உங்களுக்கு சிரிப்பா வரலை...?''

அவன் கணிசமான கோபத்துடன் கேட்டான். அவர்கள் வாயை மூடிக் கொண்டார்கள். தொடர்ந்து போர்வெல் ராடுகளைச் சேர்த்துச் சேர்த்து பூமியைக் குடையத் திரும்பினர்.

''ஐயா கும்பிடுறேங்க... எப்ப ஊர்ல இருந்து வந்தீங்க?''

பக்கமாய் ஒரு குசலம். குரல் வந்த பக்கம் திரும்பினால், தோட்டக்காரன் அம்புலி.

''யாரு அம்புலியா...? இவ்வளவு நேரம் எங்க போயிட்டே?''

''அருவாக்கு சாணை பிடிச்சுட்டு வரப் போனேன்...''

சொல்லியபடி சாணை பிடித்த அருவாளை அருள்மணி எதிரில் காட்டினான். முகத்தில் அபரிமிதமான பணிவு உணர்ச்சிகள்.

''ஒரு இளநி வெட்டட்டா தம்பி...'' என்று பக்கத்து தென்னை மரத் தண்டைப் போய் பற்றினான்.

''வெட்டு. குடிப்போம்.''

சொன்ன பத்தாவது நொடி பரபரவென மரம் ஏறிவிட்டான் அம்புலி. நெடி துயர்ந்த மரம். கொத்துக் கொத்தாய் குலைகள். அதில் நல்ல பூசின இளநீராய்ப் பார்த்து வெட்ட முனையும் போதுதான், அந்தக் காட்சி கண்ணில் பட்டது. மயான வெளியில் பிணம் வேகும் எரிமேடையை ஒட்டி ஒருவனை சண்டி கோவில் கிழவன் கழுத்தை நெறித்துக் கொண்டிருக்கிறான். பக்கத்தில் நின்று பார்த்துக் கொண்டிருக்கிறார் முத்துராமலிங்கம். அதைப் பார்த்த கணத்தில் அவன் கண்கள் ஏராளமாய் விரிகிறது. கை அரிவாள் மேலிருந்து நழுவிக் கீழே விழுந்தது.

''ஏய் என்னாச்சு...? அரிவாளை கீழ போட்டுட்டு அங்க என்ன பண்றே...?''

கீழிருந்து அருள்மணி மேலே அண்ணாந்து பார்த்து கேட்க, அம்புலி ஏறின வேகத்தில் இறங்க முயற்சிப்பது தெரிந்தது.

சில விநாடிகளில் தரை தட்டின அவன் கால்கள். நிறைய வியர்த்திருந்தான்.



''என்ன அம்புலி? என்ன ஆச்சு...? ஏறினே... திடீர்னு இறங்கிட்டே... பயங்கரமா வேர்த்து வேற கொட்டியிருக்கு. என்ன ஆச்சு...''

''தம்பி மயானத்துல கொலை... கொலை...''

''மயானத்துல கொலையா... என்ன சொல்றே...?''

''ஏறிப் பாருங்க. சீக்கிரம்...''

''என்னய்யா சொல்றே?''

''மரத்துல சீக்கிரம் ஏறுங்க. உச்சியில இருந்து மயான எரிமேடைப் பக்கம் பாருங்க தெரியும். சீக்கிரம், தம்பி...''

அம்புலியின் அவசரப்படியே மரத்தண்டைப் பற்றி சற்று தடுமாறியபடி மேல ஏற ஆரம்பித்தான் அருள்மணி. பசுமட்டைகளைப் பற்றி பிடித்து வாகாக ஏறி தென்னங்குலைகயை ஒரு கையாலும், மட்டையை மறு கையாலும் பிடித்துக் கட்டிக்கொண்டு, மயானம் பக்கமாய்ப் பார்க்கும் போது முத்துராமலிங்கமும், அந்த கிழவனும் ஒருவனின் கைகளை ஒருவரும், கால்களை ஒருவரும் என்ற கணக்கில் பிடித்து, பக்கமாய் எரிந்து கொண்டிருக்கும் சுடுகாட்டுச் சிதை யிலுள்ள பிணத்தின் மேலேயே தூக்கிப் போட நெருப்பு அவன் சடலத்தையும் சேர்த்துப் பற்றுகிறது.

என்ன கொடுமை இது? - அருள்மணியையும் அடுத்த நொடி ஆக்ரமித்தது பயமும் பதட்டமும்.

மரத்தில் இருந்து வேகமாய் கீழிறங்கி அம்புலியையும் அழைத்துக்கொண்டு மயானம் நோக்கி ஓடத் தொடங்கினான் அருள்மணி.

''தம்பி பயமா இருக்குது... இப்ப எதுக்கு மயானத்துக்குப் போறோம்? நல்லதில்ல தம்பி...''

- இளைப்பெடுக்க ஓடிவரும்போது அம்புலி பேசுவது எதுவும் காதில் விழவில்லை. ஒரு மிகப்பெரிய அநியாயத்தைப் பார்த்துவிட்ட

பதைப்பும். அதில் தன் தந்தைக்கே தொடர்பு இருப்பதைத் தாங்க முடியாத துடிப்பும் அவனை வதைத்துக் கொண்டிருக்கிறது. ஓட்டமாய் நடந்து வந்து மயானத்துக்குள் நுழைந்தான். இடித்த எல்லைச் சுவரைத் தாண்டி சருகுகளை மிதித்துக் கொண்டு முன்னேறுகிறான்.

எரிமேடையை நெருங்கியபோது சற்றுமுன் பேசிய வெட்டியானின் உடல் முக்காலுக்கும் மேல் வெந்து முடிந்திருந்தது. அப்பாவையோ அந்தக் கிழட்டு மனிதனையோ காணவில்லை.

சுற்றிச்சுற்றி பார்த்தான்.

"என்ன மாயம் முதலாளியைக் காணலையே."

அம்புலி சடைத்துக் கொள்கிறான்.

"ஆனாலும் இது அநியாயம் அம்புலி... அப்பாவும் அந்தக் கிழவனும் ஏன் இப்படிச் செஞ்சாங்கன்னு தெரியலையே..."

எரியும் சடலத்தை பார்த்தபடி மருகினான் அருள்மணி.

"சொல்றேன்னு தப்பா எடுத்துக்காதீங்க தம்பி. அப்பா கொஞ்சம்கூட சரியில்லை. அவரைப் பத்தி..."

அம்புலி எதையோ சொல்ல முயலும்போது, "யாரது?" என்று ஒரு குரல். திரும்பிப் பார்த்தால் அந்தக் கிழவன்.

"இங்க என்ன பண்றீங்க?" அவனிடமிருந்து கேள்வி.

"நீ இங்க ஒருத்தனை எதுக்கு கழுத்தை நெறிச்சு கொன்னே... அதச் சொல்லு முதல்ல..."

"வெட்டியானை நான் கழுத்த நெறிச்சுக் கொன்னேனா...?"

அந்தக் கிழவனின் முகத்தில் அதிர்ச்சி பரவுகிறது.

"ஆமாம்... நான் பார்த்தேன். கூட என் அப்பாவும் இருந்தார். எங்க அவரு...?"

"அருள்மணி..." அவன் கேள்விக்கு பதில் சொல்வது போல் அவரும் வருகிறார். கூடவே வெட்டியான்.

"அப்பா இங்க ஒரு கொலை நடந்துச்சு..."

"கொலையா... என்ன உளர்றே?"

"இல்ல... இல்ல... அப்ப அந்த பொணம்? அம்புலி நாம இரண்டு பேரும் மரத்துல இருந்து பார்த்தோமே... அதெல்லாம் பொய்யா...?"

"அந்தப் பொணமா... அவன் மாரடைப்பால செத்துப்போயிட்ட மருதாச்சலம். பயத்தாலன்னு ஊருக்குள்ள கேட்டா சொல்வாங்க. இங்க இருக்கிற சண்டி அடிச்சிட்டதாகவும் சொல்வாங்க. இது அவன் பொணம்தான்..."

"அப்ப நாங்க பார்த்தது?"

"எங்க பார்த்தீங்க... எதை பார்த்தீங்க...?"

"இளநீர் வெட்ட தென்னை மரம் ஏறினப்போ மேல இருந்து பார்த்தேன். ரெண்டு கண்ணால பார்த்தேன்."

"அருள்மணி... இப்படி உளறத்தான் ஊருக்கு வந்தியாக்கும். போ... போய் வேலையப் பாரு. புதுசா போர் போடுறோமேன்னு மயான சண்டிக்கு கற்பூரம் ஏத்த நான்தான் இந்தப்பக்கம் வந்தேன். கற்பூரம் ஏத்தி சாமி கும்பிட்டேன். அவ்வளவுதான். மத்தபடி நீ சொல்றதெல்லாம் பிரமை. போ... போய் வேலையைப் பாரு... நட."

முத்துராமலிங்கம் அதட்டினார். அதட்டியதோடு அவரே முதலில் அங்கிருந்து கிளம்பினார். கிழவனும் தாடியை நீவிக்கொண்டு கோயிலின் இடிந்த திண்ணை நோக்கி சென்றான்.

திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு வருகிற அருள்மணிக்குத் தலையை சுழற்றுகிறது. அவனுக்கு மேல் அம்புலிக்கு...

# 9

"ஆபத்து... ஆபத்து..." என்று கத்தியபடி வரும் மயானத்தானின் குரல் கேட்டு வேல்மணித் தேவரும் குமரப்பிள்ளையும் சிலிர்த்து நிமிர்கின்றனர்.

கண் பார்வை போய்விட்டாலும் குமரப் பிள்ளையிடம் வீரம் வற்றிவிடவில்லை. இடை வாளை உருவிக் கொண்டு கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது. "வேல்மணித் தேவரே... என்ன ஆபத்து. யாரால்... ஐயோ இப்பொழுது பார்த்து பார்வை போய்விட்டதே... நான் என்ன செய்வேன்" என்று புலம்பினார் குமரப்பிள்ளை.

"பதறாதிருங்கள்... மயானத்தானே கூறட்டும். என்ன ஆபத்து மாசாணம்?"

"ஐயோ... நவாபின் படைகள் நமது நெற்கட்டும் செவல்கோட்டையை முதல் தளம் வரை இடித்துவிட்டதாம். அதுமட்டுமல்ல, கஜானா மண்டபத்தையும் தாக்கிவிட்டு, அங்கு ஒன்றுமில்லை என்றறிந்து ஊருக்குள் ஒரு இடம் பாக்கி இல்லாமல் கஜானா செல்வத்தைத் தேடி நுழைந்து கொண்டிருக்கிறதாம் ஒரு படை.

தாங்கள் பிணங்களுடன் மயானம் வந்ததை அறிந்து அதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது என்றும் யூகித்து விட்டனராம். மாபூஸ்கான் என்பவனும், வெலிங்டன் என்பவரும் பெரும் படையுடன் நமது மயானம் நோக்கி உங்களைப் பிடிக்க வந்து கொண்டிருப்பதாக ஒற்றன் ஒருவன் வந்து என்னிடம் தகவல் தந்துவிட்டுச் சென்றான்..."

பெருமூச்சும், சிறுமூச்சும் கலந்து வாங்க மாசாணம் சொல்லி முடித்தான். அதை ஆமோதிக்கிறார் போல மயானத்துக்கு வரும் பாதை மேல் ஒரு அரைக்காத தொலைவில் புரவிப்படை வரும் திமுதிமு சப்தம் துல்லியமாக காதில் விழுகிறது.

கொட்டும் மழை இருளை அரவணைக்கப் போகும் அந்தி மாலைப் பொழுது என்று எதைப் பற்றியும் எங்களுக்கு கவலையில்லை என்பது போல் மூசுப்கானின் படை பாய்ச்சல் காட்டுவதை வேல்மணித்தேவரும் புரிந்து கொள்கிறார்.

உடனடியாக ஒரு உபாயத்துடன், "மாசாணம், வா இங்கே... சீக்கிரம்" என்று அழைத்தார்.

"ஐயா..."

"இந்தப் பாடைகளில்தான் கஜானா செல்வம் இருக்கிறது. அதைத் தோற்பைகளில் போட்டு அடக்கியிருக்கிறேன். உடனடியாக அந்தப் பைகளை குழியில் போட்டு ஒன்பது பேர் பிணங்களையும் போட்டு மூடிவிடு. அதில் முதல் குழியில் நானும், கடைசிக் குழியில் குமரப் பிள்ளையும்கூட பிணங்களாகப் படுத்து விடுகிறோம். நாங்கள் மூச்சுவிட தோதாக அதோ அந்தக் கொடியின் தண்டுப் பாகத்தை குழாய் போல பயன்படுத்திக் கொள்கிறோம். நவாபின் படை வந்து தோண்டிப் பார்த்தால் விட்டுவிடு.

இறந்தவர்களை புதைத்துவிட்டு உரியவர்கள் சென்றுவிட்டதாக கூறு. நம்ப மறுத்து குழிகளைத் தோண்டினால் அப்பொழுது நான் பார்த்துக் கொள்கிறேன். என்ன குமரப்பிள்ளை சரிதானே?"

"வேறு வழி ஏது...? உடனே செயல்படுவோம், சீக்கிரம்..." இருவரும் வேகப்படுகின்றனர். ஒவ்வொரு பாடையிலும் குதிரை லாயத் தோல் தச்சனைக் கொண்டு உருவாக்கிய கருத்த எருமைத் தோலிலான நீண்ட பை நிரம்பிய தங்க நாணயங்கள், நகைகள்...

இரண்டு பேர் சேர்ந்தும் சுமப்பது பெரும் பாடாக இருந்தது. தரதரவென்று இழுத்துச் சென்று ஒன்பது குழிகளில் உள்ள கஜானா ஊழியர்களின் பிணங்களையும் தூக்கி வெளியேக் கிடத்தி விட்டு, அதில் தோல் பையை உள்தள்ளி மண்ணை இழுத்துப் போட்டான் மாசாணம். அசுர வேகம் காட்டினான்.

நடுவில் ஓடிச்சென்று கொடி ஒன்றின் விரல் பருமனில் உள்ள தண்டுப்பாகத்தைப் பற்றி எடுத்து வந்து வாயில் வைத்து ஊதிப் பார்க்கிறார் வேல்மணித்தேவர்.

காற்று உள்புகுந்து வெளியே உள்ளே உள்ள இடைவெளிகள் வழியாக சப்தமுடன் வெளியே வருகிறது. நல்லவேளை சீறிவந்த மழையிடமும் இப்பொழுது மெலிந்த தூறல்.

தடவியபடி நிற்கும் குமரப்பிள்ளை வசமும் ஒன்றுக்கு இரண்டாக தண்டு பாகங்களைத் தருகிறார். ''குமரப்பிள்ளை... இதை வாயில் செருகிக் கொண்டு குழியில் படுங்கள். இறப்பதற்கு முன்பே இறந்தவர்கள் பெறும் வாய்ப்பை காலம் நமக்கு அளித்திருக்கிறது. அதையும் அனுபவித்துப் பார்த்துவிடுவோம்.''

சொல்லியபடி குமரப்பிள்ளையை கடைசிக் குழிக்கு அழைத்துச் சென்று படுக்க வைத்து மண்ணை இழுத்துப் போட்டு மூடினார்.

தண்டு பாகம் வாயில் இருக்க, அதன் மறுமுனை சமாதி வடிவம் பெற்ற மண் சரிவில் வெளியே காற்றை உறிஞ்ச தோதாக முடிகிறது.

''ஐயா... நீங்கள் வாருங்கள் முதல் குழிக்கு...'' மாசாணம் அவரை அழைக்கும்போது படை மயான வாயிலில் நுழைந்துவிட்டது.

மாசாணம் இனி நான் குழிக்குள் படுத்துத் தப்புதல் சாத்தியமில்லை. மயான பின் வழியாக ஓடித் தப்பித்துக் கொள்கிறேன்.

''நம் தலைவர் மேல் ஆணை. நமது பாளையம் மேல் ஆணை. நம்மை காத்து ரட்சிக்கும் சங்கரநாராயணர் மேல் ஆணை. செல்வங்களை நவாபின் படை கொண்டு சென்றுவிடாதபடி காத்தல் உன் பொறுப்பு வருகிறேன். பின்னர் சந்திக்கிறேன்...''

வேல்மணித்தேவர் மயான பின் வெளியில் ஓடினார்.

கச்சிதமாக உள்ளே புகுந்த நூறு பேருக்கும் மேலான குதிரைப்படை. சமாதி மேடுகளை ஏற்கனவே மழை நீர் கரைந்திருந்ததைப் பார்த்தது.

அதில் குதிரையின் குளம்படிகள் படுகையில் மண் கட்டிகள் கவளம் கவளமாக பெயர்ந்தன.

ஆகிருதியான இரண்டு வெண்ணிறப் புரவிகள் முன் வந்தன.

அவர்களை துளியும் லட்சியம் செய்யாத வனாட்டம் மாசாணம் குழிகளை மூடிக் கொண்டிருந்தான்.

''ஏய்...'' ஒரு குதிரை வீரன் அழைத்தான். மாசாணம் திரும்பவேயில்லை. நடுவில் மின்னல் ஒன்று தனது சவுக்கைச் சொடுக்கியது. இடி சப்தமும் பெரிதாக காதைப் பிளந்தது.

குதிரைகள் பயந்து தங்கள் பிடரி உசும்ப முன் கால்களைத் தூக்கி வீரர்களைச் சாய்க்கப் பார்த்தது.

அடுத்த கணம் ஒருவன் குதிரையை விட்டுக் கீழே இறங்கினான். மாசாணத்தை நெருங்கி ஆவேசமாக அவன் தோளைப் பற்ற கிட்டே சென்றான். கால்கள் சேற்றில் அமுங்க பிணக் குழி ஒன்றில் தடுமாறி விழுந்தான்.

அவன் விழுவதைப் பார்த்த பிறகே மாசாணம் பின் பக்கம் திரும்பினான். தன்னைச் சுற்றி வளைத்து நிற்கும் குதிரைப்படையை அப்பொழுதுதான் பார்ப்பவனாட்டம் கருதி கண்ணிரண்டை அகட்டி விரித்தான்.

''ஏண்டா நாயே... கத்துகிறோம், உன் காதில் விழவில்லையா?'' மழை நீர் மூக்கில் ஒழுக ஒருவன் குதிரை மேலமர்ந்தபடி கேட்பதைப் பார்த்து காதில் விழாத பாவனையில், ''நீங்கள் எல்லாம் யார்?'' என்று கேட்டான்.

''என் கேள்விக்கு நீ பதில் சொல்... இதென்ன மழையிலும் பிணக்குழிகளை மூடிக்கொண்டு?''

''ஓ... இறந்து கிடக்கும் இந்த வீர இளைஞர்களுக்கு அஞ்சலி செலுத்த வந்திருக்கிறீர்களா?''

''இவன் என்ன... நாம் ஒன்று கேட்டால் இவன் ஒன்று சொல்கிறான். இவன் என்ன செவிடனா?''

- இப்படிக் கேட்பவனுக்கு குறுந்தாடி இருந்தது. கண்களில் பூனை விழியம்சம். தலைப்பாகத்தில் உருக்குச் சட்டியை கவிழ்த்து அதன் ஓரத்தில் சங்கிலிப் பிரிகளை கட்டியது போல தலைக்கவசம்.

ஓ. இவன்தான் மாபூஸ்கானோ...?

மாசாணம் அவனை எடையிடும் அதே தருணம் ஒருவன் பார்வை அங்கு மேடையிட்டது போல அமர்ந்திருக்கும் அந்தக் கல் விக்ரகம் மேல் திரும்பியது.

''இது என்ன விக்ரகம்?'' கேள்வியோடு ஒரு வீரனின் குதிரை அதை நெருங்கியது.

''ஹுசூர்... இது ஏதோ வினோத உருவம். இப்பொழுதுதான் தோண்டி எடுத்தாற்போல் இருக்கிறது'' என்றான் அவன்.

''வந்த வேலையைப் பார் நவாஸ்கான். கஜானா காப்பாளன் வந்தானா என்று இந்த நாயிடம் கேள்...''

மாபூஸ்கான் என்னும் அந்த குறுந்தாடி அந்த வீரனை திசை திருப்பினான்.

''ஏய்... செவிடா. இந்தப் பிணங்களை புதைக்க வந்தது யார்... கஜானா காப்பாளர்

வேல்மணித் தேவர்தானே?'' - குதிரையைக் கட்டுப்படுத்திய நவாப்கான் திரும்ப மாசாணத்தை கேள்வியால் வளைத்தான். அவன் குதிரை அப்படியும் இப்படியும் நகர்ந்து முதலில் மூடப்பட்ட குமரப்பிள்ளை கிடக்கும் சமாதியை ஓட்டிச் சென்று அசைந்தபடியே நிற்கிறது. அதன் கால்கள் எங்கே கொடித் தண்டை நசுக்கி விடுமோ என்று மாசாணம் அஞ்ச, அதே போல் நடக்கிறது.

''ஏய் உன்னைத்தான்... காதில் விழ வில்லை?''

நவாஸ்கான் கேள்வியோடு குதிரையி லிருந்து கீழே குதித்தான்.

''என்ன கேட்டார்கள்?''

''இங்கே சற்று முன் வந்தது யார்?''

''யார் வந்தார்கள் என்றா கேட்கிறீர்கள்?''

''அப்பா... இப்பொழுதாவது புரிந்ததே... யார் வந்தது? உண்மையைச் சொல்...''

''அரசாங்க அதிகாரிகள் வந்தனர். கஜானா அதிகாரி வந்தார்...''

''வந்தாரா... எங்கே அந்த மனிதர்? எங்கே... எங்கே...?''

''அவர் அப்போதே போய்விட்டாரே..!''

''போய் விட்டாரா?''

''ஆமாம்... குதிரை ஒன்றின் மேல் மூட்டைகள் மிகுதியாக இருந்தன. வந்தவர் இந்த வீரர்களுக்கு வீர வணக்கம் செலுத்திவிட்டு, அதோ, அந்த பாதை வழியாகத்தான் போனார்...''

வேல்மணித்தேவர் தப்பி ஓடிய பாதைக்கு நேர் எதிர் திசையை மிக புத்திசாலித்தனமாகக் காட்டினான் மாசாணம்.

''இவன் பொய் சொல்கிறானோ?'' - மாபூஸ்கான் இடையிட்டான்.

''காதே சரியாக கேட்கவில்லை. நாம் வந்ததே தெரியவில்லையே ஹுசூர். இருப்பினும் இவன்

மேல் ஒரு கண் வைப்போம். இப்போதைக்கு அந்த பாளைய விசுவாசி தப்பிவிட்டான். அவனை விடக்கூடாது. கிளம்புவோம்...''

''வெலிங்டன் வாட் யூ ஸே?'' மாடூசின் கேள்வி அந்தக் கூட்டத்தில் ஒரு வெள்ளையனை நோக்கிப் பாய்ந்தது.

''நௌ லெட் அஸ் மூவ். லேடர் வி வில் டிசைட். சேம் டைம் ப்ளீஸ் பேக் த ஸ்கல்ப்சர் ஐ லைக் இட்...''

வெலிங்டன் எனும் வெள்ளையன் அப்போதைக்கு கிளம்பலாம் என்று சொல்லி விட்டு குழிக்குள் இருந்து வெளிப்பட்டு மின்னல் கரங்களாலேயே தூக்கி வைக்கப்பட்ட அந்த கற்சிலையை எடுத்துக் கொள்ளலாம் என்றான்.

அடுத்த நொடி ஒருவன் குதிரையை விட்டு இறங்கி அதை நெருங்கித் தூக்கச் சென்றான்.

தொடாதே என்பது போல வானிலிருந்து ஒரு இடி சப்தம். மின்னல் ஒன்றின் வேகத் தாக்கம். அவன் சிலை முன் அப்படியே கரியாகி நிற்பதை அடுத்த சில விநாடிகளில் மொத்தக் கூட்டமும் பார்க்கிறது.

மாசாணத்திற்கு புல்லரிப்பேற்பட்டது.

மிக அதிகபட்ச மழைத்துளிகள் கற்கட்டிகள் போல தரையிறங்கத் தொடங்க, மரக்கிளை ஒன்று முறிந்து அந்த மயான வெளி மேல் நிற்கும் குதிரை வீரர்கள் மேல் விழுகின்றது.

கூட்டம் நாலா பக்கமும் பிரிகிறது.

''சம்திங் டேஞ்சர்... லெட் அஸ் மூவ்... மூவ்... கமான்...'' கூட்டத்தில் அந்த வெலிங்டனின் குரல் தனியே கேட்டது. இருப்பினும் சில குதிரைகளும் வீரர்களும் மரக்கிளை முறிவால் பாதிக்கப்பட்டு நொண்டினர்.

மழையும் தன் வீச்சைக் கூட்டுகிறது.

''மூவ்... கமான் மூவ்...''



''திரும்புங்கள்... பகல் பொழுதில் வருவோம்.''

கட்டளைகள் இட்ட கையோடு மாடூசின் புரவியும், வெலிங்டனின் புரவியும் மயான பாகத்தை விட்டு வெளியேறின.

அடி விழுந்த குதிரைகளும், மற்ற வீரர்களும் ஒருவருக்கொருவர் உதவியாக ஒருவரை ஒருவர் பற்றிக்கொண்டு அங்கிருந்து விலகிச் செல்ல, மாயானத்தில் திரும்பவும் அந்த பிரதேசத்திற்கே உரித்தான அமைதி.

அப்பாடா...

நல்லவேளை நினைத்தது போல் பெரிதாக எதுவும் நடந்து விடவில்லை. ஆனால் ஒன்று இந்த சிலைக்கு நிச்சயம் ஏதோ ஒரு சக்தி இருக்கிறது.

மாசாணம் பெருமூச்செறிந்தான். சட்டென்று குமரப்பிள்ளை நினைவு வந்து அந்த சமாதி நோக்கி ஓடினான்.

அந்தச் சண்டாளன் குதிரை இந்த மேட்டின் மேல் தன் கால்களால் உளம்பிற்று... என்ன ஆனதோ... ஏது ஆயிற்றோ...?

கேள்விப் பதைப்போடு மண் கவளங்களை வேகமாக விலக்கி குமரப்பிள்ளையைத் தேடும் அவன் கரத்திற்கு அவரது மூச்சு நீங்கிய சடலம்தான் அகப்பட்டது. அடுத்த நொடியே மாசாணம் மனதில் துக்கப் பிரவாகம்!



# 10

வீட்டிற்குள் நுழையும் போதே கோழிக் குழம்பு வாசம் மூக்கை நிரப்பியது... தங்கைகள் வளர்மதியும் வாசுகியும் சமையல்கட்டில் சாமர்த்தியம் காட்டிக் கொண்டிருந்தனர்.

குருணிக்கிழவி புகையிலையை உள்ளங் கையில் வைத்து அரக்கிக் கொண்டிருந்தாள்.

உள்ளே நுழையும் அருள்மணியைப் பார்த்து, "எப்படிடா இருக்கு நம்ம தோட்டம்...?" என்று கேட்டபடி புகையிலையை கடைவாயில் போட்டுப் புதைத்தாள்.

"தோட்டத்துக்கென்ன நல்லாதான் இருக்கு... ஆனா மனுஷங்கதான்..." அருள்மணி எதையோ சொல்ல வந்து மிடறு விழுங்கினான்.

"ஏன் மனுஷங்களுக்கென்ன?" கிழவி கிடுக்கிப்பிடி போட்டாள்.

"ஒண்ணுமில்ல..."

"அப்படின்னா ஆயிரம் சங்கதி இருக்குடா பேராண்டி..."

"கொஞ்சம் வாய மூடு... ஆயிரம் இல்ல... இந்த ஊர்ல லட்சம் சங்கதி இருக்கு... அதுலயும் என் அப்பன்கிட்டயே அது இருக்கு..."

கோபத்தில் அவன் தொண்டைக் குழியில் வியர்வை பிளிற்றியடிக்கிறது.

"அடி ஆத்தி... என்னடா தம்பி இந்த வெடி வெடிக்கறே?" குருணிக் கிழவி எழுந்து இடுப்பில் கை பதிக்கிறாள்.

கச்சிதமாக முத்துராமலிங்கமும் அப்பொழுது உள்ளே நுழைகிறார்.

"ஏலே ராமு... என்னடா இவன் கோபத்துல சடைக்கறான். தோட்டத்துல எதுனா வில்லங்கமா?"

"ஒண்ணுமில்ல ஆத்தா... மயானம் பக்கத்துல எதைப்பாத்தானோ எப்படிப் பாத்தானோ, என்கிட்டயே ஏழரை இழுக்கறான்."

"அடி ஆத்தி... மயானம் பக்கம் போனியாடா தம்பி... நான் போவேணாம்னு சொன்னேன்ல..."

அருள்மணி கிழவி பக்கம் திரும்பி கூர்மையாக பார்க்கிறான்.

"ஏன் போனா என்ன?" கைகளைக் குத்திக் கொண்டு கேட்கிறான்.

"பாவி மவனே... அது மத்த ஊர் மயானம் மாதிரி இல்லடா கண்ணு. அந்த நாள்ளையே மந்திரக்காரங்க வந்து போற இடம்டா..."

"சரி அதுக்கென்ன?"

"அதுக்கென்னவா... பேயும் பிசாசும் திரியற இடம்டா அது. உசரோட இருக்க வேண்டாமா நீ?"

"இது இண்டர்னெட் யுகம். உன் பேய்ப் பிசாசுகளை தூக்கி ஒடப்புல போடு. பேயாம் பேய்."

"அவன்கிட்ட ஏன் ஆத்தா போய் வாயக் கொடுத்துகிட்டு. நாலு எழுந்து படிச்சிட்டாலே எதையும் நம்பாம பேசத்தான் சொல்லும். போய் வேலையப்பாரு. நாலு நாள் இருக்கப் போறான். எதையாவது பேசிட்டுப் போகட்டும்..." முத்துராமலிங்கம் சர்வ அலட்சியமாக சொல்லி விட்டு கொல்லைப்புறம் சென்றார்.

அவ்வளவையும் அம்மா சீனியம்மா அரிசியில் கல் எடுத்தபடி பார்த்துக்கொண்டுதான் இருந்தாள். மெல்ல அருள்மணியை நெருங்கி வருடினாள்.

"என்ன அருளு கலாட்டா?"

"ஒண்ணுமில்லம்மா..."

"அப்பா ஏதும் தப்பு பண்ணினாரா?" வெடுக்கென்று மிக நேராக அவள் அப்படிக் கேட்பாள் என்று அவன் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.

கணிசமாய் அதிர்ந்தான்.

"சொல்லு... மயானத்தைச் சுத்தி எதையாவது தோண்டிகிட்டு இருந்தாரா... இல்லை அதுல யாரையாவது புதைச்சுகிட்டு இருந்தாரா?"

"அம்மா..."

"சும்மா சொல்லுப்பா... எதுக்காக இத்தனை கோபம், குழப்பம்...?"

"அம்மா... நம்ப ஊர்ல ஏதாவது புதையல் இருக்குதா என்ன?"

"அது எனக்குத் தெரியாது... ஆனா இருக்கிறதா ஒரு நம்பிக்கை உண்டு..."

அவள் ஒப்புதல் தரவும் அருள்மணியின் கண்கள் ஒடுங்கிச் சுருங்கின.

"அப்படி ஒரு புதையல் அந்தச் சுடுகாட்டில் தான் எங்கேயோ இருக்குன்னும் சொல்லுவாங்க. அதை எடுக்கத்தான் உன் அப்பா பாடா பட்டுகிட்டிருக்காரு."

"இதெல்லாம் எந்த அளவுக்கும்மா உண்மை?"

"உண்மையா இல்லையாங்கறது எனக்குத் தெரியாது. ஆனா அது பொய்யுன்னும் ஒதுக்கிட இடமில்லப்பா..."

"என்னம்மா குழப்பறே..."

"குழப்பல தம்பி... நான் உனக்கு அப்புறமா எல்லா விசயமும் சொல்றேன். நீ போய் குளிச்சிட்டு வா. சாப்பிடு. பிறகு பேசலாம்..."

சீனியம்மாள் அரிசி முறத்தோடு நின்று அவனோடு பேசுவதை, கொல்லையில் நின்று பார்த்துக் கொண்டே இருந்தார் முத்துராமலிங்கம்!

## 11

நெற்கட்டும் செவலும் வாசுதேவ நல்லூரும் வல்லான் புதூரும் பனையூரும் ஒட்டு மொத்தமாய் யூசுப்கான் வசமாகிவிட்டது.

"அசைக்க முடியாது, அணுத்துகளைக்கூட உதிர்க்க முடியாது என்று கருதிய நெல்கட்டும் செவல்கோட்டை இருந்த இடத்தில் இப்பொழுது மண் மேடும், கற்குவியலும்தான் மண்டிக் கிடக்கின்றன."

குறுக்கிலும் நெடுக்கிலும் நவாபின் குதிரைகளின் பவனி.

இடிந்து கிடக்கும் அந்த வல்லக்கோட்டையை ஒரு வடக்கிந்திய ஓவியன் பார்த்துப் பார்த்து ஓவியமாய் தீட்டிக் கொண்டிருந்தான்.

இடிபாடுகளுக்கு நடுவில் நிறைய மனித உடல்கள் கிடப்பதால் வல்லூறுக் கூட்டம் வந்து தங்கி, பின் புடைத்தெழுந்து வானம் ஏறி பின், மீண்டும் இடிபாட்டுக்கு நடுவே ஏதோ ஒரு சதைப்பாகத்தை பார்த்து கீழிறங்கியது.

ஓவியன் ஓவியம் தீட்டுவதை பக்கமாய் இருந்து பார்த்துப் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தான் யூசுப்கான் என்னும் மருதநாயகம்.

"உம்... சீக்கிரம் வரைந்து முடி... இந்த ஓவியத்தைப் பார்க்கும் நவாப் முகமது அலி எக்காளம் இட வேண்டும். நெற்கட்டும் செவல்கோட்டையையும் தரை மட்டமாக்கிக் காட்டுவேன் என்ற சூளுரையை நிறைவேற்றி விட்டேன்."

"புலித்தேவனைத்தான் கைது செய்ய முடியவில்லை. கோழை ஓடிவிட்டான். எங்கே போய் விடுவான். விடமாட்டேன்... விடவே மாட்டேன்..."

யூசுப்கான் புலம்புவது போல செருமாந்து பேசினான். அவனருகே அவனது அடி வருடிகள்.

"ஹுசூர்... இந்தக் கோட்டை மட்டுமல்ல... எந்த கோட்டையும் இனி நம் வசம்தான்! நமது நவாப் செய்த புண்ணியம் தாங்கள் அவரது தளபதியானது."

ஒருவன் சாமரம் போட்டபடியே யூசுப் கானுக்கு ஜால்ராவும் போட்டான். ஒருவன் மதுக்கிண்ணத்தைப் பீங்கான் பாத்திரத்தில் கவிழ்ந்து நீட்டினான்.

ஆப்கானிஸ்தானத்து ஒயின்மது. விதையில்லாத திராட்சையோடு சுத்தமான மழை நீரைச் சேர்த்து பூமிக்குள் புதைத்து வைத்து பின் எடுத்து அதில் காஷ்மீரத்துக் குங்குமப்பூவிலிருந்து ஒதியமரத்துப்பட்டை வரை போட்டு ஊற வைத்துத் தயாரித்த மது.

புளிப்பு வாடை தெரியாமல் இருக்க சில சொட்டுகள் கற்பூரத் தைலம் விட்டதில் கமகமப்பு சுற்றி இருப்பவர்களையும் கிறங்க அடித்தது.

யூசுப்கான் தனது பூனைக்கண் பிரகாசிக்க அந்த மதுவை உறிஞ்சியபடி எக்காளமிட்டான். பார்வையை நாலாபுறமும் செலுத்தினான்.

அங்கங்கே எரிவுகள், சிதைவுகள், ஊரே வெறிச்சோடிக் கிடக்கிறது. முன்பொரு முறை சில வருடம் முன் போரிட வந்தபோது, இந்தச் சிதைவும், எரிவும் தனது படைக்காக இருந்தது. சிலுவை மரத்தில் தன்னை கட்டி புலித்தேவன் வீதி வீதியாக இழுத்துச் சென்றதும், வீதியே நின்று வேடிக்கைப் பார்த்ததும், நடுவில் தண்ணீருக்குத் தவித்து நின்றபோது ஒரு மறச்சி, மாட்டு மூத்திரத்தைப் பிடித்துத் தந்ததும் நினைவில் கிளர்த்தெழுந்து சொடுக்கியது.

அதற்குப் பழிக்குப்பழி வாங்கியாகி விட்டது.

செவல்பாளையமே இன்று இல்லை என்றாகி விட்டது. ஆடு, மாடு, எருமை, பன்றி, கோழி என்று ஜீவராசிகள்கூட வெட்டிச் சாய்க்கப் பட்டு கிடந்தன.

நெற்கதிர்கள் பற்றி எரிந்தன.

வைக்கோல் பரப்புத்தீ ஆகாசத்தில் கார்மேகக் கூட்டம் சேர்த்துக் கொண்டிருக்கிறது.

ஆடை அணிகள் அவ்வளவும் சொல்லிச் சொல்லி எரிக்கப்பட்டது. பாத்திரங்கள் பண்டங்களை தரைப்படை வீரர்கள் இது எனக்கு இது எனக்கு என்று கூறுபோட்டு பிரித்து மூட்டைக் கட்டிக் கொண்டிருந்தனர்.

பார்க்கப் பார்க்க ரசமாக இருந்தது.

என் வரையில் இதுதான் ஆனந்தக் காட்சி. அற்புதக் காட்சி.

என்னை எதிர்த்தால் இதுதான் பரிசு.

நவாபின் சாம்ராஜ்யத்தில் கப்பம் கட்டிச் சேராத பாளையங்களுக்கெல்லாம் இதுதான் கதி.

நெல்லை ஜெகவீரன் பணிந்துவிட்டான். இந்த பாளையத்தான் புலித்தேவன்தான் ஓடிவிட்டான்.

மதுரை நாயக்கன், திண்டுக்கல் பாகஸ்தன் சேது மண்ணின் சேதுபதிகள். தொண்டைமான்கள் சேரக் கூட்டத்து பராக்கிரமசாலிகள். தஞ்சை மராட்டியர்கள் என்று எவராய் இருந்தாலும் பணிய வேண்டும். பணிந்தே தீர வேண்டும். இது நவாபின் கட்டளை. பணியாதோரைக் கப்பம் கட்டாதோரை அடக்க கும்பினியர்களோடு மட்டுமல்ல, விட்டால் குவலயத்தில் எவரோடும் கூட்டு சேருவோம். விடமாட்டோம்... - யூசுப்கான் மனதில் எண்ணங்கள் ஓடிப்பிடித்து விளையாடின.

* * *

நெல்லையில் பிள்ளை மகனாய் ஜனனம் எடுத்த காலத்தில் இருந்தே இப்படித்தான் அவன்...

ஏற முடியாத கோட்டை ஏற வேண்டும்:

பார்க்க முடியாத காட்சிகளை எல்லாம் பார்க்க வேண்டும்.

முடியாதது என்று ஒன்று உண்டோ?

அதனால்தான் அந்த நினைப்பால்தான் நவாப் முகம்மது அலிகானின் அன்புக்குரிய தளபதியாக, நம்பிக்கை நாயகனாக ஆக முடிந்ததோ...?

''ஆலம்பனா, சுல்தானா, ஜெகவீரா... பேரதிபர், பொக்கிஷதாரர் டெல்லி பாதுஷாவின் அன்பைப் பெற்ற ஆற்காட்டு கொள்ளை

மன்னரான முகம்மது அலி நெல்லைப்பட்டிணம் ஒன்றின் பிரதான வீதி ஒன்றில் புரவிப்படை நடுவில் ஊர்வலமாக வந்து கொண்டிருக்க, நெல்லை மாநகரின் சார்பாக ஜிகாத் ஒன்றின் முன் சில ஹாஜிகள் நவாபுக்கு மரியாதை செலுத்த நின்று கொண்டிருந்தனர்.

பக்கத்தில்தான் நெல்லையப்பர் ஆலயம்.

என்னதான் முகமது அலி இஸ்லாமியனாக இருந்தாலும் தேசத்திற்கு அதிபதி - எனவே நெல்லையப்பர் ஆலயம் சார்பாக பூர்ண கும்ப மரியாதையும் யானை மாலையிடலும் நடக்கக் காத்திருக்கும் ஒரு அந்திமாலை வேளை...

நெருங்கிவிட்ட நவாபின் கழுத்துக்கு மாலையிட வேண்டிய யானை, மாலையிடாது மதம் கொண்டு மாலையை வீசி எறிந்து விட்டு நவாபை மிதிக்கப் பார்த்தது. கூட்டம் அல்லோல கல்லோலப்பட்டு ஓட, படைவீரர்களும் சிதறிப்போக, ஒருவன் மட்டும் துணிந்து தனது வேல்கம்பால் யானையின் கண்களை நோக்கி எறிய யானை தரை விழுந்து புரண்டு, காலு தைத்து புழுதி கிளப்பி, பிளிறல் கர்ஜனையால் நெல்லையையே புரட்டிப் போட்டது. தப்பித்தார் நவாப். வேல் கம்பெறிந்து யானையிடமிருந்து மீட்ட அந்த மனிதர் யார்?

"என் பெயர் மருதுப்பிள்ளை நவாப்" - என்று முன்வந்து நின்ற அந்த மருதுப்பிள்ளையை முதல் பார்வையிலேயே நவாபுக்கு மிகப் பிடித்துவிட்டது.

"என்ன செய்து கொண்டிருக்கிறாய்?"

"ஏதாவது செய்யத்தான் துடித்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் வாய்ப்புதான் கிட்ட மறுக்கிறது."

"அடேயப்பா, அப்படியா சேதி... ஆமாம் என்ன தெரியும் உனக்கு...?"

"தாமிரபரணி ஆற்றில் எதிர்நீச்சல் போடுவதில் இருந்து பாணதீர்த்தம் பாயும் வனப் பகுதியில் புலி வேட்டையாடுவது வரை எல்லாம் தெரியும் ஹுஜூர்..."

"பலே... ஹுஜூர் என்று இஸ்லாமியனாட்டம் பேசிறாயே, உனக்கு உருது தெரியுமா?"

"ஓரளவு... எனது நண்பன் பார்க்கத்தலி, கலாம், குர்ஷித் இவர்கள் மூலமாக கற்றுக் கொண்டேன்."

"நீ இந்து... உனக்கோ இஸ்லாமிய நண்பர்கள். ஆச்சரியமாக இருக்கிறதே..."

"என்னவோ தெரியவில்லை. இவர்களோடு மனப்பொருத்தம் ஏற்பட்டது. அதற்காக இந்து நண்பர்கள் இல்லாமலில்லை. சாமிநாதன், சண்முகம், ரங்கமன்னார் என்று அவர்களும் உண்டு."

"அச்சமின்றி பேசுகிறாய்... அங்கம் துடிக்க நிற்கிறாய். உன் கண்களை எனக்கு மிகப் பிடிக்கிறது. அடேயப்பா அதில்தான் என்ன ஒரு தீட்சண்யம்."

"நன்றி ஹுஜூர்... நன்றி."

"என்ன வேண்டும் உனக்கு...?"

"தாங்கள் எது தந்தாலும் சரி."

"என்னோடு ஆற்காட்டிற்கும், சென்னைப் பட்டனத்திற்கும் வருகிறாயா?"

"நடந்தா... ஓட்டமாகவா...?"

அன்று நவாபினை இப்படி பேசிக் கவர்ந்த பின் இஸ்லாமியனாகவே மாறிவிட்டான்.

நவாபின் மனதில் உறுதியான இடம் பிடிக்க அவன் போட்ட வேடம் அது என்றனர் சிலர். இல்லையில்லை ஆயிரம் சாதித்தாலும் நவாபின் சுற்றம் அவன் இந்து என்பதால் அதைக் கண்டு கொள்வதேயில்லை. ஆகையால் அவர்களையே ஓரங்கட்ட மதம் மாற்றம்தான் ஒரே வழி என்று அவன் தீர்மானித்ததாகவும் சொன்னார்கள்.

டெல்லி வரை பார்வை விரிவு பெற டெல்லிப் பட்டணத்துப் பார்வை தன் மே படத்தான் இஸ்லாமியனாக இருந்தால்தா சாத்யம் என்று அவன் நம்பினான் என்பர் சிலர்.

இனி இந்து நாடு என்றோ இந்து தேசமே இருக்க வாய்ப்பில்லை. இருக்கும் இந்துக்களு மதம் மாறினால்தான் ஜீவிக்க முடியும் என் நிலைதான் வரும் நாட்களில் வரும் என் பரிபூரணமாக அவன் நம்பியதால் அப்ப தன்னை மாற்றிக் கொண்டான் என்பர் இன்னு சிலர்.

எது நிஜமோ? மருதுப்பிள்ளை யூசுப்கான் சாகிப் என்றாகி, கிஸ்தி, வரி, திரை வசூலிப்பதில் நிகரற்றவனாக விளங்கினான் என்பது நிஜம்.

அடங்காதவரை அடக்க எதை வேண்டு மானாலும் செய்வது, அடங்கி விட்டவரை அடிமைகளாக நினைத்து அடக்கி ஆளுவது என்று எல்லாவற்றிலுமே அவன் கொடிதான் பறந்து கொண்டிருந்தது.

புதிதாக கும்பினியர் உறவு வர்த்தக தொடர்புக்காக வந்த அந்த நாய்கள் அப்படியே தங்கள் நவீன ஆயுத பலத்தைக் காட்டி இனி இது எங்கள் தேசம் என்று மெல்லச் சொல்லத் தொடங்கிவிட்டனர்.

டெல்லி யார் வசமிருக்கிறதோ அவர்களுக்கு சலாமிடுவதுதான் ஆற்காட்டு நவாபின் தலையெழுத்து...

டெல்லியில் தற்சமயம் இஸ்லாமிய பச்சைக் கொடிக்கு நடுவில் கும்பினியரின் கொடியும் பறக்கத் தொடங்கி விட்டது.

அதன் எதிரொலி ஹெரான், வெலிங்டன் ஆமல்டன், வில்லியம் என்று பரங்கியர் கூட்டம் தென்னகத்தில் நவாபைப் பார்த்து, ''என்ன நவாப் எப்படி சேதி?'' என்று கேட்க, நவாப்



மோதிப்பார்க்கும் எண்ணமின்றி இணக்கமாய் கை கொடுத்துவிட்டார்.

எதோ இந்த மட்டில் இத்தனை நாள் ஆள முடிந்ததே... அது போதும் என்கிற மாதிரி.

யூசுப்கானாகிய மருதநாயகத்திற்குத்தான் அதில் அத்தனை உடன்பாடில்லை. இருந்தாலும் அவனது நவீன படை, தோட்டாத்தாக்கியும், பீரங்கியும், புகை மூட்டியும் கொண்டு மிரட்டுகிறதே...

அதனால்தானே இன்று தண்ணி காட்டப் பார்த்த இந்த பாளையம், வசமாகியிருக்கிறது. தரைமட்டமாகி விட்டது.

சுடுநீர் தகிக்கும் மண்பாண்ட கக்கான் ஹூக்கா புகைத்தபடி யூசுப்கான் ஒரு மன ஓட்டம் நிகழ்த்தி முடிக்க ஓவியனும் தவிடுபொடியான அரண்மனைக்காட்சி கொண்ட அந்த ஓவியத்தை வரைந்து முடிக்கிறான்.

அதைப்பார்க்கும் யூசுப்பின் கண்களில் பிரகாசம். ஆனந்தப் பிரகாசம்.

''சபாஷ்... அருமை... ஓவியனே எங்கே என்னையும் இதே போல் வரையேன் பார்ப்போம்...''

''ஆகட்டும் ஆலம்பனா... கர்னல் ஹேரான், வீரர் வெலிங்டன் இவர்களையும் வரைந்தேன். பார்க்கிறீர்களா?''

''எங்கே காட்டு பார்ப்போம்...''

அந்த ஓவியன் தனக்கருகே உள்ள மரப்பெட்டி ஒன்றைத் திறந்து உள்ளிருந்து பாடம் செய்த மாட்டுத் தோலின் துண்டுப்பகுதி ஒன்றை சுருட்டிய நிலையில் இருந்து விரிக்க, உள்ளே வெண்ணிற தைலத்தோய்ப்பில் ஹெரான் உருவமும், மாபூஸ் உருவமும் சிரிக்கின்றன.

கூடவே இன்னும் சில ஓவியச் சுருள்கள்...

''அதெல்லாம் என்ன...?''

"அவை இந்த பாளையத்து கஜானா காப்பாளர்களுடையது. ஒன்று வேல்மணித்தேவர், மற்றது குமரப்பிள்ளை... இன்னொன்றில் தளபதி தங்கமாணிக்கம்."

"இவர்களை எதற்கு வரைந்துள்ளாய்...?"

"மரியாதைக்குரிய கர்னல்தான் வரையச் சொன்னார். அவர்களது தைல ஓவியங்கள் கஜானா உள்ள கன்னி மண்டபத்தில் இருந்தது. அதைப்பார்த்து வரைந்தேன். இதை அவர்களைத் தேடும் வெள்ளையர் படை வசம் ஒப்புவிக்க வேண்டுமாம்."

மாறுவேடம் தரித்து அவர்கள் திரியக்கூடும். எனவே அவர்களைப் பிடிக்க அவர்கள் உருவப்படம் மிக அவசியம் என்பது கர்னலின் கருத்து...

"பரவாயில்லையே... ஹெரான்கூட யோசிக்கக் கற்றுக் கொண்டு விட்டானே..."

யூசுப்கான் சொல்லி வாய்மூட, பெரும்படை ஒன்று புழுதி பறக்க அங்கு வந்து நிற்கிறது. அதில் நடு நாயகமாய் மாபூஸ்கான்.

"வாரே வா... சலாம் அலைக்கும் மாபூஸ். போன காரியம் வெற்றிதானே?"

"இல்லை யூசுப்... கால்காசு பெயரவில்லை. புலித்தேவன் தான் ஓடும்போதே கஜானா இருப்பையும் கொண்டு சென்று விட்டிருக்கிறான் போலும்..."

"இல்லை மாபூஸ் இருக்க முடியாது. நாம் இங்கு வந்து சுற்றி வளைக்கும் முன்பே சுற்று பாகம் முழுவதும் கண்காணிப்புப் படையை அனுப்பி விட்டேன். அப்படிச் சென்ற ஒரு படையை புலித்தேவனின் படை தாக்கிவிட்டுச் சென்றது. அப்படி சென்றவர்கள் வசம் வாளாயுதம் தவிர வேறெதுவும் இல்லை என்று உறுதிப் படுத்தப் பட்டுவிட்டது. நிச்சயம் கஜானா



இருப்பும், பொற்காசும் இந்த மண்ணில்தான் எங்கோ இருக்க வேண்டும்..."

"எங்கோ என்று எப்படி கண்டறிவது? மயானத்தில் இருப்பதாக வந்த தகவல்களைத் தொடர்ந்து அங்கும் சென்று பார்த்தாகிவிட்டது. செவிட்டு மயானத்தான்தான் இருக்கிறான்..."

"கஜானா இருப்பை அடையாமல் இந்த மண்ணை விட்டுப் போகக்கூடாது மாபூஸ்... அப்படிப் போனால் அது பாதி வெற்றிதான்."

"உண்மைதான்... ஒரு விஷயம் யூசப். மயானத்தில் ஒரு அதிசய சிலை இருக்கிறது. அப்படி ஒரு உருவத்தை நான் பார்த்ததேயில்லை. அதை தொடச் சென்ற நமது படைவீரன் ஒருவன் மின்னல் கருக்கிற்று என்றால் பார்த்துக் கொள்ளேன்."

"விசித்திரமாக இருக்கிறதே. கற்சிலையா ஐம்பொன்னா?"

"கற்சிலைதான். அதை நெருங்கிய நொடி காற்று வீச்சும் மழையும் பன்மடங்கு கூடிப் பெருகின. மரக்கிளைகள் மேலே முறிந்து விழுந்ததில் எட்டு பேருக்கு கால் முறிவு குதிரைகளுக்கும் காயம்."

"நம்ப முடியவில்லை... நம்ப முடிய வில்லை."

"வேண்டுமானால் அந்த மயானத்திற்குத் தான் போய்ப் பாரேன்."

"இப்பொழுதே போகிறேன். அதில் ஏதோ சூழ்ச்சி இருக்கலாம். சரி, நீயும் வருகிறாயா?"

"நா... நான்..."

"அச்சமென்றால் விட்டுவிடு. நான் பார்த்துக் கொள்கிறேன்.

"இல்லையில்லை... நீ இருக்கும்போது எனக்கென்ன கவலை?" மாபூஸ்கான் சமாளித்தான்.

"உடனே கிளம்பு... ஓவியரே. ஓவியத்தைப் பாதுகாப்பாக மரக்குழாயில் இட்டு வையுங்கள். இன்று மாலையே திண்டுக்கல் கோட்டையில் உள்ள நமது நவாபிற்காக அரசாங்க செய்தி ஒன்று செல்ல இருக்கிறது. இந்த ஓவியங்களை அத்தோடு சேர்த்துவிடலாம்..."

நல்லது ஹுசூர்..."

அடுத்த நொடி அஷ்டமங்கலப்புரவி ஒன்று யூசுப்கானை தேடி அழைத்து வரப்பட்டது. அடர்ந்த முடிக்கற்றை. கறுப்பு நிறம் என்றாலும் பட்டை போல ஒளிப்புனலாய் ஜொலிப்பு.

ஒரே தாவில் அதன் மேல் தாவி ஏறுகிறான் யூசுப்.

மாபூசும் தனது புரவியின் மேல் ஏறிக் கொள்ள இருவர் புரவியும் ஊர் மயானம் நோக்கி ஓடத் தொடங்குகின்றன.

வழியில்...

"யூசுப்... உங்கள மதத்தில் பேய்ப் பிசாசுகள் பற்றிய நம்பிக்கை உண்டா...?" மாபூஸின் கேள்வி யூசுப்கானை கோபம் கொள்ள வைக்கிறது.

"நான் இப்பொழுது இஸ்லாமியன் மாபூஸ்... என்னிடம் போய் என் மதம் என்று கேட்கிறாயே?"

"நான் மறுக்கவில்லை. இருந்தாலும் இந்துவாக பிறந்தவன் ஆதலால் கேள்விப் பட்டிருப்பாய் என்று கருதி கேட்டேன்..."

"எந்த மதத்தவனாக இருந்தாலும் சரி... யாராக இருந்தாலும் சரி... பேயும் பிசாசும் நம்ப முடியாதவை. மனிதனின் பயச்சின்னங்கள் அவை..."

"அப்படியானால் நீ அந்த கற்சிலையைப் பார்க்கையில் என்ன சொல்வாயோ...?"

"காக்கை அமர பனம்பழம் விழுந்த கதைதான். மழையும், காற்றும், மின்னலும், இடியும் வீசும்பொழுதில் அந்தச் சிலையை தொடப்போய் மின்னல் இறங்கியதற்கு அந்தச் சிலை என்ன செய்யும்? எல்லாம் அச்சம் படுத்தும்பாடு."

யூசுப்கானின் புரவியும், மாபூஸ்கானின் புரவியும் தாளகதி மாறாத சப்தத்தோடு லப்தப்... லப்தப்... என்று செவல் பாளைய வீதியில் ஓடுகின்றன. ஊரே சீரழிந்து பொலிவிழந்து கிடந்தது.

அவர்கள் இருவர் மட்டும் தனியே மயானம் நோக்கிச் செல்வதை இடிபாடுகள் நடுவே ஒருவன் பார்த்துவிட்டு தன் கண்ணிரண்டில் செம்மையைப் பெருக்கிக் கொள்கிறான்.

"அசுரப்பிசாசே... எங்களை அழித்துவிட்ட மமதையோடு ஊர்வலம் வந்து போகிறாயா நீ... போ... போ... உன் எண்ணம் ஈடேறப் போவதில்லை. மீண்டும் எங்கள் பாளையம் புத்துயிர் பெறும். மறவர் கூட்டம் அணி சேரும். உன் பிரித்தாளும் உபாயம் பலனற்றுப் போகும்.

எங்கள் தலைவரை அதற்காகவே காப்பாற்றிக் கரை சேர்த்திருக்கிறோம்.

அவர் உன்னை விடமாட்டார்.

உன்னை மட்டுமல்ல... உன் மொத்த சாம்ராஜ்யத்தையுமே ஒரு கை பார்ப்போம். டெல்லிவரை செல்லும் எங்கள் தாக்குதல். இது மட்டும் நிச்சயம்... நிச்சயம்..."

நிமிர்ந்தெழுந்த வேகத்தில் அவன் கறுவியபடியே மீண்டும் மயக்கமாகிறான். அவனது உடல் உறுப்பில் கால் பாகம் துண்டிக்கப்பட்டிருக்கிறது.

அவ்வப்பொழுது மயக்கம் நீங்குகிறது.

நிமிர்ந்தெழப் பார்க்கிறான். அப்பொழுதெல்லாம் இப்படிப் புலம்புவான். அதன் எதிரொலியோ என்னவோ திரும்ப மயங்கி விடுகிறான்.

முழுமையாக யுத்தம் முடிந்ததாக அறிவிக்கப் படவில்லை. அப்படி அறிவித்திருந்தால் கருணைப்படை வலம் வரும். அதன் கண்களில் இவன் பட்டு இவனுக்கு அவர்கள் வைத்தியம் பார்க்கக்கூடும்.

புலித்தேவர் பிடிபடாததாலும், கஜானா வசப்படாததாலும் யுத்தம் முடிந்ததாக அறிவிக்கப் படவில்லை.

எல்லாம் சரி... தப்பிய புலித்தேவர் வசப்படுவாரா? என்ன ஆனார்...? எங்கு இருக்கிறார்...?



## 12

அந்த வீட்டின் மாடியில் ஒரு கீற்றுக் கொட்டகை உண்டு. அதனுள் கட்டிலும், படுக்கையும்கூட உண்டு. சாப்பிட்ட களைப் போடு போய்ப் படுத்தால் திரிகூட மலைக்காற்று வருடியபடி செல்லும். தூக்கமும் கண்களைத் தோய்த்து மூடும். சுகமாக இருக்கும். பரமானந்தமாக இருக்கும்.

மாடி கைப்பிடிச் சுவர் அருகே நின்று ஊரைப் பார்க்கலாம். சுற்றி வட்டம் கட்டிப் பார்க்கலாம். ஒருபுறம் மலைச்சாரல் அதை ஒட்டி கரும்பு வயல். மறுபுறம் நெல்வயல். ஊடே ஊடே தென்னைக் கூட்டம். வாழைக் கூட்டம்.

வானில் தட்டான் ஈசல்களுக்கு நடுவே கொக்குகளின் உல்லாச திரிவு. நீரும் மீனும் மிகுந்த பரப்பில்தான் கொக்குகள் மிகுந்திருக்கும். அவை தனியாகவும் திரியாது. ராணுவப் பயிற்சி பெற்றவை போல கூட்டமாக சீரான இடைவெளி விட்டு வானம் நீவிச் செல்வதைப் பார்க்க ஆச்சரியமாக இருக்கும்.

அவைகளைச் சிதறடித்துப் பார்க்க வல்லூறும், கழுகும் ஊடே ஊடே வந்தாலும் அவைகளை ஒன்றும் செய்ய முடிவதில்லை.

இந்த வல்லூறும், கழுகும், கருடனும் பிடித்துச் சாப்பிட்டு தூக்கிப் போட்ட நண்டுகளின் சதைப்பற்றில்லாத கூடுகள், வீட்டு மாடியில் அங்கங்கே கிடக்கின்றன.

அவைகளைப் பார்த்து பொறுக்கி எடுத்து வீசி எறிகிறான் அருள்மணி.

சாப்பிட்ட களைப்பு இருந்தாலும் உறக்கம் வராது போல் இருக்கிறது. மனதில் அந்தக் காட்சியே பிறாண்டிக் கொண்டிருக்கிறது.

ஒரு மனிதன் மூச்சிழப்பதும் - பின் தீயில் விழுந்து கருகுவதும் சாதாரணமான காட்சியா என்ன?

ஆனால் எல்லாம் பிரமை என்கிறார் அப்பா...

ஒருக்கால் அதுதான் உண்மையோ?

அந்த வெட்டியான் வேறு அவரருகே வந்து நின்றானே எதுவும் தெரியாதவனாட்டம்...?

எது உண்மை... எது பொய்...?

அருள்மணி தவித்தான். துடித்தான். ஓலைக்குடிசை கட்டிலில் போய் அமருகிறான். பின் எழுந்து நடைபோடுகிறான். ஊரை ஒரு பார்வை பார்க்கிறான்.

டிபார்ட்மெண்டில், சொந்த ஊர் எது என்று யாராவது கேட்கும்போது சொல்லியிருக்கிறான் வாசுதேவ நல்லூர் பக்கம் என்று...

"வாசுதேவ நல்லூரா... வெள்ளைக்காரனுக்கு தண்ணி காட்டின புலித்தேவர் வாழ்ந்த ஊராச்சே!'' என்று அவர்கள் உற்சாகமாக ஸ்லாகிப்பார்கள்.

எதையும் தோண்டிப் பார்ப்பதும், தேடி அலைவதும்தான் அவர்கள் , இலாகாவின் பணியாயிற்றே!''

இலாகா குறிப்பிலும் நிறைய ஆச்சரிய விஷயங்கள். அது நெறிகட்டும் செ அரண்மனை பற்றி மட்டும்தான் சொல் யிருக்கிறது.

அசைத்துக்கூட பார்க்க முடியாத உறுதிய கோட்டை செங்கல்லும் கான்க்ரீட்டும், சிமிண்டு இல்லாத உலகத்திலேயே இப்படி ஒரு உறுதியா கோட்டையைக் கட்டியது பெரிய ஆச்சரிய என்கிறது அந்தக் குறிப்பு.

மற்றபடி புதையல் அது இது என்றெல்லா அதற்கு எதுவும் தெரியாது.

ஊரில் பிறந்து வளர்ந்த தனக்கே தெரியா போது இலாகாவிற்கு மட்டும் எப்படித் தெரி முடியும்? பிறந்து வளர்ந்தாலும், உயர்நிலை பள்ளிப் படிப்பில் இருந்து கல்லூரி, பின் வேலை வரை சகலமும் சென்னையில் மாமன் வீட்டிலேயே நிகழ்ந்துவிட்டது.

சொந்த ஊர் என்பது சொந்தக்காரரின் ஊ போல் அவ்வப்போது வந்து போகும் ஊரா ஆகிவிட்டது. அதனாலேயே அப்பாவின் செயல்பாட்டில் இருந்த அத்தனை விஷயங்களும் புதிதாக புதிதாக இருக்கின்றன.

எது உண்மை?

குழம்பிக் குழம்பி மனக்குட்டையில் மீன்பிடிக்க முடியாமல் திணறுபவன் எதிரில் கண்டாங்கி சரசரக்க வந்து நின்றாள் அம்மா சீனியம்மா.

''என்னய்யா... ஒறங்கலியா...?''

''வரலம்மா...''

''தெரியும். மனசு ஒறங்குனாதானே ஒறக்கம்...''

''அது சரி. அப்புறமா சொல்றேன்னு சொன்னியே. என்னம்மா அது?''



''எனைய்யா சொல்வேன்... எப்படிச் சொல்வேன்...'' சீனியம்மாவின் நெஞ்சகம் விம்முகிறது.

''அம்மா... என்னம்மா ஏதோ துக்கமான விஷயமாட்டம் பேசறே...''

''ஆமாம் தம்பி... துக்க விஷயம்தான்... கிட்டத்தட்ட

''பீடிகை போடாதே விபரமாச் சொல்லு.''

''சொல்றேன். புலித்தேவ ராசா பத்தி தெரியுமில்லியா?''

''தெரியாம...?''

''அவர வெள்ளைக்காரன் யுத்தத்துல ஜெயிச்சுட்டான். அப்ப அவரு தப்பி தலைமறைவாயிட்டாராம். அதே சமயம் கஜானா காசுங்களை அவன் கொண்டுகிட்டுப் போயிடக் கூடாதுன்னு ஒருத்தர் அதை சுடுகாட்டுப் பக்கம் கொண்டு போய் எங்கோ புதைச்சு வெச்சுட்டாராம்.''

''உம்...''

''ஊரை ஜெயிச்சும் பிரயோஜனமில்லேன்னு கஜானா காசுக்காக வெள்ளைக்காரனும், தளபதி தான் சாகிபும் ரொம்பகாலம் இங்க இருந்து தேடிப்பாத்தாங்களாம். ஆனா அவங்களுக்கும் அது கிடைக்கலையாம்.

அதை ஒருத்தர் புதைச்சு வெச்சாருன்னு சொன்னேன்ல...''

''ஆமாம்...''

''அது யார் தெரியுமா?''

''என் தாத்தனுக்கும் தாத்தன். அதாவது உனக்கு எள்ளுத்தாத்தன். பேர் வேல்மணித் தேவன்.''

''நெசமாவா?''

''ஆமா... அப்ப அவருதான் கஜானாவை பாத்துக்கிட்டாராம். கூட குமரப்பிள்ளைன்னு ஒரு கணக்கு வழக்கு பாக்கிற அதிகாரி வேற...''

"இன்ட்ரஸ்ட்டா இருக்கே... மேல சொல்லு..."

"அப்படி அவர் அன்னிக்குப் புதைச்ச பின்னால புலியத்தேவராசா வந்து எடு கிடணும்கறது அவர் ஆசை. ஆனா அது எது நடக்காமப் போயிடுச்சு.

அதே சமயம் அதை மத்த யாராலயும் எடுக்க முடியலை. அந்த நாள்ளையே கான்சா மயானத்தையே பொறட்டிப் போட்டுத் தோ பாத்துட்டானாம். மண்டை ஓடும் எலு சிக்கினதுதான் மிச்சம்.

அவ்வளவு சாமர்த்தியமா உன் தா அதைப் பொதைச்சாருன்னு நினைக்கறியா?"

"பின்ன?"

"அதான் இல்ல... அதை புதைச்சது அ மயானத்துல வெட்டியானா இருந்த மாசாண கறவன்."

"அவன் எப்படி?"

"கால நேரம் அவனையும் இ சேர்த்துக்கிச்சு. புலித்தேவ மகாராசா எ வந்தாலும் அவன் கஜானா காசுங்களை தோண் எடுத்துக் கொடுத்துடணுங்கிறது அவனுக்கு உ தாத்தா உத்தரவு. அப்படி இல்லாட்டி பாளையம் நம்ப மறவமார் கைக்கு வந்துட் அவங்ககிட்ட அதை ஒப்படைச்சுப்பிடுன் சொல்லியிருக்காரு.

சரின்னு அவன் அதை பத்திரமா பாதுகா ஆரம்பிச்சான். அதுல ஒரு ஆச்சரியம் என்னன் அந்த மயானத்துல இப்ப இருக்குதே சண் துர்க்கை கோயில்..."

"ஆமா..."

"அதுக்கு சக்தி அதிகம். மயானத்துக் கஜானா காசுகளைத் தேடி யார் வந்தாலு அவங்களை அந்த சண்டி துர்க்கை அடிச் விரட்டிருச்சு."

"என்னம்மா இதுவரை நம்பறமாதிரி சொல்லிட்டு வந்தே. திடீர்ன்னு ரீல் விடுறியே..."

"நீ அப்படித்தான் சொல்வே. அதோட சக்தியை நம்ம புலித்தேவ மகாராசா கட்டுப்படுத்தி, சாந்தப்படுத்தி வெச்சுருக்கறதா சொல்றாங்க. முந்தி அதுக்கு அப்படி ஒரு சக்தியாம்."

"சரி... சரி... முக்கியமான விஷயத்துக்கு வரேன். இதுவரை அந்த கஜானா காசுங்களை யாரும் எடுக்கலியா...?"

"இல்லன்னுதான் சொல்லணும். ஊர்ல அந்தக் காலகட்டைங்க சிலருக்கு இந்தப்புதையல் பத்தி அரசல் பொரசலா தெரியும். ஆனாலும் மயானதேவி காவல் காக்கற சமாச்சாரம் நமக்கு எதுக்குன்னு விட்டுட்டாங்க.

சிலர் ஆசைப்பட்டு தேடிப்போய் பைத்தியமா, அரைக்கிறுக்கா ஆயிட்டாங்க. அவங்கள பாத்த பிறகு யாருக்குத் தைரியம் வரும்...?"

"அப்படின்னா அப்பாவுக்கு தைரியம் இல்லேங்கறியா?"

"தைரியம் இல்லாமலா இறங்கி எதிர்நீச்சல் போட்டுக்கிட்டிருக்காரு... அதுலேயும் உன் பாட்டனோட செவல் வீடு கோர்ட்ல நமக்குத் தீர்ப்பானதுல இருந்தே வேகம் ஜாஸ்தியாயிடிச்சு உங்கப்பாவுக்கு..."

"அதுக்கும் இதுக்கும் என்னம்மா சம்பந்தம்?"

"இருக்குப்பா. பாழ்பட்ட அந்த வீடு நமக்குச் சொந்தம்னு ஆன உடனே அதைச் சீர்திருத்தி நல்லபடியாக கட்டலாம்னு பார்த்தோம். அதுக்காக கைவெச்சப்போ அந்த வீட்டுல ஒரு ரகசியக்குழி இருந்துச்சு. அது ரொம்ப தூரம் போச்சு. அநேகமா அரண்மனைக்கும் வீட்டுக்குமே பாதாள வழி இருந்திருக்கணும். நடுவுல ,மண்ணடைஞ்சு போயிருக்கணும்னு நினைக்கிறேன்.

அந்தப் பாதைல ஒரு அறை. அதுக்குள்ள ஒ மரப்பெட்டி இருந்திச்சு. அந்த மரப்பெட்டில உ தாத்தன் எழுதி வெச்ச விபரங்கள், கூடவே நிறைய படங்கள்.''

''படங்களா?''

''ஆமாப்பா... புலித்தேவராசா படம். உ தாத்தன் படம். வெள்ளைக்காரன் படம். இடிஞ் கோட்டையோட படம் எல்லாம் இருந்திச்சு.''

''அம்மா... நெசமாவா?''

''நான் ஏன் ராசா பொய் சொல்றேன்?''

''அம்மா நான் உடனே அதைப் பார்க்கணுமே அதுக்கெல்லாம் இன்னிக்கு என்ன மதிப்பு தெரியுமா?''

''உன் அப்பாதான். ரூம்ல பீரோவுல வெச்சிருக்காரு. அந்த குறிப்பை எல்லாம் படிச்சதுல இருந்தே மாறிட்டாரு. எவ்வளவோ லட்சம் பொன்காசாம். அவ்வளவும் அரசாங்கச் சொத்து. அந்த நாள்ல நம்ம ஜனங்க வரியா கட்டினது. அதுல ஒரு ஆச்சரியம் என்ன தெரியுமா?''

''என்னம்மா?''

''கொஞ்சம் இரு... அதை நான் உனக்கு நேர்லயே காட்டறேன்...''

சொல்லிவிட்டு மாடியைவிட்டு நீங்கினாள் சீனியம்மாள். சில நிமிடம் கழித்து புடவை முந்தியை மூடியபடி எதையோ எடுத்து வருகிறாள்.

அவனருகே வருபவள் அதை விலக்கிட ஒரு மரச்சட்டத்தில் அடைபட்ட படம் அது! அதைப் பார்க்கும் அருள்மணி சொல்கிறான், ''எதுக்கும்மா என் படத்தை என்கிட்ட காட்றே... யார் இதை வரைஞ்சது?''

''இது நீ இல்ல அருளு... உன், எள்ளுத் தாத்தன் வேல்மணித் தேவன்!''

அடுத்த ... முடியாத ...

# 13

மழை பெய்து முடிந்து விட்டிருந்தது. எங்கும் செந்நீர்க்காடு. ஊரணிகள், குட்டைகள் எல்லாம் தளும்பிக் கொண்டிருக்க, அந்த வனப்பகுதியினுள் ஆவேச கதியோடு நுழைகிறது ஒரு குதிரைப்படை.

அந்தப் படையில் வேல்மணித்தேவரும் இருக்கிறார்.

வனப்பகுதி பனங்காடாக இருக்கிறது. அதுவே சேதுநாட்டுக்குள் நுழைந்துவிட்டதை சொல்கிறது. கடலை ஒட்டிய ஆம்பல் நிலப்பகுதி. உப்புக்காற்றின் கொடூர வீச்சு - இதனால் நுண் பயிர்கள் செழிக்க வழியில்லாது போய், மரப்பயிர்கள் மிகுந்த பனை வளமாக உள்ள காட்டில் காற்று விளையாட்டு அதிகமாக இருப்பதால் மிகுந்த சலசலப்பு.

இந்த சலசலப்பை கேட்டுக்கொண்டு பழகியதால்தான் வனப்பகுதியில் நரிகள் அஞ்சுவதில்லை. அதன் காரணமாகவே 'பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சாது' என்கிற பழமொழியும் பிறந்ததோ என்னவோ?

நெடுந்தூரம் ஓடிவந்த களைப்பில் நுரை தப்பிப் போய்விட்ட லாயண்ணங்கள், சேணத்தால் உண்டான புண்கொண்ட ரத்த வடுக்கள் என்று புரவிகளிடம் ஒருவித வேதனை தெரிகின்றது.

''இந்த வனத்திலா நமது அரசர் இருக்கிறார்?'' வேல்மணித்தேவர் ஊடே இடை வெட்டுகிறார்.

"ஆம் கணக்காயரே... உங்களைக் கா வேண்டும் என்பது அவரது பேரவா..." என்கிற அந்தக் கூட்டத்தலைவன் அங்கணன்.

"எனக்கு மட்டும் ஆசையில்லையா என்ன... மயான வெளியில் இருந்து தப்பிக்கப்பட்டதே பெரும் பாடாகிவிட்டது அங்கணா..."

"நீங்கள் தப்பிக்க வேண்டும் என்பதுதான் எங்கள் பெருவிருப்பம். பாவம் குமார பிள்ளையைதான் அழைத்து வர முடியாமல் போய், காலனோடு அனுப்பும்படியாகி விட்டது."

சற்றே கண்ணீர் கசிய மார்பைச் சிடுக்குகிறா வேல்மணித்தேவர்.

"நாம் இன்னமும் முன்னெச்சரிக்கையாக இருந்திருக்க வேண்டும் கணக்காயரே. வெள்ளையனும் நவாபும் முந்திக்கொண்டு பழி தீர்த்துவிட்டனர். பேடிகளாய் பக்கத்து பாளையத்தவர்களும் பணிந்து விட்டனர். இல்லாவிட்டால் இந்நேரம்..."

அங்கணன் செருமுகிறான்.

"நடந்து முடிந்ததைப் பற்றி பேசுவதால் பலனில்லை... அரசர்கள் வாழ்வில் யுத்தம், அதில் வெற்றி தோல்வி இதெல்லாம் மிகச் சாதாரணம். தோல்வியை வெற்றியாக மாற்ற வேண்டும். இனி அதைப் பற்றித்தான் யோசிக்க வேண்டும்."

வேல்மணித்தேவர் விவேகமாய் பேசுகிறார். அப்படியே கண்ணுக்கு கூரை கொடுத்து வனப்பகுதி முழுக்க பார்க்கிறார்.

ஓரிடத்திலிருந்து புகை மூண்டு வருகிறது.

கூடவே பனைமரத்தின் உச்சியில் அங்கங்கே சிலர் இடைப்பாடி கட்டி அமர்ந்த நிலையில் கண்காணிப்பதையும் பார்க்க முடிகிறது.

அவர்களின் ஒருவன் அங்கிருந்தபடியே நரி போல் ஊளையிடுகிறான்.

வேல்மணித்தேவர்

சிரிக்கிறார்.

"நாம் அரசர்பிரான் உள்ள எல்லைப்பாகம் வந்து விட்டோம் என்று கருதுகிறேன்."

"சரியாகச் சொன்னீர்கள். நமது மறவர் இளைஞர்களின் உச்சாணிக்காவலைப் பார்த்த உடனேயே புரிந்துவிட்டதோ?"

"ஆம் அங்கணா... ஏதோ இம்மட்டில் மிக பாதுகாப்பாக கடலாடியை ஒட்டிய இந்த பனைவனத்தில் நமது அரசரை வைத்திருப்பதை எண்ணி மகிழ்கிறேன்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் தீட்ட முடியும். அவர் இருந்தால்தான் மீண்டும் விடுதலை பெற்றிட முடியும்..."

சொல்லும் போதே வனப்பகுதியின் மையத்தில் பன ஓலையால் ஆன ஒரு குடிசையும், அதைச் சுற்றி ஒவ்வொரு மரத்தையும் வளைத்த ஓலைத்தடுப்புகளும் அவர்களைக் தடுக்கின்றன.

வேல்மணித்தேவரும் அங்கணனும் குதிரை நீக்கம் செய்தனர்.

"வாருங்கள் கணக்காயரே... வருக!" - என்று முகமன் பிறக்கிறது. முதிய அரசவைக் கொற்றாளத்திடம்.

"வந்தனம் கொற்றாளம்...!" என்றபடி வேல்மணித் தேவர் உள் நுழைய அங்கு அவரை மிக ஆவலாக எதிர்பார்த்துக் காத்திருக்குகும் பேரரசர் புலித்தேவர்.

புலித்தேவரைப் பார்த்த மாத்திரத்தில் வேல்மணித்தேவர் ஓடிச்சென்று ஆலிங்கனம் புரிகிறார். மேனி சிலிர்த்து கண்களில் நீர் சுரக்கிறது.

"என்ன இது...? நான் என்ன, நிகழ்ந்த யுத்தத்தில் இறந்தா போய்விட்டேன் கண் கலங்குகிறாயே வேலுமணி..."

''வேண்டாம் அரசே... விளையாட்டுக்குக் கூட அந்த வார்த்தை வேண்டாம். நம் வரையில் நிகழ்ந்ததை நான் தோல்வியாகவே கருத வில்லை. ஒரு வெற்றி தள்ளிப் போயிருக்கிறது என்றுதான் கருதுகிறேன்.''

''அற்புதமாகச் சொன்னாய். அதுதான் உண்மையும்கூட... அதனால்தான் கஜானா செல்வத்தைக் காப்பாற்ற மயானம் தேடிப் போனாயோ?''

''ஆம் அரசே... அது மக்கள் பணம். அதை அந்த வெள்ளையனும் நவாபும் எப்படி அடையலாம். அதற்கு அவர்களுக்கு ஏது தகுதி?''

''எல்லாம் சரிதான்... அந்த சமயத்தில் குமரப்பிள்ளை கண்களை இழந்தாராம், பின்னர் உயிரையே விட்டாராமே... உண்மையா?''

''ஆம் அரசே... குமரப்பிள்ளை தன் இன்னுயிரை நீத்துவிட்டார். அவர் மட்டுமல்ல... பாடையில் படுத்து வந்த கஜானா ஊழியர்களும், செட்டி மக்களும் மின்னலால் தாக்கப்பட்டு உயிர் நீத்துவிட்டனர்.''

''என்ன கொடுமை இது சங்கரநாராயணா... என் மக்களை எதிரிதான் வீழ்த்தத் துடிக்கிறான் என்றால் இயற்கையுமா?''

''அது இயற்கை அல்ல அரசே... கஜானா நிதியை புதைக்கத் தோண்டிய ஒரு குழியில், ஒரு பெண் பிரதமை இருந்தது. காளிபோல் விகாரத் தோற்றம். கல் பிரதமை, அதைத் தொட்டு எடுத்த நொடியில் இருந்துதான் இந்த விபரீதம்.

விபரீதம் நமக்கு மட்டுமல்ல... அதைத் தொட்டுப் பார்க்க முனைந்த கான்சாகிபின் படைக் கூட்டத்துக்கும் ஏற்பட்டது.

ஆனால் மிக்க அதிசயமாக, நானும் மயானத்தானும் மட்டும் ஏதும் ஆகாதபடி தப்பினோம். என் உள்ளுணர்வென்னவோ அது நமக்கு உதவ வந்த தெய்வதது... படுகிறது...''

வேல்மணித்தேவரின் விவரிப்பு எல்லோரையும் வியப்பில் தூக்கிப்போட, அரசரை ஒட்டி அமர்ந்திருந்த கைலாச குருக்களை அது சிந்தனையில் தள்ளுகிறது.

''என்ன குருக்களே என்ன சிந்தனை... உமக்கு ஏதாவது பிடிபடுகிறதா?'' புலித்தேவர் தனது குருவைப் போன்ற அந்த பிராமணரைப் பார்த்துக் கேட்கிறார்.

''அநேகமாக அது காபாலிகர்கள் வழிபட்ட ருத்ர தேவதையாக இருக்கும்...''

''காபாலிகர்கள் வழிபட்ட ருத்ர தேவதையா?''

''ஆம் தேவா... காபாலிகர்களைப் பற்றி அறிந்ததில்லையா நீ... கடவுளை உணர பலமார்க்கங்கள். வைணவம், சைவம், கௌமாரம், சாக்தம், காணாபத்யம் என்று ஐவகை வழிகள் நமக்கு. அதில் சக்தி மிக்கது சாக்தம். இந்த சாக்தத்தில் நவமர் தேவியரில் ஒருத்தி சின்னமஸ்தா...! தூமாவதி என்கிற விதவை தேவதையை அடுத்தவள் இவள். தன் தலையை தானே வெட்டி தன்கரத்தில் பிடித்திருக்கும் தேவி இவள். உபாசிக்க மிகக்கொடியவள். வசப்பட்டால் மிக இனியவள். அஷ்டமாசித்தி அடைய காபாலிகர்கள் என்னும் சுடுகாட்டுக் கூட்டத் தவர்கள் இவளைத்தான் வேண்டி வழி படுவார்கள். பல்லவ தேசத்தில் இவர்கள் மிகபிரசித்தி பெற்றவர்கள்.

வழிபாட்டின் முடிவில் தங்கள் தலையை வெட்டி அர்ப்பணிப்பார்கள். ரத்தப்பசி மிகக்கொண்ட மின்தேவதை இவள். காற்று மழையை கைசொடுக்கி கணத்தில் வரச் செய்பவள்.

பஞ்ச பூதங்கள் இவளைக் கண்டாலே நடுங்கும்.

நமது மயான பெருவெளியில் ஒரு காலத்தில் நிறைய காபாலிகர்கள் திரிந்ததாகவும், அவர்கள் அங்கே சின்ன மஸ்தாவை சண்டி சொரூபத்தில் வழிபட்டதாகவும் அறிவேன்.

பின்னாளில் அவளது ரௌத்ரம் தாளாது அவளுக்கு பலிகள் தர முடியாது போக, அவளை சில சாதுக்களின் விருப்பப்படி மயான வெளியிலேயே புதைத்து விட்டனர்.

அப்படிப் புதைக்கப்பட்டவள்தான் இப்பொழுது மீண்டும் வெளிப்பட்டிருக்கிறாள். வெளியே வந்த நொடியே மழை மின்னலை அழைத்து ஒன்பதவர் உயிரையும் குடித்திருக்கிறாள்.

விட்டால் மயான வெளியில் ஒருவர்கூட நடமாட முடியாத நிலை ஏற்பட்டுவிடும்.''

கைலாச குருக்களின் விவரிப்பைக் கேட்டு புலித்தேவர் முதல் அனைவரும் சிலிர்த்து விதிர்க்கின்றனர். அங்கணன் குறுக்கிடுகின்றான்.

''கணக்காயரே... அங்குதானே இப்பொழுது நம் கஜானா பொற்காசுகள் உள்ளன?''

''ஆம்... அதற்கு இந்த வினாடி வரை ஒரு கேடும் இல்லை. மயானத்தான் நமது மிகப்பெரிய விசுவாசி. அது நம் தேச சொத்து என்று அதை மிகச் சாதுர்யமாக பதுக்கிவிட்டான்.

திரண்டு வந்த படையைக்கூட ஒரு செவிடனைப் போல பேசிச் சமாளித்துவிட்டான். அவன் ஒரு பக்கம் சமாளிக்க, மறுபக்கம் நமது குருக்கள் விவரித்தாற்போல சின்னமஸ்தா என்னும் கல்பிரதமையும் சமாளித்துவிட்டது.''

''அதை உடனே சாந்திப்படுத்துதல் மிக அவசியம். இல்லாவிட்டால் ஊருக்குள் பலருக்கு பைத்தியம் பிடிக்கும். மழலைக்குழந்தைகளின் ஜீவன் போகும். சின்ன மஸ்தாவிற்குப் பசி



எடுத்தால் அதற்கு அவள் ஆகாரமாய் கொள்வது மனித இரத்தத்தை... புதைத்த பிணங்களையும் தோண்டி எடுத்து விழுங்கத் தொடங்கி விடுவாள். இதை நான் கூறவில்லை. சாஸ்திரங்கள் கூறுவதைத்தான் கூறுகிறேன்.''

கைலாசக் குருக்கள் தொடர்ந்து சொல்வதில் இரத்த உறைவே சிலருக்கு ஏற்பட்டது.

''இப்படி எல்லாம் கூடவா நடக்கும்... ஒரு கல் பிரதமைக்கா அத்தனை சக்தி?''

''இல்லாமலா நவமரை அது அள்ளி விழுங்கியது?''

''உலகில் நமக்குப் புரியாத பல புதிர்கள். அதில் இதுவும் ஒன்று போலும்...''

''கணக்காயரே... இதன் காரணமாக நமது கஜானா செல்வத்திற்கு ஆபத்து ஏதும் நேரிடாதே?''

''எப்படிச் சொல்ல முடியும்? இந்த வினாடி மொத்த பொற்காசுகளையும், அச்சு முத்திரைத்தாட்களையும், ஒரு பெரிய வெண்கல அகவைகளையும், தாழியிலிட்டு அந்த மாயனத்தான், அந்தப் பிரதமை மேல் நம்பிக்கை வைத்து அது பார்க்கும்படியாக, அதன் பார்வை படும் ஓரிடத்தில் புதைத்து வைத்துள்ளான்.

நாம் எப்பொழுது சென்றாலும் அதைத் தோண்டி எடுத்து நம்மிடம் ஒப்படைக்க அவன் சித்தமாக உள்ளான்.''

''அவனை நம்பலாமா?''

''நம்பித்தான் ஆக வேண்டும். வேறு வழி ஏதும் இல்லை. இல்லாவிட்டால் நமது வீரர்கள் யாராவது அங்கு சென்று காவல் புரிந்தாக வேண்டும்.''

''காவல் புரிவதை பார்த்து நவாபின் உளவாளிகள் சந்தேகப்பட மாட்டார்களா?''

"அப்படியானால் மயானத்தானை நம்பி இருப்பதுதான் தற்போதுள்ள ஒரே வழி..."

ஆளாளுக்கு பேசும்போது புலித்தேவர் தீர்க்க சிந்தனையில், திருநீற்றுப் பந்தலிட்ட நெற்றியில் ரேகை விழும் ஸ்திதியில் யோசித்துவிட்டு நிமிர்கிறார்.

அனைவர் பேச்சும் அடங்கி கவனம் அபரிடம் பதிகிறது.

"வேல்மணி. நான் இப்பொழுதே அந்த மயானம் சென்று அந்த பிரதமையை வழிபட விரும்புகிறேன். கஜானா இருப்பு பற்றி எனக்குக் கவலையில்லை. எனக்கு தேவை அந்த தேவதையின் சாந்தம். அதன் காரணமாக என் பாளைய மக்களுக்குத் தீங்கு நேராமை.

கஜானா இருப்பு, இருந்தால் இருக்கட்டும், போனால் போகட்டும். நமது குருக்கள் சொன்னதில் இருந்து எனக்கு அந்தப் பிரதமை பற்றித்தான் கவலையாக இருக்கிறது.

அதைச் சாந்தப்படுத்த என்ன செய்ய வேண்டும் குருக்களே..."

"அதற்குச் சிறிதாகவேணும் கோயில் எழுப்ப வேண்டும். அதன் தலைபாகத்தில் ஆணி அறைந்து அதன் துவேஷம் சிறைபடச் செய்ய வேண்டும். பின் அடங்கிவிட்ட அந்த சொரூபத்திற்கு முக்கால பூசை நிகழ வேண்டும்.

இல்லாவிட்டால் அதைத் தலையில் சுமந்து சென்று நடுக்கடலில் போட்டுவிட வேண்டும். அவ்வாறு செய்யும் நபருக்கு எது வேண்டுமானாலும் நேரலாம்."

- குருக்கள் விவரிக்க விவரிக்க பலருக்கு வியர்க்கிறது.

"மயானத்தில் கோயில் - அதில் முக்கால பூசையா... யார் செய்வார்கள்?" - ஒருவர் ஐய்யரவம் கொண்டு கேள்வி கேட்டார்.

"செய்தாக வேண்டும். தனக்காக இல்லாவிட்டாலும் பாளைய சுபிட்சத்துக்காக செய்யத்தான் வேண்டும்..."

"அரசே ஆணையிடுங்கள்... அதை நான் செய்கிறேன்" சட்டென்று முன் வருகிறான் ஒருவன். அவன் நாவிதன் நல்லமுத்து.

"நல்லமுத்து நீயா?"

"ஆம் அரசே... யுத்தம் என்றால் மறவர் கூட்டம், வேதம் என்றால் வேதியர் கூட்டம், உழவு என்றால் உழவர் கூட்டம் என்று வகைக்கு வகை இருக்கின்றனர். அதுபோல் சிகை திருத்தம் புரியும் நாங்களும் தேசாபிமானம் காட்ட விரும்புகிறோம். நாட்டை கோயிலாகக் கருதி அதைக் காப்பாற்ற விரும்புகிறோம்."

"சபாஷ்..." - பாராட்டி கை சொடுக்கினார் புலித்தேவர். கைலாசக் குருக்கள் அதற்கு மறுப்பாக சிந்தித்தார்.

"என்ன குருக்களே பேசுங்கள்..."

"என்ன பேச தேவா... எதைப்பேச... நாவிதனின் நல்ல எண்ணத்தைப் பாராட்டலாம், பரிசளிக்கலாம். அவ்வளவுதான். அதற்கு மேல் பேச ஒன்றுமில்லை.

இந்தப் பூசை என்பது ஒன்றும் சாதாரணமில்லை. இதை நானே விரும்பினாலும் செய்ய இயலாது. இதற்கென ஆட்கள் உள்ளனர்..."

"யார் அவர்கள்?"

"வேறு யார்... கம்பளத்தார்தான். சமூகக் கட்டமைப்பிலேயே மனிதன் மனம் ஆன்மா என்கிற பிரத்யேக சிந்தனை படைத்தவர்கள் அவர்களே...

ஐக்க தேவியை குல தெய்வமாகக் கொண்டவர்கள், அதர்வண வேதாந்த ரகசியங்களை அறிந்தவர்கள். ஸ்ரீசாக்த மார்க்கத்தில் நெடுந்தூரம் சென்றுவிட்டவர்கள்."

"அப்படியானால் கம்பளத்தாரை நியமித்து ஆவன செய்வோம். வேலுமணி, நீயே அதையும் செய்துவிடேன்."

"உத்தரவு அரசே... இனி நான் அப்பகுதி செல்வதாக இருந்தால் மாறுவேடத்தில்தான் சென்றாக வேண்டும். ஏனென்றால் என்னை குறிவைத்து நவாபின் ஆட்கள் ஓவியப் படமுடன் அலைவதாகத் தகவல் வந்தது..."

"தெரியும் வேலுமணி... உன்னை மட்டுமல்ல... பீரங்கியால் சிதைத்த நமது கோட்டையையும், ஓவியனை வைத்து வரையச் செய்தான் அந்த யூசுப்கான் என்பது வரை எனக்குத் தகவல் வந்து விட்டது.

கேட்கக் கேட்க ரத்தம் கொதிக்கிறது.

அவனைப் பிடித்து, அவனது குரல்வளையில் என் பற்களைப் பதித்து, இரத்தத்தை உறிஞ்ச வேண்டும் எனும் அளவு ஆவேசம் பிறக்கிறது.

உங்களால்தான் அது மாறிப்போய் விட்டது. விவேகமில்லை. பின்னர் வெல்வோம் என்றெல்லாம் கூறி என்னை படையுடன் நிறுத்தி மோதவிடாதபடி செய்து நெடுந்தொலைவு அழைத்து வந்துவிட்டீர்கள்.

நாளைய வரலாறு இதன் காரணமாய் அந்த நரிப்பயலை வீரனாகவும், என்னை பேடியாகவும் பேசுமே என்றுதான் கவலைப்படுகிறேன்."

"நிச்சயம் பேசாது அரசே! நிச்சயம் பேசாது... சுற்றுப்பட்டு பாளையங்கள் எல்லாம் பணிந்து விட்ட நிலையில், இறுதிவரை பணியாத அஞ்சாத சிங்கம் புலித்தேவர் என்றுதான் உங்களைச் சொல்லும். அதுமட்டுமில்லை. நாளை நாம் வெல்லப் போவது உறுதி. அப்போது அனைத்தும் மாறிப்போகும். மீண்டும் நமது செவல்பாளையம் நிமிர்ந்தெழும்..."

"ஆம்... அப்படி' அது நிமிர்ந்தெழும் போது தற்போது புதைக்கப்பட்ட கஜானா செல்வம் திரும்ப நமக்கு உதவும்... அதன் மூலம் யுத்த தளவாடம் வாங்கலாம். மனைகளைச் சீர்படுத்தலாம். மீண்டும் மாளிகையை உருக்குக்கு இணையாகக் கட்டலாம். ஊரையை புத்தொளியோடு நிமிர்த்தி எழுப்பிடலாம்."

"நாளைய இந்த ஆசைகள் ஈடேற இன்றைய இடர்களை முதலில் வெல்லுங்கள். இதுநாள் வரை பூமிக்குள் புதையுண்டு கிடந்த ஒரு பூதமாய் இருந்த சின்ன மஸ்தாவை முதலில் சாந்தப்படுத்துங்கள். பிறகு மற்றதெல்லாம் தானாக நிகழும்..."

- கைலாசக் குருக்கள் உணர்வுக் கொதிப்பான பேச்சு வளையத்தை ஒரு முடிவுக்கு கொணருகிறார்.

அதன் நிமித்தம் அப்பொழுதுதான் வந்த வேல்மணித்தேவர் கிளம்புகிறார். மாறுவேடத்தில் தான்!

ஓசைப்படாமல் ஒரு பனையேற்றியைப் போன்ற உருவெடுத்து புலித்தேவரும்!

மயானத்தில் பேரமைதி.

யூசுப்கானும், மாபூசும் செலுத்தி வரும் புரவிகளின் நாலிரண்டு எட்டு கால்களின் குளம்பொலிச் சப்தம் மட்டும்தான் கேட்கிறது.

"ப்ளக்... ப்ளக்... ப்ளக்..."

"இதுதானா அந்த மயானம்?"

"ஆம் யூசுப்... பாளையம் சிறியதென்றாலும் மயானவெளி பெரிதாகத்தான் இருக்கிறது..."

"இங்கு தோண்டப்பட்டுள்ள குழிகள்...?"

"நமது வீரர்கள் அந்த கஜானா சேமிப்பைத் தேடி தோண்டியவைகள்..."

"இன்னமும் தோண்டிப் பார்க்க வேண்டியிருக்கிறதா?"

"ஆமாம்... இந்த மயானத்தான் மனதை."

"என்ன சொல்கிறாய் மாபூஸ்?"

"அவன் ஒரு புதிராக இருக்கிறான் யூசுப். காது கேளாதவன் போல நடிக்கிறானோ என்று எனக்குச் சந்தேகம்."

"பிடித்து சிலுவை மரத்தில் கட்டி முதலைச் சவுக்கால் அடித்தால் உண்மை தெரிந்து விடாதா?"

"நானும்கூட அப்படித்தான் நினைத்தேன்..."

"நினைத்துக் கொண்டேயிரு. சீக்கிரமாய் தளபதி ஸ்தானத்தில் இருந்து பின்னேறி தலைமைக் காவலனாக ஆகலாம்.

- யூசுப்கான் சூடு போடுகிறான். மாபூஸ் உடனேயே சினம் கொண்டு முறைக்கிறான்.

"முறைக்காதே இதற்கு... மறவர்களைப் பற்றி உனக்குத் தெரியாது. வெள்ளையனின் படைபலத்தாலும், துப்பாக்கி பீரங்கியாலும், ஜெயித்திருக்கின்றோம். இல்லாவிட்டால் நம் கண்ணில் விரலைவிட்டு ஆட்டியிருப்பார்கள். அத்துணை அழுத்தம், ஆழம், மற்றும் வீரம் மிக்கவர்கள் மறவர்கள். அவர்களிடம் பேச்சு எடுபடாது" என்றனர்.

யூசுப்கான் பேசியபடி இறங்கி மயான வெளியைப் பார்க்கிறான். பல இடங்களில் பிண வேக்காடு. யுத்தத்தில் இறந்தவர்களை உரியவர்கள் கொண்டு வந்து போட்டு அந்திமக்கிரியைகள் செய்து சென்றிருப்பதை மஞ்சளும் குங்குமமும் சிதறிக் கிடக்கும் பரப்பில் உணர முடிந்தது.

ஒரு இடத்தில் நடுகல் ஒன்றும் நாட்டப்பட்டிருக்கிறது. அதில் 'கம்மந்தான் கான்சாகிபை எதிர்த்ததில் வீரமரணம் எய்திய பெரியண்ணக் கள்ளனின் ஆன்மா இங்கு உறங்குகிறது" என்ற குறிப்பு.

"என்ன துணிச்சல்... என்ன கொழுப்பு..." யூசுப்கான் கால்கள் அந்த நடுக்கல்லை எட்டி உதைக்கின்றன.

"தோற்றுவிட்ட கோழைகளுக்கு கித்தாப்பை

மாபூஸ்... வீர மரணமாம் வீரமரணம்..."

- கர்ஜித்தபடி நிமிர்ந்தவனின் எதிரில் தெரியாதவன் போல அந்த மயானத்தான்.

"நீதான் மயானம் காப்பவனா?..." - யூசுப் கேள்வியைத் தொடுக்க, மாசாணம் காது கேளாத பாவனையைத் தொடர்கிறான்.

அடுத்த நொடி இடைவாளை உருவுகிறது யூசுப்பின் கரங்கள். அவன் மார்பின் மேல் கூர்முனையை பதிக்கின்றான்.

"உண்மையைச் சொல... இங்குதானே சுரானா இடம் பெயர்ந்துள்ளது...?"

"......"

"நடிக்காதே... நீ நடிப்பதை நிரூபித்து காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றி நிஜசெவிடன் ஆக்கி விடுவேன்..."

"......"

"உம், உண்மையைச் சொல். சொல்கிறாயா இல்லையா?"

"ஐயா, நீங்கள் என்ன கேட்கிறீர்கள்?"

"என்ன கேட்கிறோமா... சபாஷ்... அருமையாக நடிக்கிறாய். மாபூஸ் இவனை இனி பேசி வழிக்குக் கொண்டுவர முடியாது. சரி சரி போ..."

- கைச் சைகையோடு அவனை போகச் சொல்ல அவன் திரும்புகிறான்.

அடுத்த நொடி யூசுப்கானிடம் ஒரு உபாய அலறல்.

"ஏய்... உன் மேலாடையில் என்ன தேள் ஊர்கிறது?"

- சொன்ன மறுநொடி மாசாணம் எகிறிக் குதித்து மேலாடையை உதறவிட யூசுப்கானிடம் எக்காளச் சிரிப்பின் ஆரம்பம்.

''அடேய் செவிடா... 'அற்புதமடா உன் நடிப்பு...''

அவனை மடக்கிப் பிடித்துவிட்ட இறுமாப்புடன் அவன் சிரிக்க மாசாணம் விழி பிதுங்கினான்.

''மாபூஸ்... இவன் நடித்ததில் இருந்தே இவனுக்கு கஜானாப் பொற்காசுகள் புதைக்கப்பட்ட இடம் தெரியும் என்பது நிரூபணமாகிவிட்டது. இவனை கயிற்றில் கட்டி உன் புரவியில் ஏற்று. நம் இடத்தில் வைத்து உண்மையைக் கக்க வைப்போம்...''

யூசுப்பின் கட்டளையை செயல்படுத்த மாபூஸ் முனைய, யூசுப்கான் கால்கள் அந்த சின்ன மஸ்தா சிலையை நோக்கி நடக்கின்றன.

''மாபூஸ்... இதுதான் அந்த விசேஷ சிலையா?''

- நெருங்கிச் சென்று உற்றுப் பார்த்தபடி கேட்கிறான்.

''அலங்கார உணர்வே துளியும் இல்லாத எவனோ ஒரு சிற்பி வேண்டுமென்றே இதனைப் படைத்துள்ளான். மிரட்டும் இந்தச் சிலை நமது நவாபின் தளவாட சாலையில் இருந்தால் பொருத்தமாக இருக்கும். என்ன சொல்கிறாய்?''

- கேட்டபடி சிலையை குனிந்து வருடப் பார்க்கின்றன அவனது கைகள். அப்பொழுது அருகாமை மரம் மேல் இருந்து, மாலை போல் ஏதோ ஒன்று விழுந்தது. கவனம் அதன் மேல் திரும்பும்போது, கண் விழி இரண்டிலும் கொடூர விரிப்பு.

மலைப்பாம்பு ஒன்று, தான் காத்திருந்தது போல் விழுந்து யூசுப்கானின் உடலை வளைக்கத் தொடங்கியது.

''ஏய் மாபூஸ்... இங்கு பார் இந்தப் பாம்பை... சீக்கிரம் வா...'' அழைக்கும் முன் பரபரவென்று உடம்பை வளைத்து இறுக்கிப் பிடித்து

...ப்கானை அலற விடுகிறது அந்த மலைப் பாம்பு.

ஓடி வருகிறான் மாபூஸ்... கிட்டே நெருங்கி பற்றி உருவாமல் பூச்சி காட்டுகிறான்.

''ஏய்... உஸ்ஸ்... உஸ்...'' என்று கத்துகிறான்.

''வாளால் இதை வெட்டு... சீக்கிரம்... சீக்கிரம்'' தரையில் உருண்டபடி யூசுப்கான் கதறுகிறான்.

அவன் ஆக்ஞைப்படி வாளால் அங்கேயும் இங்கேயும் தட்டி ஒரு வழியாக அதைக் கொல்கிறான்.

உஸ்ஸ்... அப்பாடா... யூசுப்கானின் பெருமூச்சும் நெடுமூச்சுமாய் அலறியபடி எழுந்திருக்க, திரும்பிப் பார்த்தால் மயானத்தான் கண்களிலும் சொல்ல முடியாத அளவு பயம். அதன் பிறகு அந்தச் சிலையை பார்க்கவே அவனுக்குப் பயமாக இருந்தது.

''இது ஏதோ சூதுபிடித்த சிலை. மந்திரச் சிலை. இதை நாம் தனியாக தொடுதல் நல்லதில்லை. வா போவோம்... பின் வருவோம்... பின் வருவோம்...''

- யூசுப்கான் சொல்லியபடி எழுந்து புரவியை நோக்கி நடக்க அந்தச் சிலை அதை வேடிக்கையாக பார்த்தபடி அமர்ந்திருக்கிறது!



## 14

அருள்மணியின் அதிர்ச்சி நிரம்பிய முகத்தைப் பார்க்கும் சீனியம்மாள் ''என்னடா கண்ணு வாயப் பொளந்துட்டே. எப்படி நீ உன் தாத்தா போல இருக்கேன்னா...?''

''....''

"இதுல ஆச்சரியப்பட எதுமில்ல... நீ உன் அப்பன் பாட்டனை கொள்ளாமே யாரைக் கொள்வே...? அதனாலதான் உன் அப்பாவும் இதைப் பெரிசா எடுத்துக்கலை."

"ஆனா மத்த விஷயங்களை பெரிசா எடுத்துக்கிட்டாராக்கும்?"

"நீ அந்த் கஜானாவைச் சொல்றியா?"

"ஆமாம்மா... அப்பா அதை எடுக்க என்னென்ன பண்ணினாரு. உனக்குத் தெரியுமா?"

"நீ தெரிஞ்சு என்ன பண்ணப் போறே?"

"இது என்ன கேள்வி...? அப்பா தப்பு பண்றாரும்மா, இன்னிக்குக்கூட அவர் தப்பு பண்ணினாரு. எங்கிட்ட வெட்டியான் புதையல் பத்தி பேசினான். அதப்பத்தி அவர்கிட்டயே நான் கேட்டேன் அவ்வளவுதான். உடனே கிளம்பினார் அவனைப் பார்க்க... போனவர் ஒருத்தன் கழுத்த நெறிச்சதை, எரிமேடையில தூக்கிப் போட்டதை பார்த்தேன். இந்தக் கண்ணாலப் பார்த்தேன். என்னை நம்பும்மா நம்பு..."

- திரும்ப தந்தி போல படபடக்கிறான் அருள்மணி. சீனியம்மாள் கண்ணில் நீர் கோர்க்கிறது... பேசாமல் நிற்கிறாள்.

"பேசும்மா... ஏன் பேச மாட்டேங்கறே. பேசு அப்பா இப்பவே குற்றவாளி..."

"தெரியும் தம்பி... நீ ரொம்ப கிண்டாதே... அப்பால எனக்குத் தாங்காது..."

"அம்மா... நான் அவரைக் காப்பாத்த உன்னை பேசச் சொல்றேன். இந்த மாதிரி இன்னும் என்ன என்ன தப்புப் பண்ணியிருக்கார் அவர்..."

"அது... அது..." அவள் மிடறு விழுங்க, மாடிப்படியில் முத்துராமலிங்கம் ஏறி வருகிறார். வருபவரிடம் நல்ல கான்கிரீட் அழுத்தம். அவர் வருகையில் சீனியம்மாள் சற்று ஸ்தம்பிக்கிறாள்.

"...என்ன புள்ள பேச்ச நிறுத்த..."

"அது... அது... ஒண்ணுமில்லிங்க. வந்து..."

"என்ன வந்து போயி... கைல என்ன படம் [illegible] வீட்டு மரப்பெட்டி சொத்தாக்கும்?"

"அப்பா, இந்தக் குத்தல் பேச்செல்லாம் வேணாடாம். நேராவே கேக்கறேன். கஜானா காசை எடுக்க என்னென்ன தில்லுமுல்லுல்லாம் பண்ணியிருக்கீங்க?"

"தெரிஞ்சு அதை கவர்மெண்ட் கைல பிடிச்சு கொடுத்துடலாம்னு பாக்கறியா?"

"ஆமா... பூமிக்கடியில் இருந்து எது எடுத்தாலும் அது அரசாங்கத்துக்குச் சொந்தம்."

"இப்படி நீ பேசுவேன்னு தெரியும். அதனாலதான் உன் வரைல இது தெரியாதபடி பாத்துகிட்டேன். ஆனா உங்கம்மா உளறிக் கொட்டிட்டா. இதோ பார் அருள்மணி. நீ என் மகன். நான் உன் அப்பன். எனக்கு எது கிடைச்சாலும் அது உனக்கும்தான். சட்டம் பேசி கெடுத்துடாதே.

என் ஜாதகத்துலயும் புதையல் எடுக்கற யோகம் இருக்கறதா எல்லா ஜோசியக்காரர்களும் சொல்லியிருக்காங்க. கிடைச்சா நாம கோடீஸ்வரங்க. மொத்த குடும்பமும் உக்காந்து பல தலைமுறைக்கு சாப்பிடலாம்..."

- முத்துராமலிங்கம் மிக இணக்கமாகப் பேசினார். அருள்மணி முறைத்தான்.

"ஆசைப்படுறதுக்கும் ஒரு அளவு இருக்குப்பா... ஆனாலும் இது பேராசை..." என்று சற்று கத்தவே செய்கிறான்.

"எல்லாரும் பாக்கறாங்க பார்... யாருக்கும் எதுவும் தெரியாம காரியம் பண்ணிக் கிட்டிருக்கேன். கொஞ்சம் வாயை மூடுறியா... ஏ புள்ள எல்லாம் உன்னால வந்தது..."

- முத்துராமலிங்கம் மனைவி பக்கம் திரும்பிச் சீறினார். அவள் நடுங்கினாள்.

“என்னடா ராமு சத்தம். இப்பதான் வந்திருக்கான் என் பேரன். அவனோட என்னடா 'மல்லு...”

- குருணிக்கிழவி நிமிண்டிக் கொண்டு அந்த மாடிக் குடிசைக்குள் நுழைகிறாள்.

“வாயை மூடிகிட்டு போங்க எல்லாரும். இந்தாடி. சொல்லி வை. நாம சந்தோஷமா இருக்கறதும் சந்தி சிரிக்கறதும் இனிமேட்டு இவன் நடந்துக்கறதுலதான் இருக்கு...” - சொல்லிவிட்டு பரபரவென்று இறங்கி வெளியேறுகிறார்.

அருள்மணி முகத்தில் அனல்!

***

தோட்டத்தில் காற்று விளையாடிக் கொண்டிருக்கிறது. போர்வெல் போட வந்தவர்கள் போட்டுவிட்டு போய் விட்டிருந்தார்கள். சோகமாய் வந்து அமர்கின்றவனை அம்புலியின் குரல் அழைக்கிறது.

“தம்பி...”

“வா அம்புலி...”

“வீட்ல ஒரே ரகளையாம்ல... கேள்விப் பட்டேன்.”

“ஆமாம். அப்பா போக்கே சரியில்லை.”

“நீங்க சொல்லலாம். நான் சொல்ல முடியுமா? வேலைக்கார நாயிதானே?”

“அப்படி எல்லாம் சொல்லாதே. நல்லதை யார் வேணா சொல்லலாம். ஆமா, அப்பா நேத்து நாம பார்த்த மாதிரி இதுக்கு முந்தி வேற ஏதாவது தப்பு பண்ணியிருக்காரா?”

“.....” அம்புலி மௌனிக்கிறான்.

“என்ன அம்புலி... சொல்லு... தைரியமா சொல்லு.”

“வேண்டாம்யா... கேட்டா உங்களுக்கும் சங்கடம் எனக்கும் சங்கடம்.”

“நீ சொல்லலேன்னாதான் சங்கடம்...”

“வேண்டாம் தம்பி... காரியம் கை மீறிப் போச்சு. இன்னிக்குக்கூட மயானத்துல ஒரு பூசை வெச்சிருக்காரு. அந்தக் கம்பளத்தான்தான் ஏற்பாடு...”

“என்ன பூஜை?”

“புதையல் எடுக்கத்தான்... யாரோ மந்திரவாதிய கூட்டிகிட்டு வந்து நடத்தப் போறாரு. இன்னிக்கு எப்படியும் அந்தப் புதையல் இருக்கிற இடம் தெரிஞ்சிரும்னும் அவர் பேசிக்கிட்டிருந்ததை ஒட்டுக் கேட்டேன்.”

“அப்படியா சேதி... அப்ப அதைப் பார்க்கணுமே...”

“ஒரே வழிதான்... எதுவும் பேசாம தென்ன மரத்து மேல ஏறி நின்னு பாக்க வேண்டியதுதான்.”

“ஆமா இந்த விஷயம் ஊர்ல யாருக்கும் தெரியாதா?”

“அவ்வளவா தெரியாது. ஏன்னா மயானத்துல இருக்கே ஒரு சாமி, அதுக்குப் பயப்படாதவங்க கிடையாது. புதையலை தேடி யார் வந்தாலும் அவங்களை அது காவு வாங்கிடுறதா ஒரு பேச்சு இருக்கு...

ஆனா உங்கப்பா அந்த சாமியை முதல்ல சரிக்கட்டிட்டா புதையல் எடுத்துடலாம்னு நினைக்கிறார்.”

“சாமிய சரிகட்றதா?”

“ஆமா... அதுக்கு உசுரோட சிலரை பலி கொடுக்கறது. அநேகமாக நாம பார்த்த ஆளைக் கூட அந்தக் கணக்குலதான் கொன்னுருக்கணும்.”

- அம்புலி சொல்வதைக் கேட்டு தலையை சிலிர்ப்பிக் கொண்டு தத்தளித்தான் அருள்மணி.

“என்ன தம்பி நம்ப முடியலையா?”

“ஆமாம்... என்ன அம்புலி இது பைத்தியக் காரத்தனம். முட்டாள் தனத்துக்கும் ஒரு அளவு

இல்லியா? புதையல் இருக்குன்னா அதை அறிவுப்பூர்வமா தேடணும். அதை விட்டுவிட்டு காவு, பலி, பூஜைங்கறதெல்லாம் காட்டு மிராண்டித்தனம்.

எங்க டிபார்ட்மெண்ட்ல நாங்க தோண்டாத நிலங்களா... பாக்காத பொக்கிஷங்களா...?

எங்களை எந்தப் பேய் அடிச்சிடுச்சு...? நாங்க என்ன செத்தாப் போயிட்டோம்...?''

''அப்படிச் சொல்லாதீங்க... நம் மயான கோவில் சாமி பத்தி யார் என்ன சொன்னாலும் நான் நம்ப மாட்டேன். அது கம்மந்தானையே விரட்டின சாமி...''

''யார் அது கம்மந்தான்?''

''இங்கு பாளையத்தப் பிடிச்ச நாயகத்தான் தான்.''

''அவனை இந்த சாமி விரட்டியதை நீ பார்த்தியா...?''

''சொல்லிக் கேக்கறதுதான்.''

''சொல்லிக் கேக்கறதுன்னாலே அதுல மசாலாவும் சேர்ந்திருக்கும்கறத மறந்துடாதே.''

''அப்ப சரித்திரமெல்லாம் பொய்யா...?''

''சரித்திரம் பொய் இல்ல... அதுல பல விஷயமும் பொய்...''

''அப்படின்னா அந்த சாமிக்கு சக்தி இல்லையா... நீங்க நேத்து பாத்த விஷயங் கள்லாம் என்ன?''

''எல்லாம் அந்தக் கிழவன் வேலையா இருக்கலாம்.''

''இவ்வளவு பேசறீங்களே, நீங்க கண்டுபிடியுங்களேன் அந்தப் புதையலை.''

''முதல்ல புதையலே உண்மையான்னு தெரியணுமே.''

''அதுலயே சந்தேகமா?''



''இல்லியா பின்னே... எதை வெச்சு இந்த ஊர்ல புதையல் இருக்குன்னு தீர்மானிக்கிறது?''

''இருக்கு தம்பி... அதுல சந்தேகம் வேண்டாம்.''

''அதான் கேக்கறேன். எதை வெச்சு... எதாவது பட்டயத்துல சொல்லியிருக்கா... நடுகல் இருக்கா... கல்வெட்டு குறிப்பு இல்ல, ராஜாங்க பதிவுகள் எதுலையாவது ஒரம் சாரமாவது சொல்லப் பட்டிருக்கா?''

''சொல்லப்பட்டிருக்கு தம்பி... உங்கப்பாவே அதை பார்த்த பிறகுதான் நம்புனாரு...''

''என்ன சொல்லப்பட்டிருக்கு...? அது எப்படி கிடைச்சது...''

''செவல்ல உள்ள உங்க தாத்தன் வீட்டு மரப்பெட்டில.''

''மரப்பெட்டில படங்கள்தானே இருந்துச்சு...''

''ஏட்டுக்கட்டும் இருந்துச்சே...''

''நிஜமாவா?''

''அதை எடுக்கும்போது நானும் கூட இருந்தேன்.''

''எப்படி இருந்தது அது?''

''பனை ஓலை ஏடு தம்பி அது... அதுல நல்ல எழுத்து தமிழ்ல என்னென்னமோ எழுதி யிருந்துச்சு.''

ராஜாவுக்கு வுணக்கம்!

மயானத்தானை கம்மந்தான் சித்ரவதை செஞ்சும் அவன் உண்மையை சொல்லலை. மயங்கிட்ட அவனை செத்துட்டதா நினைச்சு ஒரு பாறை மேல காக்கை, குருவிக்கு விருந்தா போட்டுட்டான் கம்மந்தான்.

ஒளிஞ்சிருந்து பார்த்த நான் அவன் உடம்பை அங்க இருந்து எடுத்துகிட்டு போய் புதைக்கப் போனப்ப அவனுக்கு கொஞ்சம் உயிர் இருந்துச்சு. அவன் பேசினான் என்கிட்ட. அதன்படி சாமி

பார்வைல நம்ம செல்வம் பாதுகாப்பா இருக்கு... உண்மையாவும் உரியவங்களும் வந்தாத்தான் அவங்க கைக்கு அது கிடைக்கும். மத்த யார் வந்தாலும் அவங்க மரிச்சுடுவாங்கன்னு சொன்னான்.

அதே போல அது இருக்கிற இடத்தையும் சொன்னான். ஒன்பது குழில தோல்பைல வெச்சுப் புதைச்சதை ஒண்ணா திரட்டி ஒரே இடத்துல புதைச்சுட்டான்.

நான் மயான கோவில் பூசைக்கு ஏற்பாடு செய்துட்டேன். நாணயமா கம்பளத்தார் பூஜை செய்யற வரை பிரச்சனை இல்லை. மயானத்துல மயான்த்தான் மகன் அப்பன் பொறுப்பை தொடருவான். நீங்க இந்த ஏட்டில் கண்டபடி விஷயம் தெரிஞ்சுக்க வேண்டியது.

நாளை பின்னே கஜானா செல்வம் தேவைப்படும் போது கோவிலுக்கு வந்து கம்பளத்தான் கிட்ட கேட்டா, அவன் அது இருக்கிற இடம் பத்தின குறிப்பை அந்த சின்ன மஸ்தா சிலை குந்தி இருக்கிற பீடத்துல இருந்து எடுத்துத் தருவான். இந்த விபரம் இதுவரை எனக்கும் அவனுக்கும், இப்போ உங்களுக்கும் தான் தெரியும்.

அந்தக் குறிப்புப்படி புதைச்சு வெச்சிருக்கிற இடத்தைக் கண்டறிஞ்சு செல்வத்தை எடுத்துக் கலாம். இப்போதைக்கு நமது ராஜதானிகள் உருவங்களையும் இடிஞ்ச நம்ம கோட்டைப் படத்தையும் வரைஞ்சு அனுப்பப் பார்த்தான். அதுல சம்மந்தான் நவாபுக்கு எழுதின கடிதமும் இருந்தது. ஓவியங்களையும் கடிதங்களையும்கூட இதுல வெச்சு அனுப்பியிருக்கேன். இவைகள் சங்கரன் கோவில் வழியா திருச்சிக்கு ஜவான்கள் சிலர் மூலமா போனப்போ நர்ன் சில வீரர்களோட வழிமறிச்சு தடுத்து பிடிச்சது.

- அப்படின்னுல்லாம் அதுல இருந்துச்சு தம்பி.

அம்புலி மூச்சு விடாமல் சொன்னான். அருள்மணியால் அதை நம்பவும் முடியவில்லை, நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

"இப்ப அந்த ஓலைக்கட்டு எங்க இருக்கு?"

"உங்க வீட்லதான்."

"நான் இப்பவே போய்ப் பார்க்கிறேன்."

"பாத்து தம்பி. இப்போதைக்கு உங்கப்பாக்கு

"பாத்து தம்பி... அந்த சாமி பீடத்துல புதையல் ரகசியம் இருக்குங்கறது தெரியும். ஆனா அதை எடுத்தா சாமி அடிச்சிரும்னு பயப்படறாரு.

அதைச் சாந்திப்படுத்தத்தான் பலிங்க... பூஜைங்க..."

"நீ சொல்றது மட்டும் உண்மைன்னா நானே நேர போய் அந்தப் பீடத்துல இருந்து அந்தக் குறிப்பை எடுக்கறேன். புதையலையும் எடுத்து கவர்மெண்ட் கிட்ட கொடுப்பேன். என் டியூட்டி அது..."

"வேண்டாம் தம்பி... அந்த சாமிகிட்ட விளையாடாதீங்க."

"இதோ பார் அம்புலி. இந்த சாமி பூதம்லாம் பிறரை மிரட்டறதுக்கு...! கோழைகள் முட்டாள்கள்தான் இதுக்குப் பயப்படுவாங்க. நானில்லை... நான் இப்பவே வீட்டுக்குப் போய் பாக்கறேன்."

அருள்மணி அடுத்த நொடி வேட்டியை மடித்துக் கொண்டு கிளம்பி விட்டான்.

***

**வீ**ட்டுக்குள் அவன் நுழையும் போது குருணிக்கிழவி ஊஞ்சலில் படுத்திருந்தாள். அம்மா பகல் வேலைக் களைப்போடு உறங்கியே போயிருந்தாள். தங்கைகளைக் காணவில்லை. எங்கே போனார்களோ?

நல்லவேளை அறைக்கதவு திறந்தே இருந்தது.

உள்ளே போய் பீரோவை திறக்கப் பார்த்தான் முடியவில்லை. பூட்டப்பட்டிருக்கிறது.

'அத திறக்க முடியாது... உங்கப்பன் கிட்ட இருக்கு சாவி...' - குருணிக்கிழவி சாவதானமாக அவன் முயற்சி தெரிந்து பதிலை அனுப்புகிறாள்.

"கள்ளச்சாவி போட்டாச்சும் திறப்பேன்..."

- அவன் பதில் சீனியம்மாள் உறக்கத்தை கலைக்கிறது. அருள்மணி தீர்க்கமாய் பீரோவைப் பார்த்தான். புஜத்தில் வேலுவேற்றி கைப்பிடியை அழுத்தினான்.

"தம்பி வேண்டாம்... அந்த அறைக்குள்ள போனாலே உன் அப்பா அலறுவார்..." சீனியம்மாள் கெஞ்சுகிறாள்.

"அவர் அலறினாலும் சரி... அலறாட்டியும் சரி... என் தாத்தா வீட்டு மரப்பெட்டி சமாச்சாரத்தை நான் பார்த்தாகணும்."

- கறுவிக் கொண்டு பக்கமாய் உள்ள குழவியை எடுத்து கைப்பிடி மேல் அடிக்கிறான். பின் என்ன நினைத்தானோ கம்பி போல் ஒன்றை எடுத்து உள்ளே விட்டுக் குடைந்தான்.

அவன் அதிர்ஷ்டம்.

பூட்டு திறந்து கொள்கிறது.

பீரோவில் இருந்த அந்த மரப்பெட்டியைத் திறந்தான். மாட்டுத் தோலை பதம் செய்து மூலிகை தைலங்களால் வரையப்பட்ட முகங்கள்...

இடிந்த கோட்டை, பறக்கும் கழுகுகள் என்ற காட்சி... கீழே நாள் கிழமை நேரம் முதலான குறிப்பு. மங்கலாகி விட்டாலும் பார்க்க முடிகிறது.

அடுத்து ஓலைக்கட்டு. அதில் ஊசி முனையால் உருவான எழுத்துக்கள்.

"தேவரீர் மகாராஜ ராஜ ஸ்ரீதேவர் பிரான் திவ்ய சமூகத்திற்கு...

இப்பவும் நாளும் மயானதேவி கோவில் பூஜை நடந்தேறிக் கொண்டிருக்கிறது. சந்தேக முடன் கம்மந்தான் ஆட்களும் மயானத்தைச் சுற்றி வருகிறார்கள். நானும் மாறுவேடத்தில் அனைத்தையும் பார்த்து வருகிறேன். இன்று நமது செவல்பட்டிணத்தில் கம்மந்தான் தன் குதிரைப் படையை நிரந்தரமாக நிறுத்தி வைத்துள்ளான்.

ஊரை சீரபடுத்தவேயில்லை.

கஜானா செல்வம் இதுகாறும் மயான சின்ன மஸ்தா அருளால் பாதுகாப்பாகவே உள்ளது. எனக்கு ஏதும் ஆனாலும் கவலையில்லை. சின்ன மஸ்தா பீடத்தில் உள்ள ரகசியம் உங்களுக்கு வழிகாட்டும்.

அந்த நம்பிக்கை மிக திடமாக உள்ளது.

அது அரசாங்க சொத்து. அன்னியர் எவராலும் தீண்ட முடியாது. அதை பாதுகாக்கவே சின்ன மஸ்தா அங்கு எழுந்தருளியுள்ளதாகக் கருதுகிறேன். நீங்களோ அல்லது புதைத்த நானோதான் அதை எடுக்க முடியும். எத்தனை வருடமானாலும் அதுதான் உண்மை. அவள் அருள் மீண்டும் நமது பாளையம் நம் வசமாக உதவி செய்யட்டும்.

இப்படிக்கு<br>
விசுவாசகுல திலகனாய்<br>
கணக்காயன் வேல்மணித்தேவன்.

- படித்து முடிக்கும் அருள்மணியின் விழிகளில் ஆச்சரியம். இனி ஒரு விநாடி தாமிக்கக் கூடாது. சிலிர்த்து நிமிர்கிறான்!

"எங்க தம்பி கிளம்பிட்டே...?"

"மயானத்துக்கு..."

"ஐயோ வேண்டாம்யா..."

"இல்லம்மா... இனி யார் தடுத்தாலும் கேக்க மாட்டேன்."

- அவனது புறப்பாட்டில் புயல் தோற்றது.

# 15

பனையேறியாகவும், குடுகுடுப்பைக் காரனாகவும் வேல்மணித்தேவரும் புலித்தேவரும் மயானத்துக்குள் நுழைகின்றனர். யாரையும் காணவில்லை.

நேராக இருவரின் கால்களும் சின்ன மஸ்தா நோக்கித்தான் செல்கின்றன.

புலித்தேவர் நின்று உற்று நோக்குகிறார்.

ஒரு நீண்ட நெடிய விளைந்த பார்வை.

அடுத்து அப்படியே நெடுஞ்சாண்கிடையாக தரை மேல் விழுகிறார். வேல்மணித்தேவர் வியக்கிறார்.

இது எனக்குத் தோன்றவில்லையே...?

நிமிர்ந்தெழுகிறார் புலித்தேவர்.

திறந்த மார்பில் மயான மண் துகள்கள்.

உதட்டில் பிரார்த்தனை.

''தாயே... உன்னை வணங்குகிறேன். அரசனாய் இருந்திருந்தால் உனக்கு பெரிய கோவிலே கட்டியிருப்பேன். இப்பொழுது நானொரு ஆண்டி. நாடிழந்த பிரஜை.

என்னை மன்னித்துவிடு. என் பாளையச் சொத்தை பாதுகாத்திடு. என் பாளையத்தை நான் மீட்ட மறுகணமே உனக்கு பெரிதாக சன்னதி எழுப்புவேன்.

அன்னை கோமதி போல உன்னையும் போற்றி வணங்குவேன்.''

- அவரது பிரார்த்தனை கேட்டு வேல்மணித் தேவரிடம் மேலும் சிலிர்ப்பு ஏற்பட்டது.

''அரசே... எனக்கு இப்படி எல்லாம் பிரார்த்திக்கவே தோன்றவில்லை...''



''அதனால் என்ன வேலுமணி. நான் வேறு நீ வேறா... அது சரி... நமது கஜானா ஊழியர்கள் சமாதிகள் எவை...?''

''அதோ...'' வேல்மணித்தேவர் காட்ட, அதனருகே சென்று மண்டியிடுகிறார் தேவர்.

''இதில் எது குமரப்பிள்ளையுடையது?''

''அந்தக் கடைசி சமாதி...''

''திருமுகம் காண முடியுமா?''

''பார்க்கலாம். மயானத்தானைக் காணவில்லை. அவனை அனேகமாக கான்சாகிப் பிடித்துப் போயிருக்கலாம்.''

''சரி... இங்கே எங்கு புதைக்கப்பட்டுள்ளது கஜானா செல்வம்?''

''இந்த சமாதிகளில் இருந்ததை அவன்தான் ஒருமைப்படுத்தி ஓரிடத்தில் புதைத்துள்ளான். அவனைச் சந்தித்தால் தெரிந்துவிடும்.''

''சரி. அவனுக்கு எனது நன்றியைச் சொல்... அப்படியே எப்படியாவது இந்த பிரதமைக்கு கூரை கொடுத்து நித்ய பூஜைக்கும் ஏற்பாடு செய்து விடுங்கள். அடிக்கடி செய்தித் தொடர்பு இருக் கட்டும். நான் பிறகொரு முறை வருகிறேன்.''

''நல்லது அரசே... எச்சரிக்கையாக செல்லுங்கள்.''

''ஆண்டவன் இருக்கிறான். எனக்கேதும் வந்திடாது. கவலை வேண்டாம்.''

- புலித்தேவர் அகன்ற மறுநொடியே ஒரு அழுகுரல் கேட்கிறது. அழுபவன் ஒரு விடலைச் சிறுவன்.

''ஏய்... யார் நீ... ஏன் அழுகிறாய்...?''

''நான்... நான்...''

''அஞ்சாதே சொல்...''

''நான் இந்த மயானத்தார் மகன். என் அப்பாவை அந்த கான்சாகிப் சித்ரவதைச் செய்து

உடலை பக்கத்து காட்டின் பாறை மேல் போட்டுவிட்டான்.

காக்கையும் குருவியும் சாப்பிட வேண்டுமாம் அவர் உடலை. ஊருக்கே வெட்டியானாக இருந்து அனைவர் உடலையும் புதைத்தும் எரித்தும் காரியம் செய்த என் அப்பாவின் நிலையை நினைத்தேன். அழுகை வந்துவிட்டது.''

''அடப்பாவி... இப்பொழுது உடல் அங்கு தான் இருக்கிறதா?''

''ஆமாம்...''

''வா, நான் உனக்கு உதவுகிறேன்...''

அடுத்த நொடியே இருவரும் அங்கிருந்து கிளம்பினார்கள்.

* * *

அந்தக் காட்டுப் பகுதியில் பிரண்டையும், கத்தாழையும் மிகுந்து கிடக்கிறது. நடுவில் சமதளமாக உள்ள பாறைமேல் கிடைக்கிறது மயானத்தான் மாசாணத்தின் ரத்த காயமான உடல்.

பாய்ந்து சென்று தூக்கி மடியில் இட்டுக் கொண்டு கண் கலங்குகிறார் வேல்மணித்தேவர்.

''மாசாணம்... அடேய் மாசாணம். பாளையத்துக்காக நீகூட உன் இன்னுயிரைத் தந்துவிட்டாயா?

உயிரையே விட்டிருக்கிறாய் என்றால் அந்த ரகசியத்தை நீ கூறவில்லை என்றுதான் பொருள்.

உனக்கு எப்படி நன்றி சொல்வேன் நான்... எப்படிச் சொல்வேன்...''

- மாசாணம் உடலை மடியில் போட்டுக் கொண்டு அழுகிறார் வேல்மணித்தேவர். அவரது மகனுக்கே அது ஆச்சரியமாக இருக்கிறது.

''ஐயா... நீங்கள்...''

''நான் கணக்காயன் - கஜானா காப்பாளன் வேல்மணித்தேவர் தம்பி. உன் தந்தை என் ஆத்ம ஸ்நேகிதன்.''

''ஐயா நிஜமாகவா...''

''சத்யமப்பா...''

- அதைக்கேட்டு அவன் மகிழ்ந்தது போலவே மாசாணம் உடலும் மகிழ்ந்ததோ என்னவோ, வேகமாகத் துடித்தது.

''ஆ... உயிர் இருக்கிறது போலிருக்கிறதே...''

வேல்மணித்தேவர் மாசாணம் நெஞ்சில் காதை வைத்துப் பார்க்கிறார்.

அது துடித்தது.

''மாசாணம்... மாசாணம்...'' பதட்டத்துடன் அவன் கன்னத்தைத் தட்டுகிறார். அவனும் ஏமாற்றாமல் கண்களைத் திறக்கிறான்.

''ஐயா... வந்துட்டிங்களா?''

''என்ன நடந்தது?''

''கம்மந்தான் கட்டி வெச்சு உறிச்சான். கஜானா செல்வத்த கேட்டான். தெரியாதுன்னு சாதிச்சுட்டேன்.

இப்படிப் பண்ணிட்டான். எங்க உங்களப் பாக்காம உசிர் போயிடுமோன்னு நினைச்சேன். நல்லவேளை அந்த ஆண்டவன் காப்பாத்திட்டான்.''

''ஆமா, அதை எல்லாம் எடுத்து வேற எங்க புதைச்சு வெச்சிருக்கே?''

''பத்ரமா இருக்கு... ஆனா மயான வெளில இல்ல அது. அது இருக்கறத பத்தின குறிப்பை, தகடு அடிச்சு எனக்கு தெரிஞ்ச விதத்துல படமா வரைஞ்சு அந்த சாமி சிலைக்குக் கீழேயே வெச்சிருக்கேன்.

இந்த நிமிஷம் அதுதான் எனக்கு பாது காப்பான இடம். அது கான்சாகிபையே

பாடாய்படுத்தி அனுப்பிடுச்சு. சக்தி உள்ள அதை...

- மாசாணம் பேச்சு முடியும் முன் உயிர்ப்பறவை மேலெழுந்தது.

கண்ணீருடன் நிமிர்ந்தெழுந்தார் வேல் மணித்தேவர். குடுகுடுப்பைக்காரன் தோற்றம். உடம்பை அள்ளித் தோளில் போட்டுக் கொள்கிறார். கரட்டை விட்டு கீழே இறங்கும் போது காவல் செய்யும் சில வீரர்கள் பார்த்துவிட்டு பாய்ந்து வருகின்றனர்.

''அடேய் அவன் துரோகி... காக்கை விருந்து அவன் சரீரம். அதையா எடுத்தாய்?''

வேல்மணித்தேவர் சமாளித்தார்.

''ஐயா... நான் காக்கை கழுகைவிட மோசமானவன். குடுகுடுப்பைக்காரன். பிண பூசை செய்பவன். ஜக்கம்மாதான் பாறையில் உடம்பு இருக்கு எடுத்துக்கோ என்றாள்'' என்றார்.

அவர்கள் கப்சிப்.

அங்கிருந்து மகனுடன் மயானம் வந்து பிணத்தை புதைத்துவிட்டுத்தான் நிமர்ந்தார். மகன் பிண்டம் போட்ட நிலையில் நிறைய அழுகிறான்.

''கவலைப்படாதே... பாளையம் திரும்ப நம் வசம் வரும். உனக்கெல்லாம் உரிய இடம் கிடைக்கும். அது வரை இந்த மயானப் பணியைத் தொடரு...''

- அவன் அழுகையோடு சம்மதமாய் தலை அசைக்கிறான்.

''நான் அடிக்கடி வருவேன்... அந்தச் சிலையை மட்டும் தொட்டுவிடாதே...'' - சொல்லிவிட்டுச் செல்கிறார்.

மெல்ல மெல்ல ரகசியமாய் கோயில் கட்டி முடிக்கப்பட்டு அந்த பிரதமை உள் செல்கிறது. பீடத்தில் மாசாணம் எழுதிய தகட்டுக் குறிப்பு.



'பிரதமை வடிவத்துக்கு நேர் எதிரில் ஆயிரம் தப்படி வடக்கில் கிணற்றருகே உள்ள பாம்புப் புற்றுக்கு பின்னால் மொத்தமும் புதைக்கப் பட்டிருக்கும் தகவல் குறிப்பு வரைபடமாய் தெரிகிறது.'

- வேலுமணித்தேவருக்கு அதைப் பார்க்க பரவசம் பொங்கியது.

மாசாணம் கல்வியறிவற்றவனாக இருந்தும் சாதித்துவிட்டதாக நினைத்து உச்சி சிலிர்த்தார்.

அந்தக் குறிப்பின் மீது சின்ன மஸ்தா எனும் பிரதமை ஏறி அமர்கிறது.

உரிய திட்டமிடலின்படி விசுவாசமிக்க கம்பளத்தார் ஒருவர் வந்து பூசையை ஆரம்பிக்கிறார். முதல் பூசையின் போதே கற்பூர சத்யம் செய்கிறது அவர் கரங்கள்.

''இந்த ரகசியத் தட்டை புலித்தேவ மகாராசாவிடமோ அல்லது வேல்மணித் தேவராகிய உங்களிடமோதான் தருவோம். வேறு யார் வந்தாலும் தரமாட்டோம். நாங்களும் அதைப் பார்த்து தப்பு செய்ய மாட்டோம். இந்தப் பூசையை எனது தலைமுறைகள் தொடரும். அதற்குப் பரிசாக பாளையம் பின்னாளில் தரும் ஏழு கிராமத்தை ஏற்று அதில் கம்பளத்தார்களே வாசம் செய்ய அனுமதித்தால் போதும். இது சத்தியம், இது சத்தியம், இது சத்தியம்.''

- அந்த சின்ன மஸ்தா பிரதமை முன் சத்தியம் செய்யப்பட்டது.

பூசையும் தொடங்கியது. சின்ன மஸ்தாவும் அடங்கினாள்.

'சண்டித்தனமே இனி பண்ணாது' என்று கம்பளத்தார் வாயால் சொல்லப்பட்டு சண்டியானாள்.

அதே சமயம் புலித்தேவருக்கு அவ்வப் பொழுது பாளையத்தில் மாறுவேடத்தில்

இருந்தபடி தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார் வேல்மணித்தேவர்.

ஊருக்குள்ளே திரிவதால் அரசாங்க நடைமுறைகளைத் தெரிந்து கொள்ள முடிகிறது. யூசப்கான், ஹெரான் வெலிங்டனுடன் திருவனந்தபுரம் குமரி நாட்டிற்கெல்லாம் சுற்றுலா சென்றுவிட்டான்.

அவனது காவற்படை மட்டும் ஊருக்குள் இருந்து கொண்டு விரட்டிக்கொண்டே இருந்தது.

நடுநடுவே கான் சாகிபால் தகவல்கள் ஜவான்கள் மூலம் கொண்டு செல்லப்படும். அதே வேல்மணித் தேவரும் இன்னும் சில விசுவாச படையினரும் வழியில் மடக்கிப் பிடித்து விடுவார்கள்.

வேல்மணித்தேவர் தன் வீட்டையே இந்த மாதிரி செயல்பாட்டிற்கான இரகசிய இடமாக வைத்துக் கொண்டிருந்தார். வெளியே அது இடிந்து கிடந்தாலும், உள்ளே அதன் ரகசிய சுரங்கப்பாதையும் உள் அறையும் மிக உதவியது.

ஒருநாள் இப்படித்தான், அரசருக்கு கடிதம் எழுதி செய்தி எடுத்துச் செல்ல உரிய வீரன் வரும்போது தருவதற்காக, மரப்பெட்டி ஒன்றில் பாதுகாப்பாக வைத்துவிட்டு வீட்டை விட்டு வெளியே வர, கம்மந்தான் படை சந்தேகப்பட்டு துரத்தியது.

தப்பிக்கப் பார்த்தும் முடியவில்லை. ஒருவனின் துப்பாக்கி அவர் பின் தோளைத் தாக்கியது.

சுருண்டு விழுந்தவரை காலன் கொண்டு சென்றுவிட்டான்.

அதன்பின் புலித்தேவராலும் பாளையத்தை மீட்கவே முடியவில்லை.

வெறித்தனமாய் செயல்பட்ட யூசப் கானுக்கும் ஆற்காட்டு நவாப் முகம்மதலிக்குமே மன வேறுபாடு ஏற்பட்டு, அவர் கான்சாகிபை தூக்கிலிட்டு அவன் உடலை கண்ட துண்டமாக்கி அந்த துண்டு பாகங்களை பாளையம் பாளையமாக ஊர்வலம் அனுப்பினார் என்கிறது வரலாறு.

புலித்தேவரும் எப்படி மரணித்தார், எங்கு போனார் என்று சரியாக தெரியவில்லை. அவர் விசாரத்தோடு சங்கர நயினார் கோயிலில் ஐக்கியமாகி விட்டார் என்பவர் சிலர். இல்லையில்லை, அவர் காட்டுப்பக்கம் போய் சன்யாசியாகிவிட்டார் என்பர் சிலர்.

மொத்தத்தில் பூமிப்பந்தை ஒரு பார்வையால் திருப்ப முடிந்த அளவு வீரர்களாக கருதியவர்கள் முடிவெல்லாமே பெரிய கேள்விக்குறியாகத்தான் உள்ளது.

இன்றைய நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் மரணத்தைப் போல... கேள்விக்குறிகள் அவர்கள் மரணத்தில் மட்டுமல்ல... அவர்கள் விட்டுச்சென்ற கஜானா செல்வங்களிடமும்தான்.

எல்லாம் சரி... இனி அதன் நிலை?

## 16

**ம**யானசண்டி கோவில் முன் நின்று கொண்டிருக்கிறார் முத்துராமலிங்கம். உடன் எவனோ ஒரு பண்டிதன். சமஸ்கிருத மந்திரத்தை துவேஷமாக உச்சரித்தபடி அந்த சிறு கோயிலைச் சுற்றிச்சுற்றி வந்து கொண்டிருந்தான்.

முத்துராமலிங்கத்தை ஒட்டி கம்பளத்தார் வம்சாவளியில் வந்த கிழவன். முன்பு பார்க்க குரூரமாக இருந்தவன் இப்பொழுது இளக்கமாய் தென்படுகிறான்.

அவனுக்கு அவ்வப்பொழுது முத்து ராமலிங்கம் ஆறுதல் கூறிக் கொண்டிருந்தார்.

"பயப்படாதய்யா... கொஞ்சநேரத்துல இந்த பண்டிதரே அந்தக் குறிப்பை எடுத்து தந்துடுவாரு. சத்யம் சத்யம்னு சாகாதே... உன் முன்னோருங்க சத்யம் செஞ்சு கொடுத்து வருஷம் முன்னூறு தாண்டியாச்சு. நாமளும் நிறைய பலிகளைக் கொடுத்துட்டதால கோவிலுக்கும் சக்தி குறைஞ்சு போச்சு. எதுக்கும் போகட்டும்னுதான் இந்த பூசை. புலித்தேவர் வராட்டி என்ன... வேல்மணித்தேவர் பேரன் நான் வந்தாலும் என் தாத்தா வந்தாலும் எல்லாம் ஒண்ணுதான். ஒண்ணும் ஆகாது. பயப்படாதே..." - ஆறுதலான ஆறுதல் அவ்வப்பொழுது அவனுக்கு சொல்லப்பட்டது.

வேதபண்டிதரும் பூசையை முடித்தார்.

"சீக்கிரம்... சீக்கிரம்..." பறக்கிறார் முத்து ராமலிங்கம்.

"மகன் எதுவும் சிக்கல் பண்ணா?" - கிழவன் கேட்கிறான்.

"வாயைக் கழுவு. அவன் கன் மகன். எப்படி சமாளிக்கணும்னு எனக்குத் தெரியும்."

"மகனை வந்து பீடத்துக் குறிப்பை எடுக்கச் சொல்லுங்களேன். வேல்மணித்தேவர் மாதிரியே உருவ ஒத்துமை... தோள்பட்டைல குண்டுபட்டு இறந்தவர் திரும்ப பொறந்து வந்திருக்காருன்னு நம்பறதுக்கு தோதா உங்க மகன் தோள்பட்டைல வடு எல்லாம் இருக்கு. அவரை வந்து கொஞ்சம் எடுக்கச் சொல்லாம்ல...?" - அவன் விடாமல் தொணதொணத்தான்.

"வாய மூடுய்யா... எனக்குத் தெரியும். அவன் பொழைக்கத் தெரியாதவன். கவர்மெண்டுக்கு இது போகணும்னு பெனாத்தறான்..."

- காதோரம் கடித்து துப்பிவிட்டு பண்டிதரைப் பார்க்க, அவர் பூசை முடித்து தூபதீபம் போட்டுக் கொண்டு உள்ளேசென்று, பதினோரு நமஸ்காரம் செய்து பின் பிரதமை உள்ள பீடத்தின் அடிப்பாகத்தில் பிரதமையை



...த்து குறிப்புத்தகட்டை வெளியில் எடுக்கும் ...குருக்களுக்கு நிறைய வியர்த்தது. எடுத்து ...முத்துராமலிங்கம் கைகளில் தந்தார்.

அந்தத் தகட்டைப் பார்த்தார்.

முகத்தில் வரிக்கோடுகள்.

அந்த பண்டிரோ வியர்வை கிறுகிறுப்போடு கோவில் வாசலின் இடிந்த படிமேல் அமர்ந்து விட்டார்.

"என்ன இது ஒண்ணும் புரியல... இந்த சாமி சிலை போல ஒரு படம்... இதுக்கு நேர் வடக்குல 1000 தப்படின்னு ஏதோ எழுதியிருக்கு... அதுகிட்ட சின்னதா ஒரு மலை அதுல பாம்புங்க... ஓ புத்துப்படமோ?"

புரிஞ்சுப் போச்சு... புரிஞ்சு போச்சு...

இங்க இருந்து 1000 தப்படில வடக்குப் பாகத்துல உள்ள பாம்புப்புத்துல புதையல் இருக்கு. பாம்புப்புத்து நம்ம தோட்டத்துலல்ல இருக்கு?

பக்கத்துல ஏதோ எழுதியிருக்கு... ஆனா சரியா தெரியலையே - அழிஞ்சமாதிரி இருக்குதே...

- முத்துராமலிங்கத்தின் முணுமுணுப்பை பிடித்துக் கொள்கிறான் கம்பளத்தான்.

"பாம்புப் புத்துலதாங்க இருக்கணும். புத்துமண் வெண்கலத்தையோ, மண்பாண்டத்தையோ அரிக்காது. அதோட பாம்புக்குப் பயந்து யாரும் அந்தப் பக்கம் போகவே மாட்டாங்க.

விவரமாத்தான் செய்திருக்காங்க. வாங்க போய்ப் பார்க்கலாம்.

- முத்துராமலிங்கம் போகிறார்.

"நில்லுப்பா..." - பண்டிதரிடம் இருந்து தடைக்குரல்.

"என்ன சாமி...?"

''அவசரம் வேண்டாம்... உடம்பு எரியுது. சொல்பரௌத்ரம் இங்க பாக்கி இருக்கு போல... சாந்தி செஞ்ச பின்னே போய்ப் பார்...''

''சாந்தியை நீங்க செய்யுங்க... நான் போய்ப் பாக்கறேன்'' உதாசீனம் நன்கு வெளிப்பட்டது அவரிடம். அதே சமயம் எதிரில் உள்ள சமாதி மேடுகளைத் தாண்டும்போது கம்பளத்தான் கால் வாரப்பட்ட மாதிரி கவிழ்ந்து விழுகிறான்.

''வேண்டாம், சகுனம் சரியில்லை... சமாதி ஆத்மாக்கள் மறிக்கறது... வேண்டாம்'' - பண்டிதர் கெஞ்சுகிறார்.

''சமாதியாவது ஆத்மாவாவது...?. கன்னிப் பெண்ணுங்க சமாதி. அப்புறம் கஜானால வேலை பார்த்தவங்க சமாதின்னு ஆளுக்கொரு கதை சொல்ற மண்மேடுய்யா இது. இந்த சாமிதான் பிரச்சனைன்னா இப்ப சமாதியுமா...?

அதோட புதையல் சுடுகாட்டுக்குள்ள இருந்தாதான் பயப்படணும். அந்த புத்து என் தோட்டத்துக்குள்ள இருக்கு. புதையல் என் இடத்துலேயே இருக்கு. இது தெரியாம நான் மயானத்தை சலிச்சுகிட்டிருந்துட்டேன். வெட்டி வேலை பார்க்காம நேரா விஷயத்துக்கு வரும்படியாயிடிச்சு.

இனியும் நான் தாமதிச்சா மனுஷனில்ல வாய்யா கம்பளத்தானே... வா...!''

-குப்புற விழுந்த கிழவனை உடன் அழைத்துக்கொண்டு கரைவேட்டி சரசரக்க அகலக்கால் வைத்து தன் தோட்டத்து வடமுனை நோக்கி நடந்தார் முத்துராமலிங்கம். எதிரில் சொல்லி வைத்த மாதிரி வருகிறான் மயானத்தான். அவனோடு பார்வையிலேயே எதையோ பேசுகிறார். அவன் புரிந்து கொள்ள நடை வளர்கிறது. போர்வெல் போடுபவன் புற்று இடத்திற்குப் பக்கத்தில்தான் போர் போட வேண்டும் என்றான். அப்படிச் செய்தால் பொன்னாய்க் கொட்டும் இந்தத் தோட்டமும் பொன் தோட்டமாகும் என்றான்.

இப்பொழுது மட்டுமென்ன... இது பொற்காசுத் தோட்டம்தான்... பொற்காசுத் தோட்டம் தான்...

- கையில் தகடு மின்ன மனதில் எண்ணம் மின்ன தோட்டத்துக்குள் நுழைந்தவர் அம்புலியைத் தேடினார்.

''அம்புலி... அம்புலி...''

''அவரு நம்ம தம்பியோட எங்கையோ போனாருங்க...'' பதில் ஒரு புல்வெட்டும் பெண்ணிடம் இருந்து வருகிறது.

''அவன் தோட்ட வேலை பாக்க வெச்சிருக்கேனா இல்லை, ஊர் சுத்தவா...? சரி சரி தோட்டத்துக்குள்ள நான் சொல்ற வரை யாரையும் உள்ள விடாதே... என் மகனா இருந்தாலும் சரி... வா கம்பளம்...''

- பரபரத்து உள் நுழைந்து பம்ப்செட் ரூமின் கோண மூலையில் மண்டிக்கிடக்கும் கடப்பாரை மண்வெட்டியைத் தூக்கிக் கொண்டு வடக்கு மூலை நோக்கி நடந்தார்.

- வழியெல்லாம் பொசிந்த கீரைச் செடிகள். தோல் செருப்பு நசுக்கச் சிதைகின்றன. மூலையில் ஆளுயரப் புற்று. சீனியம்மாள் முதல் குடும்பமே குல தெய்வமாகக் கருதி வழிபடும் புற்று மஞ்சளும் குங்குமமுமாக சிதறிக் கிடக்கும் கூம்பு கூம்பான முனைகள். அங்கும் இங்குமாய் உள்ளங்கை நுழைய முடிந்த அளவில் துவாரங்கள். அவ்வப்போது கண்ணில்படும் நாகங்களுக்கான நாட்பட்ட வீடு.

பல தலைமுறையாக இருக்கிறது என்று மட்டும் தெரியும். பெரிய பெரிய மழையிலும் கரையாமல் ஒரு சின்ன குன்றாகவே மாறிவிட்டது. முத்துராமலிங்கம் குடும்பம் மட்டுமல்லாமல் ஊரே

கூட ஆடி வெள்ளிக்கிழமை வந்து பூஜித்து விட்டுப் போகும். அதில் 12 அடி நீளமுள்ள ஒரு நாகம் இருப்பதை பலரும் பார்த்திருக்கின்றனர். அப்படிப்பட்ட புற்றை அழித்துப் பார்க்கும் ஆவேசத்துடன் நெருங்கி நிற்கிறார்.

''கம்பளம் வா... சீக்கிரம் வா! புதையலை எடுத்த பிறகு மூச்சு விடப்படாதுய்யா. கொஞ்ச நாளைக்கு பிச்சைக்காரன் மாதிரியே இரு. அப்பால மெல்ல செலவு செய்யலாம். வீடு வாசல் வாங்கலாம் என்ன?''

''சரிங்க.''

''நீ அந்தப் பக்கமா இடி. நான் இந்தப் பக்கமா இடிக்கறேன். பாம்புங்க வந்தா மண்வெட்டியால ஒரே போடா போட்டிடு. ஒரு பாம்பைக்கூட விட்றாதே. விட்டா நல்ல பாம்புங்க தேடி வந்து கடிக்கும்பாங்க.''

''தெரியுங்க... கவலைப்படாதீங்க... நான் பாத்துக்கறேன்.''

அவன் ஊக்கம் அளிக்க, அவர் புற்று முன் சென்று நிற்கிறார். வேட்டியை மடித்து வாளிப்பாகக் கட்டிக் கொள்கிறார்.

''கைல வெண்ணையை வெச்சுகிட்டு நெய்க்கு அலைஞ்ச முட்டாப்பயலா ஆயிட்டேனே கம்பளம்...''

சர்ரக்... சர்ரக்... சர்ரக்... பேச்சோடு கடப்பாரை புற்றின் அடிப்பாகத்தில் ஊடுருவித் துளையிட மேல் கூம்புகள் உடைந்து சரியத் தொடங்கின.

புஸ்ஸ்... புஸ்ஸ்... கர்ண கொடூர சப்தமுடன் உள்ளிருந்து ஒரு கருநாகம் சீற்றமுடன் எட்டி வெளியே பார்க்கிறது.

ஒருவிநாடி இருவருக்குமே குலை நடுங்கிப் போகிறது. சில அடிகள் பின் சென்றனர்.

* * *

''அப்பா வந்தாரா?'' மயான கோயிலில் கேட்டுக் கொண்டிருந்தான் அருள்மணி. அந்த வேத பண்டிதர் அவனை முறைத்தபடி பதில் தருகிறார்.

''போ... நீயும் போ... இத்தனை பேராசைக் காரனை நான் பார்த்ததில்லை... போ, நீயும் அந்தத் தோட்டத்துக்கு போ... நான் வேதம் படிச்ச பண்டிதன். காட்டுல நடக்கற சாவு காரியம் பண்ற பண்டிதன். தெரியாத்தனமா உன் அப்பன் பேச்சைக் கேட்டுட்டேன். இப்ப வருத்தப் படறேன். எல்லாப் பலியையும் முடிச்சுட்டேன் னான். அவன் பலின்னு சொன்னது ஆடு, மாடுன்னு நினைச்சேன். ஆனா நரபலியே கொடுத்திருக்கான். இங்க மந்திரம் சொல்லும் போதே அது எனக்கு தெரிஞ்சு போச்சு. உடம்பு எரியுது. பொறுத்துப் போப்பான்னேன். கேக்கல. போயிட்டான். இது எதுல போய் முடியுமோ தெரியல.

சர்ப்ப மேட்டைப் பொடியாக்கி புதைய லெடுக்க போயிருக்கான் உன் அப்பன். நீயும் போ...''

- படபடவென்று ஆதங்கத்தில் சீறினார் பண்டிதர். அம்புலி இடைபுகுந்து கத்துகிறான்.

''தம்பி... அதோ நம்ம தோட்டத்துல பாம்பு புத்துகிட்ட அப்பா மாதிரி தெரியல...''

''ஆமாம்...''

''அப்ப இங்க வந்து பீடத்துல இருந்த அந்த ரகசியத்தைப் பாத்து தெரிஞ்சுட்டாங்க போல... வாங்க போவோம்...''

- இருவரும் அவர்கள் தோட்டம் நோக்கித் திரும்ப எதிரில் மயானத்தானின் திடீர்ப் பிரவேசம்.

''அங்க போகாதீங்க...'' - மறித்தான்.

''நவுருடா... எங்களை போக வேண்டாம்னு சொல்ல நீ யாருடா...'' அம்புலி முன் சென்று எகிறினான்.

"முதலாளி உத்தரவு..."

"மண்ணாங்கட்டி வழியைவிடு..."

"வேண்டாம், என்னைக் கொலைகாரனாக் காதீங்க..."

"ஏய் என்ன பெரிய ரவுடியாட்டம் பிலா விடறே...?"

"ரவுடியாட்டமில்ல... ரவுடியேதான் நான். உங்கப்பா எடுக்கப் போற புதையலுக்காக உளறின எங்கண்ணனையே பலிகொடுக்கச் சம்மதிச்சவன் நான்."

"உங்கண்ணனா...?"

"ஆமாம்... நீங்க அன்னிக்கு செத்துட்டதா சொன்னது என் அண்ணனைப் பார்த்து. நாங்க இரட்டையரா பொறந்தவங்க. இரண்டு பேரும் ஒண்ணுபோல இருப்போம்.

அருள்மணிக்கு அடுத்த நொடியே எல்லாம் புரிந்து விடுகிறது.

"உன்னை காட்டிதான் நான் பார்த்ததை பிரமைன்னு சொன்னாரா எங்கப்பா. சபாஷ்! அண்ணன் சாவையே நீ சாதாரணமா எடுத்துக்கிட்டு எங்கப்பாகூட நிக்கறேன்னா நீ பயங்கரமான ஆளாத்தான் இருக்கணும்."

"தெரியுதுல்ல... அங்க போகாதீங்க போசாம உட்காருங்க...'

"உட்காரலைன்னா...?"

"உட்கார வைப்பேன்..."

- இருவரிடையே பேச்சு வளர்ந்து இருவரும் மோதிக் கொள்வார்கள் என்று ஆன சமயம் தோட்டத்துக்கும் மயானத்துக்குமான ஒற்றையடிப் பாதையில் ஓடிவந்து கொண்டிருந்தாள் தோட்டத்தில் புல் வெட்டிக் கொண்டிருந்த பெண்.

"ஐயா... ஐயா..." நெருங்கினாள்.

"என்ன புள்ள..."

"நம்ம ஐயாவையும், கம்பளத்தானையும் நல்ல பாம்பு கடிச்சிடிச்சுங்க. வாய்ல நுரை ததும்ப விழுந்து கிடக்கறாங்க. வாங்கய்யா... வந்து பாருங்க..."

- அருள்மணி உடனே பாய்ச்சல் எடுக்கிறான்!

எல்லாமே முடிந்து விட்டது.

புதையல் ஆசை விபரீதத்தில் முடிந்து முத்துராமலிங்கமும் கம்பளத்தானும் உயிரையே விட்டுவிட்டனர்.

நிலம் பார்க்க விரைப்பாக மாலைகளுடன் கிடக்கின்றனர். தோட்டத்தில் புற்று முழுவதுமாய் தரைமட்டமாகிக் கிடக்கிறது. ஆனால் எதிர் பார்த்தபடி புதையல்தான் இல்லை.

எந்தக் கணக்கு தவறானது?

எல்லோரும் அழுது கொண்டிருக்க, அம்புலியை மட்டும் இந்தக் கேள்வி குடைந்து கொண்டேயிருக்கிறது.

சோகச்சித்திரமாக அமர்ந்திருக்கும் அருள் மணியை நெருங்கிக் காதைக் கடிக்கிறாள்.

"என்ன தம்பி இது... எல்லா கணக்கும் பொய்யாப் போய் கஜானா புதையல் எங்க இருக்குன்னே தெரியாம போயிடிச்சே... உங்க தாத்தா மரப்பெட்டி தகவல், பீடத்துக் குறிப்பு எல்லாம் காதுல பூசுத்தலா?"

"தெரியல அம்புலி... ஒண்ணும் தெரியல... அந்த தகட்டுல இன்னொரு குறிப்பும் இருக்கு... கவனிச்சியா..? அது அழிஞ்சு போயிருக்கு. அதனால இங்க எங்கேயோதான் அந்தக் கஜானா காசுங்க இருக்கு.

ஆனா எங்கன்னுதான் தெரியலை..."

- இருவரும் கிசுகிசுத்துக் கொள்கின்றனர்.

"தம்பி காட்டுக்கு சொல்லிட்டிங்களா?" - ஒரு உறவுக்காரர் கேட்கிறார்.

''காட்டுல இல்லிங்க... முத்துராமலிங்கம் ஐயாவுக்குத்தான் தோட்டம் இருக்கே. அதுலதான் நல்லடக்கம். என்ன அருள்மணி...?''

''பெரியவங்க விருப்பம்.''

''விருப்பம் மட்டுமில்ல... அதுதான் நம்ம குடும்ப வழக்கம்.''

''நல்லபடியா நடக்கட்டும்...''

- அருள்மணி சொன்ன மறுநொடியே சங்கு ஊதித்தள்ள, மணி சப்தமிசைக்க முத்து ராமலிங்கத்தின் சாவுச் செய்தி சுற்றுப்பட்டு கிராமத்தையே இழுத்து வந்துவிட்டது.

அருள்மணியின் அதிகாரிகளும் வந்திருந் தனர். அதில் ஒருவர் அவனை தனியே பிரித்து அழைத்துச் சென்றார்.

''என்ன அருள்மணி... புதையல் வேட்டை, சாமி பலி வாங்கிடிச்சு அப்படி இப்படின்னு காதுல விழுதே... இதெல்லாம் என்ன? அப்பா எப்படிச் செத்தாரு...''

- அருள்மணி அந்த அதிகாரியின் கைகளைப் பிடித்துக் கொண்டான். நேம் பேட்ஜில் வேங்கைராஜன், தொல்பொருள் ஆய்வு என்கிற எழுத்துக்கள்.

''வாங்க சார் சொல்றேன்...'' - அவர் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு தோட்டத் துக்குச் சென்றான்.

வழியிலேயே எல்லாவற்றையும் சொல்லி முடிக்கிறான். அவர் எல்லாவற்றையும் கேட்டு விட்டு கவலைப்படுவதா, இல்லை சந்தோஷப் படுவதா என்று தெரியாதபடி திணறுகிறார்.

''இப்ப அந்த டிராயிங், ஓலைக்கடுதாசி எல்லாம் எங்க?''

''பத்திரமா இருக்கு சார். அது பிரச்சினை இல்ல. கஜானா ட்ரெஷர்தான் எங்கன்னு கண்டு

பிடிக்கணும். பாம்பு புத்துகிட்டதான் எங்கை யாவது இருக்கணும். பீடத்து குறிப்புல ஒரு சில அடையாளங்கள் மங்கி அழிஞ்சு போச்சு...''

''ஆர் யூ ஷ்யூர்...''

- அவர் கேட்கும்போது கணங் என்கிற சப்தம் தோட்டத்துப் புற்று அருகில் முத்துராமலிங் கத்தைப் புதைக்கத் தோண்டும் குழியிலிருந்து கேட்கிறது.

- ஓடுகின்றனர்.

- குழியில் தாழி போன்ற அந்தப் பானை...!

அன்று மயான்த்தான் புதைத்தது. இன்று அவன் வம்சாவளியாலேயே தோண்டப்பட வெளியே தெரிய வருகிறது.

''நான் சொல்லல...'' - அருள்மணி சாவு துக்கத்தையும் மறந்து குழிக்குள் குதிக்கிறான். கடப்பாரை பட்டு துளையிட்ட பாகத்தில் துவாரம். அந்தத் துவாரம் வழியாக வெளிவந்து விழுந்து கிடக்கும் பொற்காசுகள்.

அதில் சூரிய ஒளி செய்யும் ஜாலம்!

மயானத்தான் முகத்திலும் அதைப் பார்க்க பரவசம். ஆனால் பாம்புக்கடி பட்டு பரலோகம் போய்ச் சேர்ந்த பேராசைக்காரர்களைப் பார்த்ததில் பயமும் வந்து விட்டிருந்தது.

அந்த பயம் மாறாதபடி சொன்னான்: ''தம்பி... இந்தப் புதையல் கதை பூரா எனக்குத் தெரியும். அந்த நாள் வேல்மணித்தேவரய்யா சொல்ல என் முப்பாட்டன் புதைச்சது. அவரோ இல்ல புலித்தேவ மகராசாவோ வந்து வாங்கிக்க வேண்டியது. இந்த நாள் எங்களாலேயே தோண்டி எடுக்கப்பட்டு வெளிய தெரியுது.

என் வரைல நீங்க வேற அந்த வேல் மணித்தேவரய்யா வேற இல்ல...! தோள்ல குண்டு

...ராஜன்னு...

நீங்க ஆசைப்பட்டபடியே இது அரசாங்க சொத்து. அரசாங்கத்துக்குத்தான் போகப் போகுது இனி எனக்கு வேலை இல்ல... அண்ணனையே பலி கொடுத்துட்டேன். அந்தப் பாவத்துக்கு அந்த சாமிகிட்ட போய் மன்னிப்புக் கேட்டுக்கப் போறேன்...''

- அவன் பேசியபடி கரகரவென்று அழவும் செய்தான்.

''என்ன அருள்மணி சொல்கிறான் இவன்...?'' - அதிகாரி முகத்தில் வியப்பலைகள்.

''அவன் யூகத்தைச் சொல்றான் சார். பட் டோட்டலி எல்லாமே கோஇன்சிடென்ஸ். கல்வியறிவில்லாதவங்க இப்படித்தானே சார் சிந்திப்பாங்க...!''

அவன் கருத்துக்கு மறுப்பை வானம் திடீரென்று மழை மேகத்தை கூட்டி இடியை முழங்கியது.

இதெல்லாம் கோ இன்சிடென்ட்ஸ் இல்ல தம்பி... காலம் நடத்தும் விளையாட்டு என்று வானம் மின்னலை சொடுக்குகிறதோ?

மழை நீர் தரை இறங்குகின்றன.

அருள்மணியின் தோள்பட்டை வடுவை ஏதோ கறை என்று கருதி கழுவப் பார்க்கின்றன. முடியவில்லை.

எது நிஜம்?

காலம் சொல்வதா...? இல்லை அருள் மணியின் கருத்தா? எது நிஜம்?